# The Skanda
## 116 th Anniversary Souvenir




# J/ Skandavarodaya College
## Kandarodai, Chunnakam.
## 2010

உ

சிவமயம்

# THE SKANDA

## 116TH Anniversary Souvenir

### கடவுள் வணக்கம்

**திருமந்திரம்**

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினையின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே

பின்னை நின்றென்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ்செய்யு மாறே.

– *திருமூலர்*

**J/ Skandavarodaya College**

**Kandarodai, Chunnakam.**
**2010**

# செயலாளரின் வாழ்த்துச் செய்தி



புகழ்பூத்த கல்லூரியாகிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி மிக நீண்டகாலமாக உயர்ந்த தரத்தில் சமூகத்துக்கு உகந்த தலைவர்களைத் தரக்கூடிய மாணவர் சமூகத்தை உருவாக்கிய பெருமிதம் கொண்ட நிறுவனமாகும்.

நகர்ப்புறக் கல்லூரிகளுக்கு இணையாக பொருளாதாரத்திலே பின்தங்கிய மாணவர்களுக்கு சமூக முன்னேற்றத்தின் ஏணியாக பெயர் சொல்லும் ஆசான்களை தன்னகத்தே கொண்ட கல்லூரியாக மிளிர்ந்த கல்லூரி.

மாணவர்கள் விடுதிகளில் தங்கிக் கல்வி பெறமுடியாத நெருக்கடி நிலைமையினால் இடைக்காலத்தில் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. 90களின் பின்னர் கல்லூரி மீண்டும் உயர்ந்து உயர்ந்து தற்போது இசுறு பாடசாலைச் செயற்றிட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட ஒன்றாக இருக்கின்றது.

கல்லூரி தனது செயலாற்றுகைகளையும் கல்விப் புலத்தில் முன்னிற்கும் பாங்கையும் பாடசாலைச் சமூகத்தினருக்கு வெளிப்படுத்தும் நோக்கில் "ஸ்கந்தா" என்னும் சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டுப் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மலரை வெளிக்கொணர்வதற்கு முன்னின்று உழைத்த அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கு எனது மனம் கனிந்த பாராட்டுக்கள்.

"வாழ்க ஸ்கந்தவரோதயா என்றும் உயர்வுடன்"


**இ. இளங்கோவன்**
*செயலாளர்,*
*கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு,*
*வட மாகாணம்,*
*திருகோணமலை.*

# Tutorial Staff - 2010



# கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி




ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் மலரான "ஸ்கந்தா" என்ற என்ற மலர் வெளிவருவதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன். மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதுடன் மட்டும் நின்று விடாது அவர்களது பல்துறை சார்ந்த ஆற்றல்களை வளர்த்தெடுப்பதும் அவசியமானதாகும்.

இவ்வகையில் மலர் வெளியீடுகள் மாணவரின் கவிதை, கட்டுரை, சிறுகதை, முதலியவற்றை எழுதும் ஆற்றலை ஊக்குவித்து வளர்த்தெடுப்பவை. பாடசாலைப் பருவத்தில் இத்தகைய மலர்களில் ஆக்கங்களை வெளியிட்ட மாணவர்களிற் பலர் பிற்காலங்களிற் சிறந்த எழுத்தாளர்களாகப் பரிணமித்துள்ளயையும் நான் அறிவேன்.

இவ்வகையில் இம்மலர் தொடர்ந்து வெளிவரவேண்டுமென எலலாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**செ. குபேரநாதன்**
*கோட்டக் கல்விப் பணிப்பாளர்,*
*உடுவிற் கோட்டம்.*

# அதிபரின் செய்தி



ஸ்கந்தவரோதயக் கல்லூரி மிகப் புனிதமான அறிவாலயம். பல ஆயிரம் ஏழைகளுக்கு வாழ்வளித்த கலைக்கூடம். ஆளுமை நிறைந்த சமுதாயத்தை இம்மண்ணில் உருவாக்கிய வரலாற்றுப் பாடசாலை. இப்பாடசாலையை ஸ்தாபித்த பெரியார் கந்தையா உபாத்தியாயரைச் சமூகம் என்றும் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளது. கல்லூரியின் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்த பரோபகாரி டாக்டர் சுப்பிரமணியம் (P.S) அவர்களின் பணி போற்றுதலுக்குரியது. இக் கல்லூரியின் வளர்ச்சியில் அயராது தொண்டாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் வணங்குகிறேன், வாழ்த்துகிறேன். இன்னும் இக் கல்லூரியின் மேன்மைக்காக உழைக்கும் ஆசிரியப் பெருமக்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஊழியர்கள் அனைவரது பங்களிப்பாலும் கல்லூரி உயர்வு கண்டு வருகிறது.

இக் கல்லூரியின் வரலாற்றில் 2009ஆம் ஆண்டு முதல் சகல வளமும் கொண்ட பூரணத்துவப் பாடசாலை என்ற கொள்கையில், அபிவிருத்திக்காகத் தெரிவு செய்யப்பட்ட இசுறு பாடசாலையாக எமது பாடசாலை விளங்குவது சிறப்புக்குரியது. எங்கள் கல்லூரியில் தற்போது கற்றுவரும் மாணவர்களிற் பெரும்பான்மையான மாணவர்கள் மிகவும் வறுமைக்குட்பட்ட குடும்பத்தைச் சார்ந்தவர்கள். தாய், தந்தையை இழந்த மாணவர்கள் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கற்று வருகிறார்கள். இச்சூழலில் மாணவரின் கற்பித்தற் பணிமட்டுமன்றி மாணவரது உளநிலையைச் சீர் செய்யவேண்டிய பாரிய கடமையும் ஆசிரியர்களைச் சார்ந்துள்ளது.

பொதுவாக இன்று உயர்தர மாணவர்கள் தொடர்பாக பல்வேறு செய்திகள் ஊடகங்களில் வெளிவருவதைக் காணலாம். ஆனால் கிராமியப் பண்பாட்டுச் சூழலில் உள்ள கல்லூரிகளில் கற்கும் மாணவர்களின் பண்பாடு மெச்சத்தக்கதாகவுள்ளது. என்னைப் பொறுத்தவரை ஸ்கந்தாவில் கற்கும் மாணவர்கள் மிகப் பண்புள்ளவர்களாக உள்ளமையைப் பெருமையோடு சொல்வதில் ஆனந்தமடைகிறேன். எங்கள் கல்லூரி வருடாந்த மலர் ஆவணமாக வெளியிட அயராது உழைத்த ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இதயபூர்வமான நன்றி கூறி அமைகிறேன்.

**ஆறு. திருமுருகன்**
*அதிபர்*

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



"போற்றி செய்வோம் எங்கள் கல்லூரித் தாயைப்
பொலிவுடன் மாணவர் கூடி"

என்ற எமது கல்லூரிக் கீதத்தின் பொருள் பொதிந்த வாழ்த்துக்களுடன் எமது கல்லூரியின் வருடாந்த மலரான "ஸ்கந்தா" வெளிவருவதையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன். இம்மலர் வெளியிடுவதற்குப் பெரும் உதவிகளை ஆற்றிவரும் எமது கல்லூரிப் பழைய மாணவர்களையும், நிர்வாகத்தினரையும், ஆசிரியப் பெருந்தகைகளையும் வாழ்த்துவதுடன் எமது கல்லூரி மீண்டும் "ஒறேற்றர் யுகம்" படைக்கச் சகலரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமெனவும், பழைய மாணவர்களும் மற்றும் ஸ்கந்தா சமூகமும் நிர்வாகமும் ஒன்றிணைந்து சுமுகமான உறவு, புரிந்துணர்வு நீடித்துக் கல்லூரி அன்னை மீண்டும் தனது பழைய நினைவுகளை மீட்க தங்களை அர்ப்பணித்துப் பணிபுரிய எல்லாம்வல்ல "ஸ்கந்தப் பெருமான்" அருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

**சிவகுரு மகேந்திரன்**
*பிரதி அதிபர்*

# MESSAGE OF FELICITATION FROM THE EMERITUS PRINCIPAL OF SKANDAVARODAYA COLLEGE



It is my joy and privilege to convey my message of felicitation to the school magazine. I deem to have the honour to issue the message of felicitation to my beloved school. From the humble beginning as Kandarodai English Institute, it has grown in to a pinnacle of pre-eminence, due to the untiring efforts of the founder, the manager, the old students and the skanda society.

After a lapse of 30 years, a magazine was released during my tenure of office in 2005. It gives me immense pleasure to witness that second magazine is being released during Mr.Aru. Thirumurugan's period to commemorate the 116th anniversary. Skandavarodaya College has always been of foremost interest in my heart. I have spent 23 golden years from 1986 to 2008 at skanka. I remember and recollect those days with pride and pleasure. I wish and pray that the blessings of Lord Skandan ever be showered upon the college.

**K. Sivaji.** **M.A (English), B.A. (Hons), Dip.in.Edu.**

# ஆசிரியர் கழகத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



எமது கல்லூரியின் மலரான "ஸ்கந்தா" மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாணவர்களின் படைப்பாற்றலை வெளிப்படுத்தக்கூடிய வகையில் பல்சுவை ஆக்கங்களைத் தாங்கி இம்மலர் வெளி வருகின்றது. கல்லூரி மாணவர்களின் சாதனைகளையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்தும் வகையில் இம்மலர் அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

இம்மலர் தொடர்ந்து வெளிவர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**சி. சதீஸ்**
*தலைவர்,*
*ஆசிரியர் கழகம்,*
*யா/ ஸ்கந்தவரோயதக் கல்லூரி.*

# கொழும்பு நலன்புரி சங்கத் தலைவரின் வாழ்த்து



யாழ். மாவட்டத்தில் பழமையும் பெருமையும் மிக்க உன்னத கல்லூரிகளில் ஒன்றான புகழுடன் விளங்கும் எம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி இவ்வருடம் 116ஆவது ஆண்டில் காலெடுத்து வைக்கும் இத்தருணத்தினைக் கொண்டாடு வதைக் குறித்துப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கொழும்பு வாழ் பழைய மாணவ நலன்புரிச்சங்க சார்பில் எமது ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் தேவைகளை உணர்ந்து பலவகைகளில் உதவியுள்ளோம். இனிவரும் காலங்களிலும் எம் கல்லூரியின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்திச் சேவையாற்றக் காத்திருக்கின்றோம்.

இத்தருணத்தில் கல்வி, கலை மற்றும் விளையாட்டுத் துறைகளில் சாதனை படைத்து வெற்றிகளீட்டிய எம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்களுக்கு வாழ்த்துக்களைக் கூறி, எதிர்காலங்களிலும் மென்மேலும் பல சிறப்புக்களையும், சாதனைகளையும் படைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து, இக் கல்லூரியின் வளர்ச்சிக்காக இக்கட்டான சூழ்நிலைகளிலும் தம்மை அர்ப்பணித்துத் திறம்பட சேவையாற்றிய அதிபர் அவர்களையும், ஆசிரியர்களையும் மற்றும் ஸ்கந்தாவின் புகழை மேலும் மெருகூட்டும் மாணவச் செல்வங்களையும் இந்நன் நாளில் நன்றியோடு நினைவுகூர்ந்து கொழும்பு வாழ் ஸ்கந்தவரோதய பழைய மாணவ நலன்புரி சங்க சார்பிலும், என் சார்பிலும் விழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.


**சோ. சிறீஸ்கந்தராஜா**

*(பொறியியலாளர்)*

*தலைவர், ஸ்கந்தவரோதய நலன்புரிச் சங்கம், கொழும்பு .*

*N(A) 1060*

# 'உண்மையே உயர் அறம்'



"எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு"

உன்னத கல்லூரிகளில் 'ஸ்கந்தா' கல்விக் கோயிலாக மிளிர்கின்றது. சரித்திரப் புகழ்பெற்ற கந்தரோடைக் கிராமத்தில் இருக்கும் எங்கள் கல்லூரிக்கு 'இசுறு'த் திட்டத்தின் கீழ் மூன்றுமாடிக் கட்டடம் அமைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

கல்வி என்பது மூளைக்குள் பல விடயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதல்ல. அப்படித் திணிக்கப்படும் அந்த விடயங்கள் வாழ் நாள் முழுவதும் ஜீரணமாகாமல் தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருக்கும் தற்போதைய யுகம் விஞ்ஞான தொழில்நுட்ப யுகம் என்பதனை நாம் அறிவோம். அதற்கேற்ப விஞ்ஞானத்தை, தொழில்நுட்ப அறிவை வளர்ப்பதற்கு கல்விக்கூடங்கள் பாடத் திட்டங்களில் முன்னுரிமை வழங்கவேண்டும்.

வாழ்க்கையை உருவாக்கக்கூடிய மனிதனை, மனிதனாக்கக் கூடிய நல்ல ஒழுக்கத்தை, வளர்க்கக்கூடிய கருத்துக்களைக் கிரகித்து, அவற்றை நாம் நம்முடையவையாக்கிக் கொள்வோம். பலதரப்பட்ட கஷ்டங்களுக்கு மத்தியில் ஒப்பற்ற சேவை ஆற்றிவருகின்ற அதிபர் ஆறு. திருமுருகன் அவர்களுக்கும், ஒத்தாசை வழங்கி வருகின்ற ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் எங்கள் நன்றிகளும் நல்லாசிகளும்.

எங்கள் கல்லூரி பழைய மாணவர்கள் வேற்றுமையில் ஒற்றுமையைப் பேணிக்காத்து, சொல்லும் செயலும் ஒருங்கிணைந்து, பாடசாலை வளர்ச்சிக்கு அயராது உழைக்கவேண்டுமென எல்லாம் வல்ல 'ஸ்கந்தக் கடவுளை வேண்டி நிற்போம்.

இவ்வகையில் இம்மலர் தொடர்ந்து வெளிவரவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**சு. பரமநாதன்**
*தலைவர்,*
*பழைய மாணவர் தாய்ச்சங்கம்.*

# Students Association Colombo
# Presidents Message



It is with great pride and pleasure that I write this short message, for the souvenir for 2010. Lot of time & effort has gone into in the preparation and printing of this souvenir and my sincere thanks and appreciation goes out to all those responsible, for a job well done.

It is heartening to see, in strength and in numbers, the grown of the association and the fine sense of comradeship that presently exists amongst the members and their families. As always the members of the Colombo branch has risen to the occasion and contributed towards the school in many ways. To name a few :

- Orators Scholarships — 2009 – Five (05) Scholarships<br>2010 – Four (04) Scholarships
- Higher education Grants — 2019 – Two (02) University Students
- Special Functions<br>Centenary celebrations : Anniversary of Late Mr. V. Sivasubramaniam – Former Principal. Memorial service for our much loved "Math's master" the late Mr. T. Sivasubramaniam.<br>(The school Principal Mr. Aru Thirumurugan was the guest of honor.)

I am certain that this fund raising project too will be a tremendous success due to the excellent sprint of comradeship that exists and help us generate much needed funds, to further assist to uplift the standards in education, sports & discipline.

On behalf of The Committee and members of the OSA Colombo, I take this opportunity to wish the Principal, Staff & students of Skanda, all the very best in all their future endeavors.

**S. Pathmanathan**
Hony. President

# மலராசிரியரின் உள்ளத்திலிருந்து

பாடசாலை என்பது மாணவரின் கல்சவிச் செயற்பாடுகளுக்கு உதவும் இடமாக மட்டுமன்றி அவர்களிடம் மறைந்துள்ள பல்துறைசார் ஆற்றலை இனங்கண்டு விருத்தி செய்யும் இடமாகவும் உள்ளது. இதனால் அவர்களது ஆற்றல்களை வளர்த்தெடுக்கும் களங்களை வழங்குவனவாகக் காலைக் கூட்டங்கள், மன்ற நிகழ்வுகள், பல்வேறு போட்டிகள், மலர் வெளியீடுகள் என்பன தொடர்ந்து நடத்தப்படுகின்றன. இவற்றுள் மலர் வெளியீடு என்பது ஒரே நேரத்தில் பெருந்தொகையான மாணவர்களுக்குத் தமது திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பை வழங்குவதாக உள்ளது.

இவ்வகையில் எமது கல்லூரியின் வருடாந்த மலரான வூாந ளுமயனெய மலரை உங்கள் முன் சமர்ப்பிப்பதிற் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு நிகரான திறமை கொண்ட மாணவர்கள் கிராமப்புறப் பாடசாலைகளிலும் உள்ளனர் என்பதை இம்மலரைப் படிப்பவர்கள் உணர்ந்துகொள்ள முடியும். இம்மாணவர்களின் திறமைகள் அகில இலங்கை ரீதியிலும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவை என்பதற்கு இவ்வாண்டு தமிழ்ச் சிறுகதைப் போட்டியில் மாகாணமட்டத்தில் முதலிடம் பெற்றுத் தேசிய மட்டப் போட்டிக்காகக் காத்திருக்கும் வி.திவாகரனும், போதைப்பொருள் தொடர்பாகக் கல்வியமைச்சினால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் தேசிய மட்டத்தில் பரிசுபெற்ற வி. சுலக்ஷனும் ஆதாரங்களாக உள்ளனர்.

பாடசாலைப் பருவத்தில் அங்கு வெளியிடப்படும் சஞ்சிகைகளில் எமது எழுத்துத் திறமையை வெளிப்படுத்திய மாணவர்களிற் பலர் பிற்காலத்தில் புகழ்பெற்ற எழுத்தாளர்களாக விளங்கியுள்ளனர். அவ்வகையில் இம்மலரில் இடம்பெற்ற ஆக்கங்களை எழுதிய மாணவர்களிற் சிலராவது எதிர்கால இலக்கிய வளர்ச்சிக்குத் தமது பங்களிப்பை நல்குவர் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இம்மலரை வெளியிடவேண்டும் என்று எப்போதும் எம்மை ஊக்குவித்தவர் எமது கல்லூரி அதிபர். அதற்கான நிதியுதவியை வழங்கியவர்கள் புலம்பெயர் நாடுகளிலம் வாழும் எமது பழைய மாணவர்கள். இம்மலருக்குத் தேவையான வாழ்த்துரைகளையும் ஆக்கங்களையும் தந்துதவியவர்கள் கல்வித் திணைக்களத்தையும் பல்வேறு துறைகளையும் சார்ந்த அறிஞர்கள், ஆசிரியர்கள், கல்லூரி மாணவர்கள். மலரைச் சிறப்புற அச்சிட்டுத் தந்தவர்கள் அன்ரா பதிப்பகத்தினர். வர்கள் அனைவருக்கும், ஒத்துழைப்பு வழங்கிய ஏனையவர்களுக்கும் மலர்க்குழுவின் சார்பில் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மலராசிரியர்**

## மலர்க்குழு

- திரு. ஆறு. திருமுருகன் (காப்பாளர்)
- திரு. P. மகாலிங்கசிவம்
- திரு. K. ஆதித்தன்
- திரு. K. கஜேந்திரன்
- திருமதி. N. சிவபாலச்சந்திரன்
- திருமதி. J. சற்குணநாதன்
- திருமதி. R. தனஞ்சயன்
- திருமதி. D. குயின்ரன்
- திருமதி. M. கிருபாகரன்
- திருமதி. M. பஞ்சாட்சரலிங்கம்

## உளம் நிறைந்த வாழ்த்துக்கள்!



எமது கல்லூரியின் அதிபராக இருந்து கல்லூரி பெரு வளர்ச்சி பெற உழைத்ததுடன்
வலயக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வுபெற்று
இன்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் என்னும்
மகோன்னத நிலையை அடைந்த

**உயர்திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்களை**

ஸ்கந்தா அன்னையின் சார்பில்
உளப்பூர்வமாக வாழ்த்துகிறோம்.
மேலும் மேலும் பதவி உயர்வுகள் பெற்று
பல்லாண்டு காலம் வாழ்க!

# பொருளடக்கம்

வாழ்த்துச் செய்திகள்


| | பக்கம் |
|---|---|
| கவிதையென்னும் கலை | 1 |
| மனிதாபிமானத்துக்கு மறுபெயர் ஒறேற்றர் | 8 |
| எண்ணும் எழுத்தும் எனக்கறிவித்த..... | 17 |
| ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சி | 23 |
| நீர் மாசடைதல் | 27 |
| வெற்றிபெற்ற தேசத்தைச் சிறுவர்களுக்காக... | 28 |
| எங்கள் ஆசான்கள் | 29 |
| நுண்ணறிவு | 30 |
| நிஷா | 31 |
| ஐசாக் நியூட்டன் | 32 |
| எடுப்பு வெளிப்பேறு.... | 33 |
| பாடசாலை விளையாட்டு | 42 |
| இயற்கைப் பிரிவினை | 42 |
| தையற்கலை ஓர் அறிமுகம் | 43 |
| தமிழ் இணையம் | 46 |
| வீணான காலங்கள் | 47 |
| வென்னின் விளக்கப்படங்கள் | 48 |
| எப்படி நாம் மறப்போம்? | 53 |
| பாடசாலைகளும் பிரச்சினைகளும் | 54 |
| ஒளித்திடுவோம் வழிப்படுத்துவோம் | 60 |
| இசுறு பாடசாலை அபிவிருத்தி.... | 61 |
| Seasons | 64 |

| | |
|---|---|
| புதியதோர் உலகம் செய்வோம் | 65 |
| கானல்நீர் | 66 |
| க.பொ.த. உயர்தர மாணவர்களும்.... | 68 |
| News paper a great... | 71 |
| A job I like most | 72 |
| Child Protection | 73 |
| Mother Teresa | 74 |
| Nature of Sound | 75 |
| True Friends | 76 |
| A Story I read | 77 |
| Family Bonds | 78 |
| A great personality | 79 |
| Facial recognition systems.... | 80 |
| அதிபர் அறிக்கை | 82 |

# கவிதையென்னும் கலை

கவிஞர் சோ.பத்மநாதன்



கவிதையைக் கலைகளின் அரசி என்பர். அது கவின்கலைகளுள் ஒன்று. அழகுக் கலைகளுள் ஒன்றாகக் கவிதை ஏன் வைக்கப் பட்டது என ஆராயலாம்.

ஓவியம் நீளம், அகலம் என இரு பரிமாணமுடையது. சிற்பம் நீளம், அகலம் ஆழம் என முப்பரிமாணமுடையது. நடனம், இம்மூன்றுடன் அசைவும் சேர்ந்து நாற்பரிமாணமுடையது. இசை ஸ, ரி, க, ம, ப, த, நி, எனும் ஏழு பரிமாணமுடையது.

ஓவியத்துக்கு ஊடகம் வர்ணம் (நிறம்). சிற்பத்துக்கு ஊடகம் கல், மரம், உலோகம், பளிங்கு, மண். இசைக்கு ஊடகம் ஒலி (நாதம்). நடனத்துக்கு ஊடகம் (மனித) உடல். கவிதைக்கு ஊடகம் மொழி. மொழியின் சாத்தியப்பாடுகளுக்கு எல்லையில்லை. கவிதை உயர்ந்து நிற்பதற்கு இப்பண்பே காரணம்.

கவிதை மிகத் தொன்மையான கலை. இருக்குவேத இந்தியன் கவிதை புனைந்தான். பண்டைய கிரேக்கன் கவிதை புனைந்தான். ஆபிரிக்காவின் ஆதி மனிதனும் கவிதை புனைந்தான். ஆக, பாமரனுக்கும் படித்தவனுக்கும் கைவந்த கலையாகக் கவிதை விளங்கியது.

கவிதை ஓசையோடு பிரிக்க முடியாத தொடர்புடையது. "பாவானது பரந்துபட்டுச் செல்வதாயதோர் ஓசை" என்று பேராசிரியர் சொல்வார். "ஓசை தருமின்பம் உவமையிலா இன்பமன்றோ!" என்று பாரதி சொல்வான். மனிதனுக்கு இரு அடிப்படையான இயல்பூக்கங்கள் உள என Aristotle குறிப்பிடுவார்.

1. போலச் செய்தல் – Imitation
   சிறு பிள்ளைகள் பெற்றோரைப் போலப் பாவனை செய்து விளையாடுவதைப் பார்க்கிறோம்
2. எங்கும் எதிலும் லயத்தை (Harmony ஐ) காணல்

பாரதி புதுவையில் வாழ்ந்த காலத்தில் ஒருநாள் நல்லமழை, காற்று, மின்னல், இடிமுழக்கம், எல்லாம் சேர்ந்து வந்த மழை. பார்க்கிறான் கவிஞன்.

***"திக்குகள் எட்டுஞ் சிதறி – தக்கத்***
***தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட தீம் தரிகிட***
***பக்க மலைகள் உடைந்து – வெள்ளம்***
***பாயுது பாயுது பாயுது – தாம்தரிகிட"*** [1]

காற்று, மழை, இடி முழக்கங்களூடு ஒரு லயம் இருப்பதை அவன் காண்கிறான் – கேட்கிறான். இந்தப் பிரபஞ்சம் முழுவதும் ஒரு கூத்து நிகழ்கிறது. இதுதான் அரிஸ்தோத்தில் சொன்ன எங்கும் – எதிலும் -- லயத்தைக் காணும் இயல்பு.

குறிப்பாலுணர்தல் (Suggestion) கவிதையின் தலையாய பண்பு. ஒன்றை நேரிடையாகச் சொல்வதைவிட, குறிப்பாகச் சொல்வது அதிக தாக்கத்தை ஏற்படுத்தும். பாரி என்ற தமிழ் மன்னனைப் பாராட்டாதார் யார்? ஆனால் கபிலருடைய வாழ்த்து எல்லாவற்றையும் விஞ்சி நிற்கிறது. "புலவர்களெல்லாரும்

பாரியைப் பலவாறு புகழ்கிறார்கள். பாரி மட்டுமா உலகிற்கு உதவுகிறான்? மாரியும் அதைத்தானே செய்கிறது?"

***"பாரி பாரி என்று பல ஏத்தி***
***ஒருவர்ப் புகழ்வர் செந்நாப் புலவர்***
***பாரி ஒருவனும் அல்லன்***
***மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப்பதுவே!"*** [2]

மேலோட்டமாகப் பார்த்தால் பாரியைப் பற்றி மற்றவர்கள் சொன்னதை மறுப்பது போலிருக்கிறது. ஆனால் மறைமுகமாகக் கபிலர் பாரிக்கு மாரியை விட வேறெவரும் இணையாக முடியாது என்று புகழவே செய்கிறார். இது தான் குறிப்பாலுணர்த்தல்.

உச்சி வெய்யில். ஒதுங்க நிழலில்லை. கவிஞன் நடக்கின்றான். தாக மெடுக்கிறது. நல்லவேளை ஓர் ஆய்ச்சி வருகிறாள், மோர் விற்றுக் கொண்டு. அவளை மறித்து மோர் வாங்கிக் குடிக்கிறான் கவிஞன். இரண்டாவது பேணி குடிக்கும்போதுதான் மோரில் நீர் அதிகம் என்பதை உணர் கிறான். ஆய்ச்சியை ஏசவில்லை. மோரைப் பார்த்துப் பேசுகிறான் :

***"ஆகாயத்திலிருக்கும் போது உனக்கு முகில் என்று பேர்***
***நிலத்தில் இறங்கியதும் உனக்கு நீர் என்று பேர்***
***ஆய்ச்சியர் கைக்கு வந்ததும் உனக்கு***
***மோர் என்று பேர். ஆக, மூன்று பேர் பெற்றுவிட்டாய்!"***
***"காரென்று பேர்படைத்தாய் ககனத்துறும்போது***
***நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்ததன் பின்***
***வாரொன்று மென்முலையார் ஆய்ச்சியர்கை வந்ததன்பின்***
***மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே !"*** [3]

காளமேகம் குறிப்பாக உணர்த்தும் செய்தி என்ன? மோரில் நீர் அதிகம் என்பது. இங்கு ஒரு குற்றச்சாட்டுக்கூட கலையாகிறது.

தலைவியைப் பிரிந்து போருக்குப் போன தலைவன் தன் பணி முடித்து ஊர் திரும்புகிறான். தலைவி அவன் வரவை எதிர்பார்த்திருப்பாள். எவ்வளவு விரைவாக அவளிடம் போய்ச் சேரமுடியுமோ, அவ்வளவு விரைவாகப் போய்ச்சேர வேண்டும். தேர் விரைவாகத்தான் போகிறது. ஆனாலும் அதன் வேகம் அவனுக்குப் போதுமானதாக இல்லை. நிமிர்ந்து மேலே பார்க்கிறான். காற்றால் உந்தப்பட்ட மேகங்கள் விரைந்து போய்க் கொண்டிருக்கின்றன. அவை அவனை முந்திக்கொண்டு ஊர் போய்ச் சேர்ந்து விடும். தான் வரும் செய்தியை அவற்றின் மூலம் அனுப்பலாம் அல்லவா?

**"ஓடுகிற மேகங்காள் ! ....**

அவன் சொல்லுகிற செய்தி என்ன தெரியுமா?

**"ஓடாத தேரில் வெறுங்**
**கூடு வருகுதென்று கூறுங்காள் ! "**

இதுதான் கவிதையின் உயிரான பகுதி. தேர் ஓடிக்கொண்டுதான் இருக்கிறது. தலைவனின் மனோவேகத்தோடு ஒப்பிடு கையில் அது too slow! ஓடாமல் நிற்பது போலிருக்கிறது.

**"வெறுங்கூடு வருகுதென்று கூறுங்கள்!"**

உடலைக்கூடு என்று சொல்வது மரபு. அக்கூட்டுக்குள் தான் உயிர் குடியிருக் கிறது. இப்போ தலைவன் சொல்கிறான். "வெறுங்கூடு பின்னே வந்து கொண்டி ருக்கிறது." என்று அவளிடம் சொல்லுங்கள். அவன் சொல்லாமற் சொல்லுகிற செய்தி என்ன?

**"என் உயிர் முன்பே தலைவியிடம் போய்விட்டது !"**

இதுவே கவிஞன் பொதிந்து வைத்திருக்கும் குறிப்பு.

யாழ்ப்பாணத்து மாம்பழம் உலகப் பிரசித்தி பெற்றது. அதன் சுவையை நினைத்தாலே வாயூறும். அமரர் பண்டிதர் சச்சிதானந்தன் அதைப் புகழ்வது அதன்

சுவைக்காக அல்ல. கவிதையைப் பாருங்கள் :

**"நீதி பிழைப்பிக்கும், நேர்மை தவறுவிக்கும்**
**பாதிப் படிப்பில் பதவிதரும் – ஏதுக்கும்**
**ஓம்பட் டிசைவிக்கும் ஒன்றன்றோ யாழ்ப்பாண**
**மாம்பழத்துத் தீஞ்சுவையின் மாண்பு"**

மாம்பழத்தைப் புகழ்வதாயிருந்தாலும் இவ்வெண்பா ஒரு காலகட்டத்து வாழ் வியலை, ஓர் எள்ளலோடு, சொல்கிறது. நியமனம், பதவியுயர்வு முதலிய வாய்ப் புக்களை நாடிக் கொழும்பு வரும் யாழ்ப் பாணத்தார் 20–25 கறுத்தக் கொழும் பான்களைக் கொண்டு வந்து கொடுத்துக் கருமம் பார்ப்பது ஒரு வழமையாகவே இருந்த ஒரு காலத்தை இது படம் பிடிக்கிறது. யாழ்ப்பாணத்து மாம்பழம் ஒழுங்கீனங்களுக்கு துணைபோகிறது என்பது கவிஞர் வைத்த குறிப்பு.

கவிதை பல் பரிமாணம் உடையது. It is multi – dimensional. அது பல தளங்களிற் தொழிற்படும். உரைநடைக்கு அந்த வாய்ப்பில்லை. பல்பரிமாணப் பண்புக்கு எடுத்துக்காட்டாக ஓர் ஆபிரிக்கக் கவிதையைப் பார்க்கலாம் :

**"நான் நீயல்ல**
**ஆனால்**
**நான் நானாக இருப்பதற்கு**
**நீ ஒரு சந்தர்ப்பம் தருகிறாயில்லை**
**நீ என் விஷயங்களில் தலையிடுகிறாய்**
**ஏதோ அவை உன் விஷயங்கள் போலவும்**
**நீ நான் போலவும்**

**"நான் நீயாக இருந்தால்?"**
**உனக்குத் தெரியும்**
**நான் நீ அல்ல**
**என்றாலும்**
**நீ**
**என்னை நானாக இருக்க விடுகிறாயில்லை**
**நான் நீ ஆகலாம்**
**உன்னைப் போல் பேசலாம், நடக்கலாம், சிந்திக்கலாம்**
**என எண்ணும்**
**உனக்குப் புத்தியில்லை, உன் பக்கம் நியாயமில்லை**
**கடவுள் பேரால் கேட்கிறேன்**
**என்னை நானாக இருக்க விடு !"**[*4]

செய்முறை விமர்சனம் பயிலும் மாணவர்களுக்கு நான் இந்தக் கவிதை யைப் பயிற்சிக்காகக் கொடுப்பது வழக்கம். இக்கவிதையில் வரும் "நான் "யார்? என்று கேட்டால் பல விடைகள் வரும். மனைவி கணவனுக்குச் சொல்வது. மாணவன் ஆசிரியனுக்குச் சொல்வது. தொழிலாளி முதலாளிக்குச் சொல்வது. ஆளப்படுவோன் ஆள்வோனுக்குச் சொல்வது எனப் பல விடைகள் வரும்.

இக்கவிதைக்கு ஒரு தலைப்பிடுமாறு கேட்பேன். "நீயும் நானும்", "சுதந்திரம்", "தனித்துவம்" எனச் சில தலைப்புக்களைச் சொல்வார்கள். இக்கட்டத்தில் கவிஞன் இட்ட தலைப்பைத் தருவேன். "ஆபிரிக்கா வின் கோரிக்கை". இது கேட்டதும் "நான் – நீ" புதிய பரிமாணம் பெறும். ஆபிரிக்கன் தன்னை அடிமைப்படுத்திய மேற்குல குக்குக் கூறுவதாக, கறுப்பன் வெள்ளை யனுக்குக் கூறுவதாக, ஒடுக்கப்பட்டவன் ஒடுக்குவோனுக்குக் கூறுவதாக எல்லாம் இக்கவிதை பல தளங்களில் பொருள் தரும்.

கவிதை, மொழியின் உச்சம் எனலாம். மொழியின் நெளிவு சுழிவுகளை அறிந்து – அவற்றைப் பயன்படுத்த வல்லவனே நல்ல கவிஞன். கவிதையில் சொல் வைக்கப்பட்டிருக்கும் இடத்தைப் பொறுத்து, ஒழுங்கைப் பொறுத்து, அது தரும் பொருளைப் பொறுத்து, அது ஆற்றலும்

வேகமும் பெறுகிறது. சிறப்பாக அமைந்த ஒரு கவிதையை — அதற்கு ஊறு செய்யாமல் – மாற்றி எழுத முடியாது. வேண்டுமானால் நமது "மஹாகவி"யின் கவிதையைத் திருத்தி (?) எழுதிப் பாருங்கள். படுதோல்வி அடைவீர்கள்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை மறைந்த போது ஒருவன் பாடினான் :

**"எமைவைத்தி எமைவைத்தி எனப் பதங்கள்**
**இடையிடைநின் றிரந்து வேண்ட**
**உமை வைப்பாம் உமை வைப்பாம் பொறுத்திடுமின்,**
**பொறுத்திடுமின் !..."[5]**

என்று அபயமளித்து, சொற்களைத் தன் கவிதைகளில் தகுந்த இடங்களில் வைத்து அவற்றுக்குச் சிறப்புச் செய்தவர் அவர் என்று.

இப்படிச் சொல்வதால் செந்நெறிப் பாங்கான சொற்கள், கற்றோர் வழக்குகள் விரவி வருவதுதான் கவிதை என்றாகாது. அசாதாரணமான மொழிப் பிரயோகங்கள் கல்லாதவனிடமிருந்தும் வரலாம்.

**"பூவலைத் தோண்டிப் புதுக்குடத்தைத் தான் நிறுத்தி**
**ஆரம் விழுந்த கிளி அள்ளுதுகா நல்லதண்ணி!"[6]**

இது ஒரு பாமரன் புனைந்த கவி. இதில் எதுகை இல்லையா? மோனை இல்லையா? உருவகம் இல்லையா? எளிமை இல்லையா? இனிமை இல்லையா?

உண்மையில், கவிதை மொழி சாதாரண மொழியினின்றும் வேறுபட்டது. அதில் nonsense க்கும் இடமுண்டு.

**"காற்றிலேறியவ் விண்ணையும் சாடுவோம்**
**காதற்பெண்கள் கடைக்கண் வீச்சிலே"[7]**

என்று கவிஞன் பாடினான். "காற்றில் எவ்வாறு ஏற முடியும்?" என்று நாம் கேட்பதில்லை. "சுருக்கு விழுந்த கடல் தவிழ்கிறது." என்று Tennyson பாடினால், கடலுக்குச் சுருக்கு விழுவது எவ்வாறு என யாரும் ஆராய்வதில்லை.

கவிஞன், தன் கவிதை, வாசகனைப் பற்றிக் கொள்வதற்குச் சில கருவிகளைப் பயன்படுத்துகிறான். அவற்றை அணிகள் என்பர். ஒரு பெண் அணிகலன்களால் அழகு பெறுவது போல், கவிதையும் அணிகளால் அழகு பெறுகிறது. அணியிலக்கணம் அணிகளைப் பலபட விரிக்கும். இந்நாளில் விமர்சகர்கள் அவற்றை உவமை, உருவகம், படிமம், குறியீடு எனும் நாலினுள் அடக்குவர். அமரர் (பண்டிதர்) சச்சிதானந்தன் எல்லா அணிகளும் உவமையுள் அடங்கும் என்ற கருத்தை முன் வைத்துள்ளார்.

மிக அடிப்படையான கருவி உவமை. கற்பித்தலில் தெரிந்ததிலிருந்து தெரியாததுக்கு (From the known to the Unknown) என்போம். கவிஞனும் அதே தத்துவத்தையே கையாளுகிறான். கேட்போனுக்கு (அல்லது வாசகனுக்கு) பரிச்சயமானதென்று கொண்டு புதியதொரு காட்சியை அவன் மனதில் பதிய வைக்கிறான்.

**"பூப்போலக் கண்கள் பூப்போலப் புன்சிரிப்பு**
**பூப்போலக் கைவிரல்கள் பூப்போலப் பாதங்கள்" 8**

பூவுக்குரிய இயல்புகள் எல்லாம் வாசகன் மனத்திரையில் வருகின்றன. அழகு, மென்மை, Freshness, மணம். கவிஞன் பேசுவது ஒரு பெண் குழந்தை பற்றி. பூவுக்கும் குழந்தையின் அவயவங்களுக்குமுள்ள பொதுப்பண்பு — ஒப்புமை — கவிதையை மனதில் பதிய வைக்கிறது.

அத்தினாபுரத்தில் துரியோதனன் ஓர் அழகிய மண்டபம் நிர்மாணிக்கிறான். அதுவரை எங்கும் — யாராலும் எழுப்பப் படாத அளவு உன்னதமான மண்டபம். இது நாம் காணாதது. படத்தில் பார்க்கக் கூடிய தாஜ்மஹாலும் அல்ல. எமக்கு அதன் சிறப்பைக் கவிஞன் எவ்வாறு உணர்த்துகிறான்?

*"வல்லவ னாக்கிய சித்திரம் போலும்*
*வண்மைக் கவிஞர் கனவினைப் போலும்*
*நல்ல தொழிலுணர்ந் தோர் செய லென்றே*
*நாடு முழுதும் புகழ்ச்சிகள் கூற*
*கல்லையும் மண்ணையும் பொன்னையும் கொண்டு*
*காமர் மணிகள் சிலசில சேர்த்துச்*
*சொல்லை இசைத்துப் பிறர்செய்யுமாறே*
*சுந்தர மாயொரு காப்பியஞ் செய்தார்" 9*

மாளிகை எவ்வாறு எழுப்பப்பட்டது என்று சொல்ல வருகிறான் பாரதி : அவன் கையாளும் உவமைகள் :

1. வல்லவன் ஆக்கிய சித்திரம்
2. கவிஞர் காணும் கனவு
3. சொல் கொண்டு கட்டியெழுப்பப்படும் காவியம்

மூன்றாவதில் வரும் மொழிப் பிரயோகம் அசாதாரணமானது : ஒரு மகா கவியின் முத்திரை. "மாளிகை கட்டினர்" என்று சொல்லாமல் "ஒரு காப்பியஞ் செய்தார்" என்கிறான் மகாகவி. எப்படி நாடு, நகர், மலை, ஆறு முதலியவற்றின் வர்ணனைகளோடு தன்னேரில்லாத் தலைவனுடைய வீரம், கொடை தலைவியின் அழகு மற்றும் அறம், பொருள், இன்பம், முதலிய கூறுகள் சேர்த்து காவியம் படைக்கப்படுகிறதோ, அவ்வாறே கல், மண், பொன், நவமணிகள், எல்லாம் சேர்த்து மாளிகை கட்டப்பட்டது என்பது பாரதி கையாளும் உவமை.

ஒரு சுயம்வரம். நாலா திசைகளிலுமிருந்து மன்னர்கள் மண்டபத்தில் வந்து வரிசையாக நிற்கின்றனர். இளவரசி இந்துமதியைத் தோழியர் அழைத்து வருகின்றனர். ஒவ்வொரு மன்னனுடைய நெஞ்சும் "திக்...திக்" என்று துடிக்கிறது. மாலை தன் கழுத்தில் விழுமென்ற எதிர் பார்ப்பில், இந்துமதி நகர்ந்து கொண்டிருக்கிறாள். கவிஞன் அவளுக்கு ஓர் உவமை சொல்கிறான்: நகர் காவலன் கையில் ஒரு தீபம் ஏந்தி வீதிவழியே செல்வான். தீபம் எந்த இடத்தை நெருங்குகிறதோ அது பிரகாசமடையும். அவன் கடந்து வந்த இடம் இருளில் மூழ்கும். அது போல் இந்துமதி யாரை நெருங்கி வருகிறாளோ, அவன் முகம் பிரகாசமடைகிறது. யாரைக் கடந்து போகிறாளோ அவன் முகம் இருண்டு விடுகிறது.

இப்புதுமையான உவமையைச் சொன்ன மகாகவி "உபமா காளிதாஸ்" என்று கொண்டாடப்படுகிறான்.

உவமையின் இறுக்கமான வடிவமே உருவகம். முன்னதில் உவமானம்., உவமேயம் வெவ்வேறாக இருக்கும். பின்னதில் இரண்டும் பிரிவின்றி ஒன்றிவிடும்.

*"எல்லையி லாததோர் வானக் கடலிடை*
*வெண்ணிலாவே – நீ*
*இன்ப மளிப்பதோர் தீவென்றிலங்குவை*
*வெண்ணிலாவே!" 10*

இங்கே வானமும் அதிற் காணும் சந்திரனும் கடலுக்கும் அதன் நடுவிலுள்ள தீவுக்கும் உவமிக்கப்பட்டன. ஆனால் "கடல் போன்ற வானம்" என்று சொல்லாமல் "வானக்கடல்", அதாவது "வானமாகிய கடல்" என்று சொல்லும் உத்தியால் உவமானம், உவமேயம் இரண்டையும்

ஒன்றாக்கி அதிக தாக்கத்தை ஏற்படுத்து கிறான் கவிஞன்.

**"வாழைப்பழமே என் வலதுகையிற் சர்க்கரையே ஏலம் கிராம்பே உன்னை என்ன சொல்லிக் கூப்பிடட்டும்!"*11**

இந்நாட்டார் பாடலில் நான்கு உருவகங்கள் வருகின்றன. உவமையை விட உருவகம் சிறப்பாக இருப்பதற்கு இப்பாடலே நல்ல உதாரணம். புதுக் கவிதை புனையும் இளங்கவிஞர்கள் உருவகத்தையே பெரிதும் பயன் படுத்துவது கவனிக்கத்தக்கது.

உவமை முதலிய கருவிகள் வாசகன் மனதில் சித்திரந் தீட்டுகின்றன. அதாவது செவிப்புலமான ஒன்றை கட்புலமாக்கு கின்றன. செவிப்புலத்தைவிட கட்புலமே வலுமிக்கது, அதிக தாக்கத்தை ஏற்படுத் துவது. இவ்வுத்திகளுள் படிமம் விரிந்தது. ஒரு தனிப்படமாக அல்லாது, ஒரு முழுக்காட்சியையே படிமம் நம் கண்முன் நிறுத்துகிறது.

**"மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கை ஏற்றிச் செறிகடல் ஓடும்போது
மதமெனும் பாறை தாக்கி மறியும் போதறிய வொண்ணா(து)
உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடைய கோவே!" 12**

இத்தேவாரத்தில் மனம்–தோணி, பட கோட்டி ஊன்றும் கோல் – மதி (புத்தி): தோணியில் ஏற்றியுள்ள சரக்கு – சினம், தோணி போய் மோதுகிற பாறை – மதம் (ஆணவம்) அப்பர் ஒரு முழுச் சித்திரத்தையே தீட்டி விடுகிறார். இதைப் படிமம் என்கிறோம்.

அடுத்த கருவி குறியீடு – symbol. நாம் கணிதத்தில் குறியீடுகளைப் பயன் படுத்துகிறோம். ஒரு சமன்பாட்டைத் தீர்க்க முனைகையில் X என்ற காரணி யின் பெறுமானம் எமக்குத் தெரியாது. கணக்கு செய்ததும் X=2 என்ற விடையைப் பெறுகிறோம். கவிஞனும் இதே உத்தியை பிரயோகிக்கிறான். சொல்ல வருகிற செய்தியை (நேரே) சொல்லாமல் ஒரு குறியீட்டைத் தரு கிறான். அதன் பெறுமானத்தைக் கண்டு பிடிக்க வேண்டியது வாசகன் வேலை. திரைப்பட இயக்குநர்கள் குறியீட்டை மிகச் சிறப்பாகப் பயன்படுத்துவர். கணவனை இழந்து ஆதரவின்றித் தத்தளிக்கும் பெண்ணின் நிலையை ஒரு பட்ட மரத்தின் மூலம் காட்டி விடுவர்.

ஓர் ஆபிரிக்கக் கவிதை எவ்வாறு குறியீட்டைப் பயன்படுத்துகிறது எனப் பார்ப்போம் :

### தூக்கணாங்குருவி 13

**தூக்கணாங்குருவி
எங்கள் வீட்டில் கூடு கட்டியது
முட்டை இட்டது
நாங்கள் அதைத் துரத்தவில்லை
கூடுகட்டியதைப் பார்த்திருந்தோம்
முட்டை இடுவதை மேற்பார்வை செய்தோம்
பிறகு
தூக்கணாங்குருவி
வீட்டுச் சொந்தக்காரனாக மாறியது
ஈ-டேற்றம் பற்றிப் பேசியது
மேற்குத் திசையிலிருந்து
அது வந்ததாகச் சொல்கிறார்கள்**

தூக்கணாங்குருவி எங்களுக்கு ஆரூடம் சொல்கிறது

**எங்கள் புதிய தொடுவானம்
அதன் கூடுவரை நீளுகிறது**

**ஆனால்**

**பிரார்த்தனையிலும் நற்கருணையிலும்**
**எங்களால் சேர்ந்து கொள்ள முடியவில்லை**
**நாம் புதிய வீடுகள் தேடுகிறோம்**
**குருவி எச்சத்தால் மாசுபட்ட**
**எங்கள் பழைய கோயில்களை**
**மீளக்கட்ட முனைகிறோம்.**

இது தூக்கணாங்குருவி பற்றிய கவிதை யல்ல. அது ஆபிரிக்க நாடுகளை அடிமைப் படுத்திய மேற்கத்திய வல்லரசுகளுக்கு ஒரு குறியீடு. தூக் கணாங்குருவி கட்டிய கூடு வணிகத்துக்காக அவர்கள் கட்டிய களஞ்சியசாலையாகலாம். தூக்கணாங் குருவி சொல்லும் ஆரூடம் மேற்குலகின் சித்தாந்தங்களாக இருக்கலாம். "குருவி எச்சத்தால் மாசுபட்ட கோயில்கள் " சுதேசிகளுடைய மத நிறுவனங்களைக் குறிக்கும். ஆக, இக்குறியீடு கொலனித் துவம் ஆபிரிக்காவை அடிமை கொண்ட கதையைக் கூறுகிறது.

நிறைவாக, மிகத் தொன்மையான இக்கவிதைக் கலை இன்னும் உயிர்த் துடிப்போடு இருக்கிறது. என்னதான் இது உறைநடை யுகமாக இருந்தாலும் உரை நடை கவிதைக்குப் பிரதியீடாகாது. கவிதையை ரசிக்க முடியாத, கவிதை கேட்க/வாசிக்க நேரமோ நாட்டமோ இல்லாத தலைமுறை மனிதனுக்கு வாய்த்த நுண்ணிய உணர்வுகளை இழந்த தலை முறையாக நலிந்து விடும். நசிந்து விடும்.

♣ ♣ ♣



**எமது கல்லூரியில் இருபத்தொரு வருடங்கள் ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவுமிருந்து அளப்பெரும் சேவையாற்றியவர்**

## திரு. சிற்றம்பலம் சிவஞானராஜா

**பாடசாலை நிகழ்வுகளை முன்னின்று ஒழுங்கமைப்பதிலும் மாணவரிடம் ஒழுக்க விழுமியங்களை நடைமுறைப்படுத்துவதிலும் பெரும்பணி ஆற்றியவர். பல தடவைகள் மாணவர்களைத் தேசியமட்டப் போட்டிக்கு அழைத்துச் சென்றவர். இன்று இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள இவர் சென்ற இடமெல்லாம் சிறப்போடு வாழ வாழ்த்துகிறோம்!**

# மனிதாபிமானத்துக்கு மறுபெயர் ஒறேற்றர் சுப்பிரமணியம்

1957ஆம் ஆண்டினிலே ஸ்கந்தவரோதயக் கல்லூரி தவிர யாழ்ப்பாணக் கல்லூரியும், யாழ். இந்துக் கல்லூரியும் அதிஉயர்தரக் கல்லூரிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. காலம் மாறிவிட்டது. கண்டவர் வாயடைத்து நின்றனர். நகரம் நோக்கி கிராமத்து மாணவர் படையெடுத்த காலம் போய் நகரத்திலிருந்து நாளாந்தம் வந்து அல்லது விடுதிச்சாலையில் தங்கிக் கற்பதற்கு மாணவர் கந்தரோடை என்ற கிராமம் நோக்கிப் படையெடுத்தனர். ஆக 1944ஆம் ஆண்டு தொடக்கம் 1962ஆம் ஆண்டில் ஒறேற்றர் சுப்பிரமணியம் ஓய்வு பெறும்வரை 'வளர்ச்சி, வளர்ச்சி, வளர்ச்சி என்றதையே வாய் உரைத்தது, காது கேட்டது.

225 மாணவர்களுடன் இருந்த பாடசாலை 2250 மாணவர்களைக் கொண்ட அதி உயர் கல்லூரியாகப் பொலிவு பெற்று நின்றது. விடுதியில் மாணவர் தொகையோ 200இனைத் தாண்டிவிட்டது. மாணவர் தொகை அதிகரிக்கத் தேவைகளும் பெருகின. எனினும் வேண்டிய வசதிகள் யாவும் செய்து கொடுக்கப்பட்டது. 75 ஆசிரியர்கள் சேவையாற்றிக் கொண்டிருந்தனர். சிறந்த ஆசிரியர்களைத் தேடித் தேடி அழைத்துக் கொண்டு வந்தார். தேவை ஏற்பட்ட பொழுது இந்தியா சென்று விஞ்ஞானம் கற்பிப்பதற்கான ஆசிரியர்களையும் அழைத்து வந்தார். 1950களில் கல்லூரியிலே குறைந்தது நான்கு இந்திய ஆசிரியர்களாவது விஞ்ஞான ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தனர். பரியோவான் கல்லூரியில் துரைராஜா எனும் இலங்கைத் தமிழர் பௌதிகவியல் கற்பித்தலில் பெரும் புகழ் ஈட்டிக் கொண்டிருந்தார். ஆகவே மாணவர் நன்மை கருதி துரைராஜா முதலாம் தர விசேட பதவி (Special Post Grade -1) வழங்கி ஸ்கந்தவரோதயாவிற்கு அழைத்து வந்தார். இப்பதவியே அக்காலத்தில் ஆசிரியர்களுக்கு வழங்கக்கூடிய அதி உயர் பதவியாக விளங்கியது.

கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகம் புகுந்த மாணவர்கள் பட்டதாரிகளாகிப் படிப்படியாக இந்திய ஆசிரியர்களைப் பிரதியீட்டினார்கள். 1957ஆம் ஆண்டு வாக்கிலே ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் மாத்திரமல்ல, ஏனைய கல்லூரிகளிலுமே இந்திய ஆசிரியர்களின் சேவை தேவையில்லாது போயிற்று. நான் அறிந்த வரையில் யாழ். இந்துக் கல்லூரியில் இராமகிருஷ்ணன், மானிப்பாய் இந்துக் கல்லூரியில் சாறி மற்றும் மகாஜனக் கல்லூரியில் வாரியார் ஆகியோரே, மேலும் சில ஆண்டுகள் தொடர்ந்து கடமையாற்றியவர்கள்.

கல்வியில் மாத்திரமல்லாமல் விளையாட்டுத்துறை கலைத்துறையிலும் பல் கலைக்கழகம் புகுந்தனர். இது அகில இலங்கையிலும் மூன்றாவது இடம் பெற்றதுடன் யாழ்ப்பாணத்தில் முதலாவது இடம்பெற்றது என்பது பெருமைப்பட வேண்டிய செய்தி.

இவை யாவும் ஒரு தனிமனித சாதனையா? நிச்சயமாக இல்லை! அது ஒரு அர்ப்பணிப்புடன் செயலாற்றிய குழுவொன்றின் சாதனை! ஆனால் "இதனை இவன் கண் முடிக்குமென் றாய்ந்து அதனை அவன் கண் விட்டு" பெரும் பேறு கண்ட எண்ணியதை எண்ணியாங்கு எய்திய அந்தத் திண்ணியர்" மீகாமனாக இருந்து சவள் வலித்த மையால் தான் சாத்தியமாயிற்று. அவர் எப்படிப் பட்டவர். அவர்கள் அதிபரது 90 அகவை பூர்த்தியின் கவிநாயகர், கலாநிதி கந்தவனம் பாடிய வாழ்த்தில் ஒரு பகுதி இங்கே உள்ளது.

*"எத்தனை கோழைகள் ஏழைகளை*
*வித்தகராக்கி விளங்க வைத்தாய்*
*எத்தனை எத்தனை சூரியர்கள்*
*எத்தனை எத்தனை சந்திரர்கள்*
*கதியற் றார்க்குக் கைகொடுத்தாய்*
*மதியில் லார்க்கும் மனம் கொடுத்தாய்*
*அதட்டி அணைக்கும் அமுத மலை*
*எதற்கும் கிறுங்கா இமயமலை".*

1924ஆம் ஆண்டு அப்போ அவருக்கோ வயது 24. ஹன்டி மாஸ்டரின் தோழமையில் அரசியல் பிரவேச ஆரம்பம். மாணவர் காங்கிரஸ எனும் இடதுசாரிக் கோட்பாடுகளுடன் கூடிய அமைப்பு. பின்னர் அரசியல் வாதிகளால் முன் எடுத்துச் செல்லப்பட்ட சித்தாந்தங் களாகக் கருதப்பட்ட தாய்மொழிக் கல்வி, சாதிமத பேதமற்ற ஏற்றமிகு சமுதாயம், ஆலயப்பிரவேம், சமபந்தி போசனம் என்பவை அன்றைய சமூக அமைப்பிலே கண்டனத்துக்குரிய சித்தாந்தங்களே. சேர். பொன். இராமநாதன் போன்ற கல்வி மான்கள் கூட சாதி சமயமற்ற சமுதாயம் ஒன்றினை வரவேற்காத போது மாண வர் காங்கிரஸ் அதைக் கடைப்பிடித்ததுடன் நில்லாது மகாத்மா காந்தி, தீரர் சத்திய மூர்த்தி போன்றோரையும் அழைத்துப் பேச வைத்து மக்கள் மனதிலே புதிய உணர்வுகளைப் புகுத்த முனைந்தது. ஒறேற்ரர் இதில் முன்னின்று உழைத்த தோடு, ஸ்கந்தாவில் சிறுபான்மை மாணவர்களைச் சேர்த்ததோடல்லாமல், விடுதிச் சாலையிலும் தங்க வைத்தார். மாணவர் மனதில் சமத்துவத்தின் கண்ணி யத்தை அது பேணப்படவேண்டியதன் தார்மீகத்தை எடுத்துரைத்து மாணவர்கள் மனதிற் படிய வைத்தார்.

ஹன்டி மாஸ்டர் தனது சமதர்மக் கோட்பாட்டினை முன்வைத்து பாராளு மன்றத் தேர்தலில் போட்டியிட்டபோது அதிபர் அவர்கள் வீடு வீடாகச் சென்று வாக்குச் சேகரித்தார். சில இடங்களுக்கு நானும் இவ்விருவருடனும் நடந்து சென்றுள்ளேன், அது மறக்கமுடியாத இன்ப அனுபவம். ஹன்டி மாஸ்டர் ஆசிரியர் சங்கத் தேர்தலிலும் போட்டி யிட்டபோது அவருக்கு உறுதுணையாக நின்றார். நான் அறிந்த வரையில் அதிபர் அவர்கள் தொழிற் சங்கங் களிலே வடமாகாணத்திலும் அகில இலங்கை மட்டத்தில் தலைவர், உப தலைவர் பதவிகளிலே அமர்ந்து அளப்பரிய சேவைகள் ஆற்றியுள்ளார். ஆனால் பாராளுமன்றத் தேர்களிலே பங்குபற்றுவதில் அவ்வளவாக நாட்டம் உடையவராக இருந்ததில்லை. பதவி களிலே அவ்வளவாகப் பற்றுடையவ ராக வாழ்ந்ததில்லை.

எனது மாணவன் சபேசன் லண்டனில் வாழ்கிறான், அதிக இலக்கிய ஈடுபாடு கொண்டவன். சில வருடங்கள் பனிமலர் எனும் இலக்கியத் தரம் வாய்ந்த சஞ்சிகை ஒன்றினை லண்டனில் நடத்தி வந்தான். தொடர்ந்து கைப்பொருளினை இழந்து

நஷ்டப்பட விரும்பாமையால் அதனை நிறுத்திவிட்டான். அதிபர் அவர்கள் லண்டன் மாநகரம் சென்றிருந்தபோது அவரைச் செவ்வி கண்டு சஞ்சிகையில் பிரசுரித்தான். அவர் மறைந்த சமயத்தில் அந்தச் செவ்வியினை ஒரு சிற்றேடாகப் பிரசுரித்து வழங்கியுள்ளான்.

ஒறேற்றர் அவர்களை அதிபராக நியமிப்பதற்கு முன்னர் நேர்முகச் செவ்வி ஒன்று ஸ்கந்தவரோதயாவின் நிறுவுனரும் அப்போதைய முகாமையாளருமான கந்தையா உபாத்தியாயரால் நடத்தப் பட்டது. ஒறேற்றருடைய மிக நெருங்கிய நண்பரான ஹன்டியும் அப்போது உடனி ருந்தார்கள். கந்தையா உபாத்தியாயர் சமயமரபுக் கோட்பாடுகளையும் சமூக பழைமை வாதத்தையும் பேணுகின்ற கனவான், ஒறேற்றர் அவர்களுடைய முற்போக்குவாதம் உலகறிந்தது. ஆகவே கந்தையா உபாத்தியாயருக்கு மனதள விலே ஒரு பயம் நிலவியது. இவரை அதிபராக நியமித்தால் பாடசாலையில் தனது முற்போக்குக் கொள்கைகளைப் பிரகடனப்படுத்தி இக்கட்டுக்களில் தள்ளி விடுவாரோ என்ற ஐயம் இருந்தது. ஆகவே மெல்ல என்னிடம் அமைதியாக புதிய அதிபர் பாடசாலையில் ஹரிசனப் பிள்ளைகளைச் சேர்த்து அதன் காரண மாக எல்லோருக்கும் தலையிடி ஏற்படுத்தி விடுவாரோ என என்னிடம் வினவினார். நானும் ஒறேற்றரும் இதுபற்றித் தனி யாகப் பேசினோம். பாடசாலை அதிபர் பதவி வேண்டும் என்றாலும் எமது கொள்கையை அதற்காகத் தியாகம் செய்வதற்கு நாங்கள் தயாராயில்லை. இறுதியாக ஒரு முடிவுக்கு வந்த நாங்கள் கந்தையா உபாத்தியாயரிடம் எந்தவித மான பாரிய மாற்றத்தையும் பாட சாலையில் செய்வதாயின் கந்தையா உபாத்தியாயரின் ஆசீர்வாதத்துடனேயே செய்வோம் என உறுதி கூறினோம். ஆனால் காலம் மாறியது. யாழ்ப்பாணச் சமூகத்தினுடைய விழுமியங்கள் விரை வாகவே புதிய உத்வேகத்துடன் மாற முனைந்தன. ஆகவே ஒறேற்றர் அவர் களால் பெருந்தொகையான ஹரிஜன மாணவர்களை உபாத்தியாயரின் ஆசீர் வாதத்துடன் பாடசாலையில் சேர்க்க முடிந்தது என ஹன்டி கட்டுரை ஒன்றினில் குறிப்பிட்டுள்ளார்கள். எப்படி நடந்தது என ஒறேற்றர் பனிமலருக்குக் கொடுத்த செவ்வியில் விளக்கியுள்ளார்கள்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு நான் அதிபராகப் போனபோது எந்த வொரு தாழ்த்தப்பட்ட மாணவனும் அங்கு கல்வி கற்கவில்லை. இரண்டு ஆண்டுகளின் பின்னர் ஸ்கந்தாவின் முகாமையாளரான Dr. சுப்பிரமணியம் அவர்களிடம் "நான் அவர்களைக் கல் லூரியில் அனு மதிக்கப் போகிறேன். இனியும் அனுமதிக்காமல் இருப்பது நல்லதல்ல" என்று சொன்னேன். அவருக்கு நல்ல சந்தோசம். ஏனென்றால் இரண்டு வருடத்தில் பள்ளிக் கூடம் நல்லா எழும்பிட்டுது. நாலாம் வகுப்பிற்கு அனுமதிப் பரீட்சை வைத்து அதில் தேறும் எவரையும் எடுப்போம் என்று சொன்னேன். அவரும் "ஓம்" என்றார். நிறுவுனரான கந்தையா மாஸ்டரைப் போய்க் கேட்டபோது "நீ இன்னமும் அனுமதிக்கவில்லையா" என்று கேட்டார்.

ஒறேற்றர் தனது நியமனத்தின் போது எந்த ஒரு பாரிய மாற்றத்தினைக் கொண்டு வருவதாயினும் அதனை கந்தையா உபாத்தியாயருடைய ஆசீர் வாதத்துடன் தான் செய்வேன் எனக் கூறிச் சென்றார். அதை இப்பொழுது செயலில்

காட்டி உபாத்தியாயரின் கணிப்பினில் மிக உயர்ந்து நின்றார்.

"தேர்வுகளை நடத்தினேன். ஒரு தாழ்த்தப்பட்ட மாணவனும் பாசாக வில்லை. சோதிச்ச ஆசிரியர்கள் எல்லோரும் பழைய ஆசிரியர்கள், பொடியன்களின் பெயர்களிலிருந்து 'கந்தன், பூதன்' என்று இருந்த எல்லாவற்றையும் பெயிலாக்கிப் போட்டார்கள். எனக்கு விஷயம் விளங்கியது. அடுத்த வருஷம் சோதனை நடத்தச் சொன்னேன். அவர்களில் ஒருவர்தான் என்.எஸ்.கந்தையா. இப்படித்தான் சோதனை மூலம் தாழ்த்தப்பட்ட மாணவர்களை அனுமதித்தோம்.

பின்னர் விடுதியிலும் இம்மாணவர்களை அனுமதித்தேன். அப்போது ஒரு மாணவனின் பெட்டியைக் கொண்டு போய்க் கிணற்றில் போட்டுவிட்டார்கள். நான் விடுதி மாணவர்களைக் கூப்பிட்டு, யார் இதைச் செய்தது என்று எனக்கு நல்லாத் தெரியும். ஆகவே என்னிடம் நீங்கள் யார் செய்தது என்று ஒத்துக் கொள்ளத் தேவையில்லை. ஆனால் அவனுடைய பெட்டியை எடுத்து, உடுப்புக் களைக் காயவைத்து இருந்த மாதிரி வைக்கவேண்டும் என்று சொன்னேன். அவர்கள் அப்படியே செய்தார்கள்.

என்.எஸ்.கந்தையா விஞ்ஞானப் பட்டாரி. இவரே தான் நீண்டகாலமாக லண்டனில் TAMIL TIMES எனும் சஞ்சிகையினை நடாத்தி வந்தவர்.

மனிதாபிமானம் அவர் வாழ்க்கை நெறி; ஒறேற்றர் பாடசாலையைப் பொறுப் பேற்றதும் பாடசாலையின் மாணவர் எண்ணிக்கை அதிகரித்ததென்றோம். எப்படி? கிராமத்திலிருந்து உயர் கல்விக் காக யாழ். நகர் நோக்கிப் படை எடுத்த மாணவர்கள் இப்போது கந்தரோடையை நோக்கிப் படையெடுத்தனர். நிலைமை மேலும் தலைகீழாகியது. பட்டணத்திலிருந்து உயர்கல்விக்காகக் கிராமத்தை நோக்கி வந்தோர் இன்னொரு சாரார் தீவுப் பகுதிகள் மற்றும் மலையகத்தில் இருந்து வந்தோர்கள் விடுதிச்சாலையை நோக்கினார். இவர்கள் மாத்திரமா? இன்னொரு சாரருக்கும் கந்தரோடை தஞ்சம் கொடுத்தது. அதிபரின் மனிதாபிமானம் அதற்கு இடமளித்தது. பேராசிரியர் சண்முகரத்தினம் அவர்கள் நோர்வே பல்கலைக்கழகத்தில் உயிரியல் விஞ்ஞானத்துறைப் பேராசிரியர். அவர் எனது வேண்டுகோளுக்காக எழுதிய கட்டுரையினை அப்படியே இங்கே தந்துள்ளேன்.

**ஒரு கல்விமான் கொடுத்த சந்தர்ப்பம்**

1958இன் பிற்பகுதி எனது கிராமமாகிய சுதுமலையிலிருந்து சுன்னாகத்தில் அமைந்துள்ள ஸ்கந்தவரோதயக் கல்லூரியை நோக்கிச் சைக்கிளிற் போய்க் கொண்டிருக்கிறேன். எனது சட்டைப் பைக்குள் ஒரு கடிதம். அந்தக் கடிதத்துடன் ஸ்கந்தாவின் தலைமை ஆசிரியர் ஒறேற்றர் சுப்பிரமணியத்தைக் காணவேண்டும். அவரைப் பொது இடங்களில் பார்த்திருக்கிறேன். அவரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் இதற்கு முன் நேரில் சந்தித்ததில்லை. சைக்கிளை ஓட்டியபடி எனது நிலைமை பற்றியும் என்னை எப்படி ஒறேற்றர் எடைபோடுவாரோ என்பது பற்றியும் சிந்தித்த வண்ணமிருக்கிறேன். எனது சித்தப்பா கொடுத்த கடிதம் நிச்சயமாக உதவியாக இருக்கும் என எனக்கு நானே நம்பிக்கை யூட்ட முயற்சிக்கிறேன். ஒரு வார்த்தை யில் சொன்னால் நான் அப்போது ஒரு

Drop out. அதாவது பள்ளிக்கூடம் செல்வதை நானாகவே நிறுத்திக் கொண்ட குழப்பமடைந்த ஒரு இளைஞன்.

யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி கற்று வந்தேன். எனக்கு அந்தக் கல்லூரியில் அனுமதி கிடைத்தபோது எனது பெற்றோரும் மற்றும் உறவினரும் மகிழ்ச்சி அடைந்தனர். சிரேஷ்ட தரம் வரை எனது கல்வி நன்றாகவே சென்றது.

ஆனால் அந்த வகுப்பிற்குப் பின் பள்ளிக்கூடப் படிப்பில் ஆர்வம் இழந்தேன். எனது பெறுபேறுகள் என் குடும்பத்திற்கும் எனது பழைய ஆசிரியர்களுக்கும் ஆச்சரியத்தையும் ஏமாற்றத்தையுமே கொடுத்தன. இந்த நிலையில் நான் சுயமாகவே பள்ளிக்குச் செல்வதை நிறுத்திவிட்டேன். ஆரம்பத்தில் இது என் பெற்றோருக்குத் தெரியாது. பின்னர் அதை அறிந்தபோது அவர்களின் ஏமாற்றம் அதிகமாகியது.

நான் அந்தக் காலகட்டத்தில் பகுத்தறிவு வாதம் பற்றிய நூல்களாலும் இடதுசாரி வெளியீடுகளாலும் கவரப்பட்டேன். இதனால் நான் பயனடைந்தேன். அது ஒரு நீண்ட கதை. அதை முற்றாக இங்கு சொல்வது எனது நோக்கமல்ல. முக்கியமான கேள்வி என்னவென்றால் நான் எனது கல்வியை எப்படி மீண்டும் தொடர்வது என்பதே. 1958இன் முற்பகுதியில் எனது தந்தையார் திடீரென மரணமடைந்தார். ஆசிரியராக இருந்த அவர் கல்வியின் முக்கியத்துவம் பற்றி அடிக்கடி அவருக்குரிய அமைதியான தொனியில் எனக்கு நினைவூட்டினார். அந்த இழப்பே என்னை மீண்டும் கல்வியை ஆரம்பிக்க நிர்ப்பந்தித்தது எனலாம்.

ஸ்கந்தாவின் வளாகத்தின் முற்பகுதியில் தலைமை ஆசிரியரின் அலுவலகம் இருந்தது. சைக்கிளை ஓரிடத்தில் நிறுத்திவிட்டுச் சித்தப்பா கொடுத்த கடிதத்தைக் கையிற் பிடித்தபடி தலைமை ஆசிரியரின் அலுவலகத்தினை நோக்கி நடக்கிறேன். அலுவலகம் திறந்திருந்தது. அதற்கு முன் தேசிய உடையில் மூக்குக் கண்ணாடியணிந்த ஒருவர் வலது கையில் ஒரு மெல்லிய பிரம்புடன் நிற்கிறார். திடமான முகபாவம். அவர்தான் ஒறேற்றர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நான் பொது இடங்களிற் பார்த்த ஒறேற்றருக்கும் இப்போது பார்க்கும் ஒறேற்றருக்குமிடையே சில வேறுபாடு. பொது இடங்களில் அவரைக் கையில் பிரம்புடனும் அந்த முகபாவத்துடனும் கண்டதில்லை. தயங்கியபடி அவரை நோக்கிச் செல்கிறேன். Good Morning என்று கூறியபடி எனது கையிலிருந்த கடிதத்தை நீட்டுகிறேன். Who are you? என்று கேட்டபடி பதிலுக்காகக் காத்திருக்காது கடிதத்தைப் பெற்றுத் திறந்து வாசிக்கிறார். வாசித்த பின் என்னை அலுவலகத்திற்குள் அழைத்துச் சென்றார். அவரது ஆசனத்தில் அமர்ந்தார். இன்றும் நன்றாக நினைவில் நிற்கின்றது. இதற்குக் காரணம் அவற்றைப் பல தடவைகள் நான் நினைவு கூர்ந்தமை. எனது பாட்டனார் உட்பட என் குடும்பத்தவர்களைத் தனக்கு நன்கு தெரியும் என்றும் எனது சிறிய தந்தையர் மூவரும் தனது பழைய மாணவர்கள் எனவும் கூறிய அவர், உன் படிப்பைக் குழப்பி விட்டாய், உன் போன்ற இளைஞர்கள் பலர் தமது உள்ளார்ந்த ஆற்றலை வெளிக்கொண்டுவரும் வழி தெரியாது குழம்பித் திரிகிறார்கள். உனக்கு ஒரு சந்தர்ப்பத்தை ஸ்கந்தா தருகிறது. அதைப் பயன்படுத்தி ஒரு மனிதனாக வர முயற்சி

எனக் கூறினார். பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே பேசினார்.

அந்தச் சந்தர்ப்பத்தை அவர் கொடுத்திராவிடின் எனது எதிர்காலம் எப்படி அமைந்திருக்கும் என்று சொல்லமுடியாது. ஆனால் குழம்பியிருந்த எனது கல்வியைத் தொடர அந்தச் சந்தர்ப்பம் உதவியது எனலாம். ஒரு இடைவெளிக்குப் பின் கல்வியைத் தொடர்வதில் சில ஆரம்பப் பிரச்சினைகள் உண்டென்பதையும் அனுபவரீதியாக உணர்ந்தேன். ஸ்கந்தாவில் என்னுடன் கல்வி கற்ற சக மாணவர்களுக்கு எனது பின்னணியைத் தெரிந்திருக்கக் காரணமில்லை. அவர்களிற் பலர் சிறந்த மாணவர்கள் என்பதையும் கண்டேன். நமது ஆசிரியர்கள் அனைவரும் மிகவும் திறமைமிக்கவர்களாக இருந்தார்கள். ஸ்கந்தாவிலிருந்து நான் பேராதனைப் பல்கலைக்கழகம் புகுந்தபோது முழு இலங்கையிலேயே மிக அதிகப்படியான மாணவர்களைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற வைத்த கல்லூரியாக ஸ்கந்தா திகழ்ந்தது.

அப்போது 1959 – 1962 காலத்தில் இலங்கையின் தலைசிறந்த பள்ளிக்கூடங்களில் ஒன்றாக ஸ்கந்தா விளங்கியது. ஒறேற்றர் தலைமை ஆசிரியராகப் பதவி ஏற்றபோது அது ஒரு சிறிய கல்விக் கூடமாக மட்டுமன்றி உயர்ந்தசாதி மாணவர்களை மட்டுமே கொண்டிருந்தது. ஒறேற்றர் ஸ்கந்தாவைச் சாதித்தடையற்ற ஒரு கல்விக்கூடமாகத் திறந்து வைத்தார். திறமைமிகு ஆசிரியர்களைத் தேடித் தேடி நியமித்தார். முற்போக்குச் சிந்தனை கொண்ட ஆசிரியர்களுக்கு இடமளித்தார். அவர் இளைப்பாறு முன் ஸ்கந்தா ஒரு Super Grade கல்விக் கூடமாகக் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டது. ஒறேற்றர் ஒரு கல்விமான் மாத்திரமல்ல. இளமைக்காலத்தில் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசில் இயங்கியவர். காலனித்துவ எதிர்ப்பு அரசியலில் ஈடுபாடு கொண்டவர். ஸ்கந்தாவில் அவர் ஏற்படுத்திய மாற்றங்கள் அவரது பரந்த முற்போக்குச் சிந்தனையினால் உந்தப்பட்டவை.

நான் பல்கலைக்கழகம் புகுந்த பின்னர் மாணவர் இயக்கத்தில் பங்குபற்றினேன். கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த சோஷலிச மாணவர் அமைப்பினில் என் போன்ற பலர் அங்கத்தவர்களாயிருந்தோம். யாழ். இந்துக் கல்லூரி மாணவனாக இருந்தபோது பிரபல கம்யூனிஸ்ட்டான கார்த்திகேசன் அவர்களின் கருத்துக்களால் கவரப்பட்ட பல இளைஞர்களில் நானும் ஒருவன். அவருடைய அறிவினதும் ஆளுமையினதும் செல்வாக்கினால் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவாளரானோம். ஸ்கந்தாவில் வி.பொன்னம்பலம் மாஸ்டர் மாணவர் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த காலம் அது. நான் அப்போது விஞ்ஞானத்துறை மாணவனாக இருந்த போதிலும் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளன் என்ற காரணத்தினால் பொன்னம்பலம் மாஸ்டரின் பழக்கம் கிடைத்தது. அத்துடன் அவர் விஞ்ஞானப் பிரிவு பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு மாணவர்களுக்குப் பொது அறிவு என்னும் வகுப்பினை நடத்தி வந்தார். இதுவும் நான் ஸ்கந்தாவில் மாணவனாக இருந்தபோது பயனுள்ள ஒரு வகுப்பாக இருந்தது. ஒறேற்றரைப் பற்றிச் சொல்ல வந்த நான் இவற்றையெல்லாம் சொல்வதற்குக் காரணம் உண்டு.

1965இல் நான் பேராதனை விவசாய பீடத்தின் இறுதி ஆண்டு மாணவனாக

இருந்தபோது பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப் பட்டேன். அந்த ஆண்டு பன்னிரண்டாம் மாதம் மாணவர் சங்கத்தின் தலைமையில் ஒரு போராட்டம் இடம்பெற்றது. இதன்போது பல்கலைக்கழக நிர்வாகம் விஞ்ஞான பீடத்தின் உயிரியல் பகுதி முன் கூடி யிருந்த மாணவர்களை வெளியேற்றி மாணவர் போராட்டத்தை முறியடிக்கும் நோக்கில் பொலிஸை வரவழைத்தது. பேராதனை வளாகத்துக்குள் வந்த பொலிஸாருக்கும் மாணவர்களுக்கு மிடையே ஏற்பட்ட மோதலின் விளைவாக பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப் பட்டதுடன் நானும் வேறு சில மாணவ தலைவர்களும் தற்காலிகமாக பல்கலைக் கழகத்திலிருந்து நீக்கப்பட்டோம். இந்தச் செய்தி நாடு பூராகவும் ஊடகங்களுக் கூடாகப் பரவியது. பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப் பட்ட நான் யாழ் சென்றேன். ஊரில் உறவினர்கள் நண்பர்கள் பலர் என்னைக் காரசாரமாக விமர்சித்தார்கள். இடதுசாரி அரசியலில் ஈடுபட்ட என் எதிர்காலத்தைப் பாழடித்து விட்டேன் எனக்கூறி வருத்தப் பட்டார்கள். நான் உற்சாகமிழந்திருந்த வேளை அது. அப்போது ஒறேற்ரரிட மிருந்து தன்னை உடனே வந்து பார்க் கும்படி ஒரு செய்தி வந்தத. கட்டுடையில் இருந்த அவர் வீட்டிற்கு எனது நண்பன் ஒருவனுடன் சென்றேன். அன்புடன் என்னை வரவேற்று உபசரித்த ஒறேற்ரர் எனக்கு மிக உற்சாகம் தரும் வார்த்தைகளைச் சொன்னார். 'இப்போது இங்குள்ள உனது உறவினர்கள், அயலவர்கள், நீ தவறி ழைத்துவிட்டாய் என்றும் எதிர் காலத்தைப் பாழடித்துவிட்டாய் என்றும் சொல்வார்கள். உனக்கு பல்கலைகழகப் பட்டம் கிடைக் காது போய்விடும் என்ற பயம் அவர்களுக்கு; நீ சிறை செல்ல நேரிடலாம் என்ற பயம் அவர்களுக்கு. ஆனால் இப்போது தான் நீ திடமாக இருக்கவேண்டும்.

பேராதனையில் நடந்தவற்றையெல் லாம் நன்கு அறிந்துள்ளேன். உனக்கு நீதி கிடைக்கும். நீ ஸ்கந்தாவின் பழைய மாணவன் என்பதில் பெருமையடைகி றேன்' என்றார். இது 1966 முதல் பகுதியில் இடம்பெற்ற நிகழ்ச்சி. அப்போது எனக்கு ஆறுதலையும் தென்பையும் கொடுத்த ஒறேற்ரரை மறக்கமுடியாது. இடம்பெற்ற உரையாடலில் அவர் யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தின் தன்மைகள் பற்றியும் விமர்சித்தார்.

ஒரு வருட தடைக்குப் பின் எனது பட்டப்படிப்பினைத் தொடர்ந்தேன். வரு டங்கள் சென்றன. படிப்படியாக நான் சமூக விஞ்ஞானத் துறைக்குள் சென்று விட்டேன். நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஒறேற்றரிடமிருந்து ஒரு கடிதம் 14–11–89 எனத் திகதியிடப்பட்டு, எனக்கு வந்தது. கொழும்பு, பம்பலப்பிட்டியில் அவர் தங்கி யிருந்தபோது எழுதப்பட்ட கடிதம் அது.

இலங்கைப் பத்திரிகை The Island இல் வெளியான எனது கட்டுரையைப் படித்த பின் எழுதிய கடிதம் அது. 1989 ஆறாம் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நான் கழித்த ஏழு நாட்களின்போது நான் கண்டவை, கேட்டவை, அநுபவித்தவை பற்றிய ஒரு கட்டுரை அது. அப்போது இந்திய அமைதிப் படை (IPKF) வடக்கிலும் கிழக்கிலும் இருந்தது. ஒல்லாந்து நிறுவனம் ஒன்றின் வேண்டுகோளில் அவர்கள் உதவி வழங்கி வந்த ஒரு கிராமியக் கடன் திட்டத்தை மதிப்பீடு செய்யும் ஆலோசகராக யாழ். சென்றேன். அங்கு எனது தொழிலைச் செய்யும் போது பலவற்றைக் கண்டேன், கேட்டேன், அனுபவித்தேன். இவைபற்றித்

தினமும் குறிப்புக்களை எழுதி வைத்திருந்தேன். அவற்றைக் கொண்ட ஒரு நீண்ட கட்டுரையினை The Inland பகுதி பகுதியாகப் பிரசுரித்தது. நான் அப்போது நோர்வேயில் வாழ்ந்து நோர் வேஜிய விவசாயப் பல்கலைக்கழகத்தில் கடமை யாற்றிக் கொண்டிருந்தேன்.

கட்டுரையைப் படித்த ஒறேற்றர் எப் படியோ எனது நோர்வேஜிய வீட்டு விலா சத்தை எடுத்துச் சரியான முகவரிக்குத் தனது கடிதத்தை அனுப்பி வைத்தார். அந்தக் கடிதம் எனக்குப் பரம திருப்தியைக் கொடுத் தது என்பேன். கொழும்பு செல்லு முன் தான் யாழ்ப்பாணத்தில் இருந்ததாகவும், நான் விவரித்த யாழ். நிலைமைகள் முற்றி லும் சரியானவை என்றும், என்னைச் சந்திக்க முடிந்திருந்தால் எவ்வளவு நன் றாய் இருந்திருக்கும் என்றும் எழுதியி ருந்தார். நமது சமூகத்தைப் பிடித்துள்ள துப்பாக்கிக் கலாசாரம் பற்றியும் கொடூர மாக்கல் பற்றியும் நான் கூறிய கருத்துக் களுடன் தான் ஒத்துப் போவதாகவும் அந்தக் கொடூர மயமாக்கல்தான் நமது சமூகத்தின் மிகப் பெரிய துன்பியல் (Greatest tragedy) என்றும் எழுதியிருந்தார்.

அந்தக் கடிதத்தை எழுதும்போது அவர் 87 வயதைத் தாண்டிக் கொண்டி ருந்தார். அவர் கையெழுத்தும் கருத்தாழ மும் என்றும் போல் தெளிவாகவே இருந்தன.

இங்கு நான் ஒறேற்றர் பற்றிய எனது தனிப்பட்ட அனுபவத்திற்கு முதலிடம் கொடுத்துள்ளேன். அந்த வகையில் நான் கண்ட ஒறேற்றர் ஒரு கல்விமான், பரந்த சிந்தனையாளன், சமூகசேவகன் மட்டு மல்ல ஒரு கருணை உள்ளம் கொண்ட மனிதனும் கூட. அவர் எனக்குக் கொடுத் த சந்தர்ப்பத்திற்காக அவருக்கு என்றுமே எனது மனமார்ந்த நன்றி.

Prof. N. Shanmugaratnam Ph.D
Professor of Development studies
Head of research
Departmen of International Environment and Development Studies
Norwegian University of life sciences (UMB) Aas, Norway.

இப்படியாக அவர் புகழ்பாடுவோர் எண்ணில் அடங்கார். அவர் மனிதாபி மானம், நீ பாடசாலைக் கல்விக்குத் தகுதியில்லை வெளியே போ என அதிபர்களால் விரட்டப்பட்ட பலருக்குத் தஞ்சம் கொடுத்தது. அவர்களை நன்னிலை அடைவதற்கு வழிவகுத்தது, பலருக்கு அவரே முன்னின்று வேலைகூடத் தேடிக் கொடுத்து வாழ வழிகாட்டி வைத்தார். ஏன்? நடத்தையில் சற்றுப் பிறழ்ந்தவன் திருந்தி வாழ்வதற்கு இடமில்லையா? அவனுக்கு மேலும் ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்து அவனை நல்வழியில் செல்ல வைப்பது ஒரு பாரிய சமூகத் தொண்டு என ஒறேற்றர் கருதினார்கள். செயற் படுத்தினார்கள், வெற்றியும் கண்டார்கள்.

பாடசாலை நிர்வாகமென்பது சுலப மானது அல்ல. அங்கே உள்ள ஆசிரியர் கள் எல்லோரும் கடமை உணர்வு உடை யவர்களாக இருப்பார்கள் என எதிர் பார்க்க முடியாது. அது மாத்திரமல்லாமல் வெவ்வேறு அரசியல் சித்தாந்தம் உடையோரும் ஒரே பாடசாலையில் ஆசிரியப்பணி ஆற்றுவார்கள். ஆகவே அதிபருக்கும் ஆசிரியருக்கும் முரண் பாடுகள் ஏற்பட்ட நிறையவே வாய்ப்புண்டு. ஸ்கந்தா அதற்கு விதிவிலக்காக அமைய முடியாது. ஸ்கந்தாவில் அப்படியாக அதிபருடன் முரண்பாடு கொண்ட சிலர்

பாடசாலையை விட்டு வெளியேறி வேறு இடங்கள் சென்று அங்கே பிரச்சினைக் குட்பட்டு மீண்டும் ஒறேற்றரை நாடி வந்தபோது அவர்களை இன்முகத்துடன் ஒருவிதமான காழ்ப்பு உணர்ச்சியும் காட்டாது ஆசிரியர்களாக ஏற்ற பண்பு அவருக்கே உரியது. அவர்களுக்கு பதவி வழங்க மறுத்திருக்கலாம். ஆனால் அந்த நல்ல இதயம் அதற்கு இடம் கொடுக்க வில்லை.

அதே சமயம் வேறு சில அதிபர்கள் சில ஆசிரியர்களை பழிவாங்கிய நிகழ்ச்சி களும் உலகறிந்ததே. 1960ஆம் ஆண்டிலே சகல பாடசாலைகளையும் அரசு பொறுப் பேற்றபோது அதற்கு ஆதரவு கொடுத் தவர் ஒறேறற்ரர்; அவ்விதம் அரசு பாட சாலைகளைப் பொறுப்பேற்றதைப் புனித சம்பத்திரிசியார் கல்லூரி போன்றவை எதிர்த்து தம் பாடசாலைகளைக் கைய ளிக்க மறுத்துவிட்டன. அப்பாடசாலை களிலே ஆசிரியர்களாகப் பணியாற்றி அரசு பாடசாலைகளைப் பொறுப் பேற்றதை ஆதரித்த ஆசிரியர்களை அப் பாடசாலை நிர்வாகம் வேலையிலிருந்து நீக்கிவிட்டது. அங்கேயும் ஒறேற்றரின் மனிதாபிமானம் கைகொடுத்தது. நீக்கப் பட்ட சில ஆசிரியர்களுக்கு அவர் வேலை கொடுத்தார். மகாஜனா அதிபர் ஜெய ரத்தினம், வைத்தீஸ்வரா, அதிபர் அம்பிகைபாகன் ஆகியோர்; ஏனைய வர்களுக்குப் பதவி வழங்கினார்கள்.

டி.எஸ்.துரைராசாவை பரியோவான் கல்லூரியிலிருந்து விசேட ஆசிரியர் பதவி கொடுத்து பௌதிகவியல் ஆசிரி யராக நியமித்தார் என்றோம். அவரும் மிகத் திறமை வாய்ந்த ஆசிரியர் என்பதை நிரூபித்து சிறந்த மாணவர் பெறுபேறு களைப் பெற்றார். ஆனால் துரதிஷ்டவச மாகச் சில வருடங்களில் அவரது இரு கண்களிலும் பார்வை போய்விட்டது. அத்தகையவர்கள் ஆசிரியர்களாகப் பணியாற்ற முடியாது. ஆசிரியர் சேவை யில் உள்ளவர்கள் குறைந்தது 10 வருடங் களாவது தொடர்ச்சியாகச் சேவை செய்தால் தான் ஓய்வூதியம் பெறமுடியும். துரைராசாவுக்கோ அதற்கு இன்னும் சில மாதங்கள் தேவையாக இருந்தன. பார்வையற்ற ஒருவர் ஆசிரியராக் கடமை ஆற்றுவதை கல்விப்பகுதி அங்கீ கரிக்கமாட்டாது. ஆனால் ஒறேற்றர் அதற்கெலலாம் செவி சாய்க்காமல் அவரைத் தொடர்ந்து கற்பிக்க வைத்தார். ஆச்சரியம் என்னவென்றால் துரைராசா வின் கற்பித்தல் திறன் முன்னிலும் பார்க்க முன்னேற்றம் கண்டமையால் மாண வர்கள் அவர் தொடர்ந்து சேவையாற்ற வேண்டும் எனக் கேட்டனர். அதிபர் சம்மதித்தார். தொடர்ந்து சேவையாற்ற அனுமதித்தார். இதற்கு எதிராகப் பல பெட்டிசன்கள் கல்வித் திணைக்களத் திற்குச் சென்றபோதும் வழுவ மறுத்து விட்டார். துரைராஜா தனது முழுமை யான சேவைக்காலத்தினை முடித்த பின்னரே ஓய்வு பெற்றார். வேறொரு அதிபராக இருந்தால் துரைராஜா ஓய்வூதியமே பெற்றிருக்கமாட்டார்.


**திரு. பொ. கனகசபாபதி**

*ஓய்வுபெற்ற அதிபர்.*

*(நன்றி : தினக்குரல் )*

# கல்லூரியின் சாதனையாளர்கள்

## க.பொ.த. உயர்தரப் பரீட்சை (2009) இல் 3A சித்தி



ப. பார்த்தீபன் (கலைப்பிரிவு)



கா. தேவரஞ்சினி (வர்த்தகப்பிரிவு)

## தேசியமட்ட போட்டிகளில் பங்கு பற்றியவர்கள் (2010)



கோ. கஜந்தினி
(ஈட்டி எறிதல்)



தே. சிந்துஜன் (800 மீற்றர்)

## போதை ஒழிப்பு தின கவிதைப் போட்டி (2010)



வி. சுலக்ஷன் தேசிய மட்டம் 2ஆம் இடம்.

## தமிழ்த்தினப் போட்டி (2010)

வி. திவாகரன் சிறுகதைப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்று தேசியப் போட்டிககுத் தெரிவாகியுள்ளார்.





2005ஆம் ஆண்டு நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் வி. நித்தியானந்தன்



2006ஆம் ஆண்டு பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட காமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ப. விக்கினேஸ்வரன் அவர்கள்




2007ஆம் ஆண்டு பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் எஸ். சத்தியசீலன் அவர்கள்.




கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் வைசர் வி. சிவசுப்பிரமணியம் அவர்களின் 100ஆவது பிறந்த தின நிகழ்வின்போது கல்லூரியின் பழைய மாணவர் சிற்பி சி. சிவசுப்பிரமணியம் உரையாற்றுகின்றார்.



2009 நவராத்திரிக் கலைவிழாவிற் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அமெரிக்க ஹவாய் ஆதீன முதல்வர் தொண்டுநாத சுவாமிகள் மங்கல விளக்கேற்றுகின்றார்.



SKANDAVARODAYA COLLEGE -CHUNNAKAM
SOCCER TEAM SECOND ELEVEN -1950
JAFFNA DISTRICT - UNDEFEATED CHAMPIONS




**2008 இல் இடம்பெற்ற முன்னாள்**
**அதிபர் திரு.க.சிவாஜி அவர்களின்**
**சேவைநலன் பாராட்டு விழா**



2009 [illegible]



இசுறு பாடசாலைத் திட்டத்தின் கீழான புதிய மேல்மாடிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்விற் கல்வி அமைச்சர் கௌரவ சுசில் பிரேமஜயந்த அவர்கள் உரையாற்றுகின்றார். வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். இளங்கோவன் அவர்களும் மேடையில் அமர்ந்திருக்கின்றார்.



இந்நிகழ்விற் கல்லூரி அதிபர் உரையாற்றுகின்றார். மேடையிற் கல்வி அமைச்சருடன் ஊடகத்துறை அமைச்சர் கௌரவ அநுர பிரியதர்சனயாப்பா, கல்விச் சேவைகள் அமைச்சர் கௌரவ நிர்மல கொத்தலாவல, சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.



பிரதிக் கல்வி அமைச்சர் கௌரவ எம். சச்சிதானந்தம் அவர்கள் கல்லூரிக்கு வருகை தந்தபோது வரவேற்கப்படுதல்.



2009ஆம் ஆண்டு இல்ல மெய்வல்லுநர் போட்டி தொடக்க நிகழ்வு



2010 இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கு வருகை தந்த விருந்தினர்கள் பாடசாலை முன்றலில் வரவேற்கப்படுகின்றனர்.



2009 இல் நடைபெற்ற ஆரம்ப பிரிவினருக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டியில் திரு. திருமதி. சுந்தரேஸ்வரன் தம்பதியினர் பரிசளிக்கின்றனர்.



2008ஆம் ஆண்டு நிறுவுநர் நினைவுதினத்தின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன்



2009இல் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா. ஞானகுமாரன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கின்றார்.



2010 இல் நடைபெற்ற ஆரம்ப பிரிவினருக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டியில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட டாக்டர் சேத்திரபாலன் குழந்தை வைத்திய நிபுணர் பார்த்திபன் ஆகியோர் வரவேற்கப்படுகின்றனர்.




**2009 இல் இடம்பெற்ற இசுறு பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வில் பங்குபற்றிய வளவாளர்கள்**



பழைய மாணவர் தாய்ச்சங்க உறுப்பினர்கள் இசுறு செயலமர்விற்காக வருகை தந்த அதிகாரிகளுடன் ....




சேர் வி. சிவசுப்பிரமணியம் 100 ஆவது பிறந்ததினம் கொழும்பில் நடைபெற்ற போது ஸ்தாபகரின் குடும்ப உறுப்பினரும், பழைய மாணவருமான த. சித்தார்த்தன் உரையாற்றுகின்றார்.

# எண்ணும் எழுத்தும் எனக்கறிவித்த கல்விக்கூடம் - சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி

**தம்பு சண்முகநாதன்,**
*பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்,*
*(விசேடம் – 1ஆம் தரம்)*

இலங்கைத் தீவில் பற்பல கல்லூரிகள் கல்விப்பணியைச் செய்து வருகின்றன. அவ்வரிசையில் யாழ் குடா நாட்டிலும், கந்தரோடையெனும் பழம்பெரும் பதியில் தனிமனித முயற்சியாலெழுந்த கல்விக் கூடந்தான், இன்று சிறப்பாகப் பேசப்படும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி. இக்கல்விக் கூடத்தின் வரலாறு 1894இல் தொடங்கு கிறது. இன்றைய இளந்தமிழ்ச் சந்ததியி னரும், ஏனையோரும் தெரிந்திருக்க வேண்டிய தேவை கருதியும், யான் அப்பள்ளியின் பழைய மாணவனென்ற தகுதி நோக்கியும், அதற்குமப்பால், எமது கல்வித்தாய்க்குச் செய்ய வேண்டிய கடப்பாடுமிருப்பதால் இக்கட்டுரையை எழுத விழைகின்றேன்.

**"எந்தையெனத் தகு கந்தைய வள்ளலின்**
**சிந்தையிலெழுந்த கல்லூரி**
**செந்தண்மை மருத்துவன் சுப்பிரமணியனின்**
**சேவையிலெழுந்த கல்லூரி"**

இப்பாடல் வரிகள் பெரும்பாவேந்தன் மகாகவி சுப்பிரமணிய பாரதியின்

**"செந்தமிழ் நாடெனும் போதினிலே**
**தேன் வந்து பாயுது காதினிலே"**

எனும் பாடலை நினைவுறுத்துகின்றன.

"மூர்த்தி, தலம், தீர்த்தம்" ஆகிய மூன்றும் ஒரு ஆலயத்துக்குச் சிறப்புச் செய்வன. அதுபோலவே உயர்திரு. கந்தையா உபாத்தியாயர் செந்தண்மை மருத்துவன் சுப்பிரமணியம், கடமை யுணர்வுடன் சேவையாற்றிய நல்லா சிரியப் பெருந்தகைகள் ஆகிய இம்மூவ ரினது ஒன்றிணைந்த செயற்பாட்டினது கூட்டு விளைவுதான் ஸ்கந்தாவெனப் போற்றப்படும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

இப்பாடசாலை கனம் கந்தையா உபாத்தியாயர் அவர்களால் 1894ஆம் ஆண்டு ஒருசில மாணவர்களுடன் சிறு கொட்டிலொன்றில் "கந்தரோடை ஆங்கிலப் பாடசாலை" என்ற பெயரில் ஆரம்பிக்கப் பட்டு 1935ஆம் ஆண்டு விஜயதசமி நாளில் 'ஸ்கந்தவரோதயக்கல்லூரி' யெனத் தோற்றம் பெற்றது. இன்று தனது நூற்றிப்பதினேழாவது அகவையில் கால் பதித்துள்ளாள் எம்மன்னை. இப்பாட சாலையின் தோற்றப்பாட்டினை ஆராயு மிடத்து நாம் யாழ்மண் தந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரினது காலத்திற்குச் செல்ல வேண்டும். கிறீஸ்தவ மிசனரிமாரினது மதமாற்றச் செயற்பாடுகள் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தவேளையில் அதன் தாக்கத்துக்கு ஈடு கொடுத்துச் சைவச் சிறார்கள் சைவச்சூழலில் கல்வி கற்றலவசியமெனக் கருதிய நாவலர் அவர்கள் தனது நாவன்மையாலும் துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள் மற்றும் பரப்புரைகள் வாயிலாகவும் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையை 1888இல்

நிறுவி, அதனது குறிக்கோளுக்கமையச் செயற்பட்டார். நாவலரினது நன் முயற்சி யால் 1890இல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் நிறுவப்பட்டது.

இச்சபையினது குறிக்கோளால் கவரப் பட்ட கந்தரோடை திரு.கந்தையா உபாத்தி யாயரும் தனது கிராமமாகிய கந்தரோ டையில் இக்கல்விக்கூடத்தைத் தொடங்கி வைத்தார். இவ்வாசிரிய வள்ளலினது உயரிய நோக்கத்திற்கேற்ப அதனது வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கியவர் யாழ்ப்பாணத்தில் நன்கறியப்பட்ட P.S என்றழைக்கப்பட்ட மருத்துவர் திரு. P.சுப்பிரமணியம் ஆவர்.

**ஸ்கந்தாவின் வளர்ச்சிப் பாதையும் உயர்ச்சியும்**

இக்கல்லூரியினது வளர்ச்சி, அதிப ராக 1944ஆம் ஆண்டில் நியமிக்கப்பெற்ற திரு.ஒறேற்ரர்.C. Orator. சுப்பிரமணியம் அவர்களின் வருகையோடு சிறப்புக் காணத் தொடங்கியது. அதிபரினது மதியூகத் தாலும், நிர்வாகச் சிறப்பாலும் ஏற்றங் காணத் தொடங்கிய இக்கல்விக் கூடம் உப அதிபர் V. சுப்பிரமணியம் அவர்களினது அயராது உழைப்பாலும், இன்னும் அவரோ டிணைந்து கல்விச் செயற்பாட்டில் கருத் தூன்றிச் செயலாற்றிய திருவாளர்கள்: S.முருகேசு, T.செல்லையா, P.தம்பிமுத்து, K.அம்பலவாணர், T.T.சங்கரப்பிள்ளை, S.பொன்னம்பலம், V.பீதாம்பரம், S.சேது காவலர், N.சபாரத்தினம், S.இராமநாத பிள்ளை, K.சிவகுமாரன், K.தியாகராஜ பிள்ளை ஆகியோரினது பங்களிப்பில் இன்னும்சிறப்புக்கண்டது. இலங்கையிலுள்ள உயர் கல்லூரிகளினது தரத்திற்கேற்ப கல்வி பயிலும் விளையாட்டிலும் உயர்ச்சி கண்ட இக்கல்லூரி, 1957ஆம் ஆண்டில் அதியுயர் கல்லூரியாக (Super Grade College) உயர்த்தப்பட்டது.

1943ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு நிகழ்வு நினைவுகூரப்படவேண்டிய தொன்றாகும்.

ஸ்தாபகர் திரு.கந்தையா உபாத்தி யாயர் நோய் வாய்ப்பட்டு இருந்தபொழுது திரு.சுப்பிரமணியத்தை (அதிபர் பதவி யேற்க முன்னர் நடந்தவை) தனது படுக்கையருகேயழைத்துக் கூறியவை. in the woed & the Late Principal.

"My memory goed back to the year 1943, when from ..... Kandaiah upathiyayar uttered. There word with team in his eyes told me that the school had been the breadth of his life for well over fifty years; he had reared it more dearhy and fondly than an affectionate mother word her child and that he was entenoting it to me in the full confidence that I looulel fully dedicate myself to its service......

ஸ்தாபகர் எவ்வளவு பரிவுடனும். பாசத்துடனும் தன்பிள்ளையைப் பேணும் தாயைப் போல இக்கல்விக்கூடத்தை நேசித்தாரென்பது மேற்படி கூற்றுக்களின் வாயிலாக யாம் அறியலாம். ஸ்கந்தாவை அரை நூற்றாண்டுக்கு மேலாகக் கட்டிக் காத்த அப்பெருமகன் 1952ஆம் ஆண்டு புரட்டாதித்திங்கள் ஆறாம் நாள் இயற்கை யெய்திய நிகழ்வு இக்கல்லூரியைத் தாயெனப் போற்றும் அன்பர்களுக்குச் சோகந் தோய்ந்த துயரச் செய்தியாகும். இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு பற்பல

ஆசிரியப் பெருந்தகைகள் கடமையாற்றியுள்ளனர். 1950களில் உயர் வகுப்புக்களில் விஞ்ஞானப் பாடங்கள் கற்பிப்பதற்கு பட்டதாரி ஆசிரியப்பற்றாக்குறை நிலவியது. அக்காலத்தில் இந்தியாவிலிருந்து தகுதியான ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டு மாணவர்களுக்குப் போதித்தனர். அவர்கள் சிறந்த கல்விச் சேவையை வழங்கியதோடமையாது விளையாட்டுத் துறையிலும் மாணவர்களைச் செயற் படுத்தினர். திருவாளர்கள் ஸ்ரீநிவாச ஐயங்கார், சிவசுப்பிரமணியம் மேனன் மத்யூஸ் நைனான், டானியல், குருநாத் இராமமூர்த்தி இராஜயப்பன், பிரபாகரன், பங்கஜம் ஆகியோர் குறிப்பிடப்படக் கூடிய இந்தியப் பட்டதாரி ஆசிரியர்கள்.

இன்னும் திருவாளர்கள், சிவசுப்பிரமணியம், அருட்செல்வம், செல்வரத்தினம், நடராஜர், மயிலுப்பிள்ளை, கந்தசாமி, சிவபாதம், கனகசபை போன்ற ஆசிரியர்களும் தம்மாலான கல்விச் சேவையை இக் கல்லூரிக்கு வழங்கினர். மேலும் திரு.V.பொன்னம்பலம் அவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் மதிப்பு வாய்ந்த ஒரு நல்லாசிரியன்; கண்ணியமான அரிசியல்வாதி; பரந்த மானிடப்பார்வையாளன்; ஒரு சிறந்த பேச்சாளர். அத்துடன் தலைசிறந்த மொழி பெயர்ப்பாளருங்கூட. திரு.க.சிவகுமாரன் ஒரு சிறந்த கணித ஆசிரியர். கணிதம் கற்பிப்பது அவருக்குக் கைவந்த கலை. ஒரு சிறந்த நிர்வாகி. வித்துவான் சி.ஆறுமுகம், சுன்னாகம் குமாரசாமிப் புலவரினது மகன் அம்பலவாணர், பண்டிதர்கள் நமசிவாயம், சிவசம்பு ஆகியோர் தமிழையும், பிரம்மஸ்ரீ விஸ்வநாதக் குருக்கள், பிரம்மஸ்ரீ பாலசுந்தரக்குருக்கள் ஆகியோர் தமிழோடு வடமொழியையும் கற்பித்த ஆசிரியப் பெருமக்கள். மேலும் பௌதிக ஆசிரியர் திரு.S.L.துரைராஜா அவர்கள் கண்பார்வையற்ற போதும் எந்தவொரு குறைபாடுமின்றிப் பாடம் போதிப்பதில் கைதேர்ந்தவர். அவரால் பௌதிகம் போதிக்கப்பட்டு இன்று வாழ் வில் உயர்நிலை பெற்ற நூற்றுக் கணக்கான மாணவர்கள் இதற்குச் சாட்சி பகர்வர்.

கல்லூரிக்காரியாலய வேலைகளைக் கண்ணியத்துடனும், கடமைப்பண்புடனும் கவனித்து வந்த 'கிளாக்கர்' கந்தையா அவர்கள். கல்லூரியின் நிதிச்செயலர்; அலுவலக முதல்வர்; கணக்குப் பொறுப்பாளர்; கட்டிட நிபுணர் மாணவர் ஆலோசகர், தனது சொந்தக் குடும்பத்தையும் மறந்து கல்லூரியையே தனது குடும்பமாக நினைத்து அல்லும் பகலும் உழைத்த ஒரு பெருமகன்.

விளையாட்டுத்துறையில் திருவாளர்கள் M.S.செபஸ்தியாம்பிள்ளை, C.தியாகராஜா, முருகையா, திருமதி முருகையா ஆகியோர் தம் பணியைத் திறம்படச் செய்தனர். இன்னும் திருவாளர்கள் S.செல்வரத்தினம் (Lawton) G.N.விஜயரத்தினம் ஆகியோர் ஆங்கிலம் கற்பித்த நல்லாசான்களாவர்.

திரு.விஜயரத்தினம் அவர்களுக்கு ஆங்கில இலக்கியம் கற்பிப்பது ஒரு தனிவிருப்பம். வித்துவான் ஆறுமுகம் அவர்கள் பிரதி வெள்ளிக்கிழமைகளில் தனது கணீரென்ற குரலில் பாடும் திருமுருகாற்றுப்படை ஒரு தனிப்பாணி. அவர் ஆக்கித் தந்த கல்லூரிக்கீதம் ஸ்கந்தா உள்ளளவும் நிலைத்து நிற்குமென்பது உறுதி.

ஐம்பதுகளில் 1957இல் நடைபெற்ற ஸ்கந்த லைற்ஸ் கார்ணிவல் (Skanda Lingts Carnival) யாழ்ப்பாணம் முற்ற வெளி மைதானத்தில் நாற்பது நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்றமை ஒரு வரலாற்றுப் பதிவாகும். அதுபோலவே 1969இல் கல்லூரியின் எழுபத்தைந் தாவது ஆண்டுப் பூர்த்திவிழா, ஸ்தாபகர் கந்தையா உபாத்தியாயர் அவர்களின் நூறாவது ஆண்டுப் பூர்த்தி விழா, அதிபர் V.சுப்பிரமணியம் அவர்கள் ஓய்வு பெறு வதை முன்னிட்டு மிகப்பெரியளவில் நடத்தப்பட்ட கண்காட்சி, கல்லூரி மலர் வெளியீட்டு விழா ஆகியவை நினைவில் வைத்திருக்கவேண்டிய நிகழ்வுப் பதிவு களாகும்.

**ஸ்கந்தாவின் வரலாற்றுப் பாதையில் ...**

**1907:** தற்போதுள்ள பிரதான கட்டடத் திற்கு அடிக்கல் நாட்டல்.

**1912:** பிரதான கட்டடம் நாகநாத முதலி யார் அவர்களால் திறந்து வைக்கப் பெறல்.

**1913:** ஜூனியர் கேம்பிறிட்ஜ் தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவரும் பரீட்சை யில் சித்திபெற்றமை. வடமா நிலக் கல்வியதிபதியாக விளங்கிய K.D.அருள்நந்தி அவர்களும் அவர்களிலொருவராவர்.

**1917:** திரு.P.சபாபதிப் பிள்ளை, V.A.L.T அவர்கள் அதிபராக நியமிக்கப்படல்.

**1919:** கல்வியதிபதி திரு.L.மக்றே. L.Macrae (Director of Education) பாடசாலையைத் தரிசித்தார். கீழ்க்காணும் குறிப்பைப் பதி வேட்டில் எழுதினார். "This is one of the best elementory school, I have seen. The staff is on the whole good and there is exellent tone among the boys."

**1923:** கேம்பிறிட்ஜ் சீனியர் வகுப்புக்கள் ஆரம்பம். சிறியளவில் விஞ்ஞான கூடம் ஸ்தாபிதம். திரு.A.மாணிக்கம் விஞ்ஞான ஆசிரியராக நியமனம்.

**1924:** திரு.S.இளையதம்பி அதிபராக நியமனம்.

**1927:** அண்ணல் காந்தியடிகள் பாட சாலைக்கு வருகை தருதல்.

**1929:** ஸ்தாபகர் திரு.கந்தையா உபாத்தி யாயர் பாடசாலைக்கு நிதி சேக ரிக்கும் பொருட்டு மலாயா வுக்குச் செல்லல்.

**1931:** திரு.இளையதம்பி ஓய்வுபெற்ற திரு.V.முத்துக்குமாரு. M.A.அதிபர் நியமனம்.

**1935:** "ஸ்கந்தவரோதயக் கல்லூரி" யெனப் பெயர் மாற்றம்.

**1938:** திரு.V.முத்துக்குமாரு விலக S.ஸ்ரீநிவாசன் M.A.அதிபர் நிய மனம் பெற்றார்.

**1940:** கல்லூரி தரம் 'b' பாடசாலை யாகத் தரமுயர்த்தப்படல்.

**1941:** முதன் முதலாக கல்லூரி மலர் வெளியிடல்.

**1943:** திரு.A.மாணிக்கம் பதில் அதிபராக நியமனம். பின்னர் S.சிவபாத சுந்தரம் M.A. (கேம்பிறிட்ஜ்) அதிபராக நியமனம் பெற்றார்.

**1944:** திரு.C.சுப்பிரமணியம் (R.A.இலண்டன்) அதிபராகக் கடமையேற்றல். திரு.C.சுப்பிர மணியம் (B.Sc. இலண்டன்) உப அதிபராக நியமனம். அவ்வாண்டு நடைபெற்ற பரிசளிப்பு வைப வத்தில் மாண்பு மிகு கல்விய மைச்சரும், இலவசக் கல்வித்

திட்டத்தின் பிதாமகருமாகிய C.W.W.கன்னங்கரா பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளல்.

**1952:** ஸ்தாகர் கந்தையா உபாத்தியாயர் அவர்களின் மறைவு.

**1955:** யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் தொடர்ச்சியாக 40 நாட்கள் நடைபெற்ற 'ஸ்கந்தா லைற்ஸ் காணிவல்'

**1956:** கொக்குவில் இந்துக் கல்லூரியுடன் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின்போது கோல் காப்பு வீரன் அப்புத்துரை பரமநாதனின் அகால மரணம்.

**1957:** இக்கல்லூரி அதியுயர் கல்லூரியாக (Super Grade School) உயர்வு பெறல்.

**1962:** திரு. ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்கள் ஓய்வுபெற, உப அதிபர் திரு.V.சுப்பிரமணியம் அதிபராக நியமனம் பெறல்.

**1964:** சாரணர் குழுவும், பெண்கள் வழிகாட்டியர் குழுவும் ஆரம்பிக்கப்படல்.

**1968:** கிளாக்கர் கந்தையா அவர்கள் ஓய்வுபெறல்.

**1969:** கல்லூரி 75ஆவது ஆண்டு பூர்த்தி, ஸ்தாபகர் கந்தையா உபாத்தியாயர் அவர்களின் நூறாவது ஆண்டுப் பூர்த்தி அதிபர் திரு.V.சுப்பிரமணியம் அவர்கள் ஓய்வு பெறுவதை முன்னிட்டு நடாத்தப்பெற்ற கண்காட்சி மலர் வெளியீடு ஆகியன இடம்பெற்றமை.

**1970:** திரு.P.ஏகாம்பரம் அவர்கள் அதிபராகக் கடமையேற்றல். இக் காலப் பகுதியில் தொழிற்கல்விப் பாடங்கள் புகுத்தப்பட்டன.

**1971:** விவசாயப் பாடம் அறிமுகம் செய்யப்பட்டது.

**1973:** திரு.P.ஏகாம்பரம் அவர்களை அடுத்து திரு.சச்சிதானந்தம் அவர்கள் அதிபர் பதவியேற்றல்.

**1975:** திரு.சிவகுமாரன் அவர்கள் ஓய்வுபெற திரு.S.நாகரத்தினம் உப அதிபரானார்.

**1976:** திரு.S. சிவகுமாரனின் மறைவு. திரு.C.தியாகராஜா அவர்கள் அதிபராகக் கடமையேற்றல். இக் காலத்தில் கல்லூரியில் முதன்முதலாக இரண்டு மாடிக்கட்டடம் அமைக்கப்பட்டு அதிபர் காரியாலயம் இடம் மாற்றப்பட்டது.

**1981:** திரு.C.தியாகராஜா பதவி உயர்வு பெற்று விலக, திரு.P.நாகரத்தினம் அவர்கள் அதிபரானார்.

**1989:** திரு.P.நாகரத்தினம் அவர்கள் ஓய்வுபெற உப அதிபர் திரு.சே. இராஜவல்லவன் தற்காலிக அதிபராகக் கடமையேற்றல்.

**1990:** திரு.பொன்னம்பலம் அதிபரானார்.

**1991:** திரு.ப.விக்கினேஸ்வரன் அதிபரானார்.

பின்னர் திரு.அ.கமலநாதன் அவர்கள் அதிபராகக் கடமையேற்றார். பின்னர் திரு.க.சிவாஜி அவர்கள் கடமையேற்றார்.

**2008:** திரு.ஆறு.திருமுருகன் அவர்கள் அதிபராகப் பணியேற்றுள்ளார்.

### ஒறேற்றா அதிபர் C. சுப்பிரமணியம் பற்றிச் சில வரிகள்.

1944ஆம் ஆண்டு அவர் அதிபராகப் பதவியேற்றபொழுது 225 மாணவர்களும் 13 ஆசிரியர்களும் 15 வகுப்பறைகளும் கொண்டிருந்த இக்கல்லூரி 1962ஆம் ஆண்டு அவர் இளைப்பாறியபோது 2045 மாணவர்களையும் 61 ஆசிரியர்களையும், 57 வகுப்பறைகளையும் கொண்டு இலங்கை

யின் மிக முக்கிய கல்லூரிகளிலொன்றாக விளங்கியது. அவரின் உயர்ந்த இலட்சியங்களும் மனிதாபிமானமும் சாதிப்பிரிவினைக்கெதிரான அவரினது செயற்பாடுகளும் கீழ்நிலை மாணவர்களின் உயர்வுக்கு அவரினது அயராத அர்ப்பணிப்பும், அன்னாரை கல்வி உலகில் ஒரு கலங்கரை விளக்கமென உயர்த்தியது – வாழ்த்தியது. 'ஸ்கந்தா' எனும் பெருங்குடும்பத்தின் வாழ்விலும் தாழ்விலும் பங்குபற்றிய நிறை பெருமகன் அவர்; அவர் வரித்துக் கொண்ட சில இலட்சியங்களை அவர் கூற்றில் தருகிறேன்.

'The eithos of the school had always been to help pupils from poor and disadvantaged homes.'

I always pleaded the case of the back word.

The splendid principal – pupil – teacher – parent relationship that prevailed always in all fields of activity eusured our success. This was amphy demonstrated at all school stunction.

The school was one community bond be love, good fellowwship and brothor hood....'

காலத்துக்குக் காலம் இப்பாடசாலை விழாக்களில் பங்குபற்றிச் சிறப்புச் செய்த தென்னிலங்கைக் கல்வியாளர்கள் வருமாறு: திருவாளர்கள் வில்மட் பெரேரா, கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அதிபர் S.A.விஜயதிலகா ஜனாப், A.M.A அஸீஸ் (A.M.A.Azeez) E.B. விக்கிரமநாயக்கா Q.C. இலவசக் கல்வித் தந்தை கலாநிதி C.W.W.கன்னங்கரா, கலாநிதி ஆனந்த குருகே, ஜனதாச சமரக்கொடி, கலாநிதி G.P.மல்லசேகரா, ஷேர்ளி. S.C. கொரியா (Shirley S.c. Corea) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.


பற்பல தொழில்சார் வல்லுநர்களாகிய வைத்திய கலாநிதிகள், பொறியியலாளர்கள், சட்ட வல்லுநர்கள், கணக்காளர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பொருளியல் வல்லுநர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் ஆகியோரை இக்கல்விக்கூடம் தோற்றுவித்துள்ளமை யாவரும் அறிந்ததே.

இக் கலைக்கோயில் பல்லாண்டு, பல்லாண்டு காலம் கல்விப்பணி புரிய நல்லைக்குமரனை நெஞ்சார இறைஞ்சுகின்றேன்.

♣ ♣ ♣

Life is as tedious as a twice-told tale
Vexing the dull ear of a drowsy man.

- William Shakespeare,
*"King John", Act 3 scene 4*



# ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சி

ம.பா.மகாலிங்கசிவம்
*ஆசிரியர்*
*யாழ் /ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.*

ஆங்கில மொழிச் செல்வாக்கினாலே தமிழில் அறிமுகமாகிய நவீன இலக்கிய வடிவங்களாக நாவல், சிறுகதை, என்பன விளங்குகின்றன. தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரம் 1879 ஆம் ஆண்டிலேயே வெளிவந்துவிட்டபோதும் தமிழ்ச் சிறுகதைகளின் வருகை 1920 களிலேயே இடம்பெறுகின்றது.

ஆங்கில மொழிக் கல்வியினூடாக ஆங்கிலம் முதலிய மொழிகளிலுள்ள சிறுகதைகளை வாசித்தவர்கள் தாமும் அவை போலத் தமிழில் எழுத முயன்றமையே தமிழ்சிறுகதைகளின் தோற்றத்துக்கு முக்கிய காரணமாகியது. இவ்வகையிற் பாரதியார், வ.வே.சு.ஐயர். மாதவையா ஆகிய மூவரும் சிறுகதை என்னும் இலக்கிய வடிவத்தைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தினர். இதனால் இம்மூவரும் தமிழ்ச்சிறுகதை முன்னோடிகளாகக் கருதப்படுகின்றனர். இவர்களுள் வ.வே.சு.ஐயரே ஓரளவிற்கேனும் தரமான சிறுகதைகளை எழுதினார்.

தமிழ்ச்சிறுகதை வளர்ச்சி 1920களில் ஆரம்பித்துவிட்டபோதும் முப்பதுகளிலேயே தரமான சிறுகதைகள் வெளிவரத் தொடங்கின. இக்காலப்பகுதியில் வெளிவந்த மணிக்கொடி சஞ்சிகை இத்தகைய முயற்சிகளுக்கு இடமளித்துச் சிறுகதை வளர்ச்சியை ஊக்குவித்தது. இதனால் மணிக்கொடி காலம் தமிழ்ச் சிறுகதையின் பொற்காலம் எனப் போற்றப்படுகின்றது. இக்காலச் சிறுகதை எழுத்தாளர்களிலே தமிழ்ச் சிறுகதையின் முடிசூடாமன்னன் எனக் கருதப்படும் புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபாலன், பிச்சமூர்த்தி, மௌனி ஆகியோர் முக்கியமானவர்கள்.

இவ்வாறு தமிழகத்திலே சிறுகதை வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருந்த வேளை அதன் பாதிப்பினால் ஈழத்தவர்களும் சிறுகதைகளை எழுதத் தொடங்கினர். முப்பதுகளின் பின் அரைப்பகுதியிலிருந்து இலங்கையர்கோன், சி.வைத்திலிங்கம், சம்பந்தர் ஆகிய மூவரும் சிறுகதைகளை எழுதத் தொடங்கினர். இம்மூவரையும் ஈழத்துச்சிறுகதை முன்னோடிகள் என்று போற்றும் மரபு உள்ளது. இதேவேளை இவர்களுக்கு முன்னர் 1931 இல் கோ.நடேசையர் எழுதிய "திரு. இராமசாமி சேர்வையின் சரிதம்" என்னும் சிறுகதை தற்போது கிடைத்துள்ள நிலையில் அவரும் ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளில் ஒருவராகக் கொள்ளப்படுகின்றார்.

இலங்கையர்கோன், சி.வைத்திலிங்கம், சம்பந்தன் ஆகிய மூவரினதும் சிறுகதையாக்க முயற்சிகளுக்கு இலட்சியக் கனவுகளும் எதையாவது எழுத வேண்டும் என்ற உள்தூண்டலும் காரணமாக அமைந்தன. ந. சிவஞானசுந்தரம் என்ற இயற்பெயர் கொண்ட இலங்கையர்கோன் முப்பது சிறுகதைகள் வரை எழுதியுள்ளார். இவரது 15 சிறுகதைகளடங்கிய தொகுப்பு நூல் வெள்ளிப் பாதசரம் என்ற பெயரில் வெளிவந்துள்ளது. கு.ப.ராஜகோபாலனைத் தமது ஆதர்ச எழுத்தாளராகக் கொண்ட

இவர் பாலியல் சித்திரிப்புக்களைக் கொண்ட கதைகளையும் எழுதினார். இவரது வெள்ளிப்பாதசரம், முதற் சம்பளம், முதலிய கதைகள் சமூகக் கதைகளாகவும் மேனகை, தாய், யாழ்பாடி, மரியாமதலேனா முதலிய கதைகள் வரலாற்றுக்கதைகளாகவும் அமைந்துள்ளன.

சி.வைத்திலிங்கம் 25 கதைகள் வரை எழுதியுள்ளார். கிராமிய சூழ லைத் தமது கதைகளிற் கொண்டு வருவதிலும், மென்மையான மனவுணர்வுகளைச் சித்தரிப்பதிலும் இவர் வல்லவராக விளங்கினார். மூன்றாம் பிறை, கங்காகீதம், பாற்கஞ்சி. பிச்சைக்காரன் என்பவை இவர் கதைகளிற் சிறந்தவை ஆகும். கங்காகீதம் இவரது சிறுகதைகளின் தொகுப்பு நூலாகும்.

1940கள் ஈழத்துச் சிறுகதைகள் புதிய வளர்ச்சிகளைப் பெறும் கால மாக உள்ளது. 1943 ஆம் ஆண்டு வரதர் முதலியோரது ஒத்துழைப்புடன் தமிழ் இலக்கிய மறு மலர்ச்சிச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கத்தவர்கள் மறுமலர்ச்சி எனும் சஞ்சிகையை வெளியிடத் தொடங்கினர். இவர்கள் நவீன இலக்கிய வளர்ச்சியில் ஆர்வம் செலுத்தியதால் ஈழத்துச் சிறுகதைத்துறையிலும் வளர்ச்சி ஏற்பட்டது. ஈழகேசரி பத்திரிகையும் இக்கால எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தது. வரதர், அ.செ.முருகானந்தன், அ.ந.கந்தசாமி, தாளையடி சபாரத்தினம், சு.வேலுப்பிள்ளை ஆகியோர் இக்கால எழுத்தாளர்களுட் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களுள் அளவெட்டியைச் சேர்ந்த அ.செ.முருகானந்தன் தமக்கெனத் தனியானதோர் இடத்தினைப் பெற்றுக் கொண்டவர். தமது கதைக்கான களமாக யாழ்ப்பாணத்தை மட்டும் கொள்ளாது திருகோணமலை, மலையகம், கொழும்பு எனப் பல பகுதிகளையும் அமைத்துக் கொண்டவர். நூற்றுக்கு மேற்பட்ட கதை களை எழுதியுள்ள இவரது கதைகளில் மனிதமாடு, பழையதும் புதியதும், வண்டிச் சவாரி, என்பவை குறிப்பிடத்தக்கவையா கும். மனிதமாடு, அ.செ.முருகானந்தனின் கதைகள் என்னும் இரு தொகுதிகளாக இவரது கதைகள் வெளிவந்துள்ளன.

ஈழத்துத் தமிழ்ச்சிறுகதை உலகில் முதன் முதலில் மாக்சிசக் கண்ணோட் டத்தைப் புகுத்தியவர் அளவெட்டியைச் சேர்ந்த அ.ந.கந்தசாமியே. இவரது கதைகளில் நாயினும் கடையர். இரத்த உறவு, சந்திப்பு, நள்ளிரவு முதலியன குறிப்பிடத்தக்கவையாகும். வரதரின் சிறுகதைகள் கயமை மயக்கம் என்னும் தொகுதியாக வெளிவந்துள்ளன.

1950 ஈழத்து அரசியல், சமுதாய வரலாற்றில் முக்கியமான கால கட்ட மாகும். சிங்களம் மட்டும் சட்டத்தால் உருவான இனரீதியான முரண்பாடுகளும், சாதீய அடிப்படையில் அமைந்த சமூக ரீதி யான முரண்பாடுகளும் முனைப்புப் பெற்ற காலமாக இக்காலம் உள்ளது. 40களில் எழுதிய எழுத்தாளர்கள் இக்காலத்தில் வளர்ச்சி பெறுவதுடன் அகஸ்தியர், காவ லூர் இராசதுரை, ஈழத்துச் சோமு, நீர்வை பொன்னையன், நந்தி, அ.முத்துலிங்கம், முதலிய புதிய எழுத்தாளர்களும் சிறு கதைத்துறைக்கு அறிமுகமாகின்றனர்.

50களின் சிறுகதைப் போக்குகள் 60களிலும் தொடர்ந்து வளர்ச்சியடை

கின்றன. இக்காலத்தில் இலங்கைப் பல்கலைக்கழகங்களிலிருந்து புதிய எழுத்தாளர்கள் சிறுகதை உலகிற்கு வந்தது இன்னொரு முக்கிய அம்சமாகும். தாய் மொழி மூலம் பல்கலைக் கழகக் கல்வியைப் பெறத் தொடங்கிய இப்புதிய பரம்பரையினர் கல்வி கற்றுக் கொண்டிருந்த வேளையிலேயே சிறு கதைத்துறையிலும் ஈடுபாடு கொள் கின்றனர். செ.கதிர்காமநாதன், செ.யோக நாதன், செம்பியன் செல்வன், செங்கை யாழியான், யோ.பெனடிக்ற் பாலன் முத லியோர் இவ்வகையில் குறிப்பிடத்தக் கவர்கள். இவர்களிற் பலர் அண்மைக் காலம் வரை ஈழத்தின் முக்கிய சிறுகதை எழுத்தாளர்களாக இருந்ததும் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1970கள் மேலும் பல புதிய அனுப வங்களைச் சுமந்து கொண்டு சிறுகதை வளர்ச்சியின் புதிய கட்டமாக விளங்கு கின்றது. இன்னுமொரு புதிய பரம்பரை இத்துறையில் பிரவேசித்தது. தெணியான், முருகபூபதி, சட்டநாதன், உமாவரத ராஜன், அ.யேசுராஜா, திக்குவல்லை கமால் ஆகியோர் இக்காலச் சிறுகதை எழுத்தாளர்களிற் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியோராவர். இவர் களுள் சட்டநாதன், உலா, சட்டநாதன் கதைகள், புதிய பார்வைகள் ஆகிய சிறு கதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். அ.யேசுராஜா தமிழக எழுத்தாளரான லா.ச.ராமாமிர்தத்தைப் போலத் தனிமனித உணர்வு நிலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கதைகளை எழுதினார்.

80களின் பின்னர் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளிற் புதிய போக்குகளும் வளர்ச்சிகளும் ஏற்படத் தொடங்கின. இனப்பிரச்சினை முறுகலடைந்து இனக் கலவரமாக மாற்றமடைந்ததும் மக்கள் அகதிகளாக்கப்பட்டு நாட்டினுள்ளேயும் புலம் பெயர் தேசங்களுக்கும் செல்ல வேண்டியேற்பட்டது. இயக்கப் போராட் டங்கள், இராணுவரீதியான அடக்கு முறைகள் என்பன வலிமை பெற்றதுடன் சாதியப்போராட்டங்களும், பெண்ணி யச்சிந்தனைகளும் இக்கால இலக்கி யங்களைப் புதிய பாதையில் திருப்பி விட்டன. வீரகேசரி, தினகரன், ஈழநாடு, ஈழமுரசு, முரசொலி, உதயன், திசை ஆகிய பத்திரிகைகளும் மல்லிகை, சிரித்திரன், தாயகம், வெளிச்சம் முதலிய சஞ்சிகை களும் இக்காலத்திலே பெருந்தொகை யான சிறுகதைகள் வெளிவருவதற்குக் களம் அமைத்துக் கொடுத்தன.

இக்கால எழுத்தாளர்களுள் டொமி னிக் ஜீவா, தெணியான், நந்தி, வ.அ. இராசரத்தினம், தெளிவத்தை ஜோசப், செ.குணரத்தினம், பொ.ரஞ்சகுமார், தாம ரைச்செல்வி, கோகிலா மகேந்திரன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மகா ஜனக் கல்லூரியின் பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியையுமான திருமதி. கோகிலா மகேந்திரன் பெண்ணியம் சார்பான, பெண்கள் சமூகத்தில் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான கதைகளையே அதிகம் எழுதியுள்ளார். இக்காலப்பிரிவில் இனப் பிரச்சினை தொடர்பாக வெளிவந்த முதலாவது கதையாக 1+1=1:1-1=2 என்ற வ.அ.இராசரத்தினத்தின் கதையைக் குறிப்பிடலாம். கண.மகேஸ்வரனின் எல்லை வேம்பு ச. முருகானந்தனின் ஒரு கிராமத்தின் கதை என்பன தமிழ்ப் பிரதேசத்தில் நிறுவப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் பற்றிக் கூறுகின்றன.

இலங்கையிலே மலையகப்பகுதி தனக்கெனத் தனியான பிரதேசத்தையும், பண்பாட்டம்சங்களையும் கொண்டுள்ளது. இதனால் மலையக இலக்கிய வரலாற்றைத் தனித்து ஆராயும் வழக்கம உள்ளது. மலையகத்திற் சிறுகதைத்துறையில் ஈடுபட்டவர்களை இருவகையினராகப் பிரிக்கலாம்.

1. மலையகத்தையே பிறப்பிடமாகக் கொண்டவர்கள்; என்.எஸ்.எம் ராமையா, தெளிவத்தை ஜோசப், சாரல்நாடன், பொ.கிருஸ்ணசாமி முதலியோர் இப்பிரிவில் அடங்குவர்.
2. வேறிடங்களைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்ததுடன் தொழில் நிமித்தமாக மலையகத்துக்குச் சென்றவர்கள்; நந்தி, தி.ஞானசேகரன், செ.கணேசலிங்கன், வ.அ. இராசரத்தினம், புலோலியூர் க.சதாசிவம் போன்றோர் இப்பிரிவினர்.

இவர்களது சிறுகதைகள் தோட்டத் தொழிலாளரின் வறுமை, அறியாமை, இருப்பிட வசதிக்குறைவு, அதிகாரிகளின் கெடுபிடி என்பவற்றைச் சித்திரிப்பனவாக அமைந்தன.

ஈழத்துச் சிறுகதைகளின் ஒரு பிரிவாகப் புலம்பெயர் சிறுகதைகளும் அடங்குகின்றன. இந்நாட்டில் இடம்பெற்ற இராணுவத் தாக்குதல்கள், இயக்க முரண்பாடுகள், என்பவற்றினாலும் பொருளாதார நிலையை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கோடும் ஈழத்தமிழர்களிற் பெருந்தொகையினர் கனடா, பிரிட்டன், பிரான்ஸ், சுவிஸ், அவுஸ்திரேலியா முதலிய பலநாடுகளுக்கும் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து சென்றுள்ளனர். இவர்கள் கவிதை, சிறுகதை, நாவல் முதலிய இலக்கியத்துறைகளிலே தமது பங்களிப்பை நல்கி வருகின்றனர். இவர்களின் இலக்கியங்களிலே,

1. இழந்து போன தமது தாய்த் தேச வாழ்க்கையை எண்ணி ஏக்கங்கள்
2. புதிய பண்பாட்டுச் சூழலில் தாம் எதிர்கொண்ட பிரச்சினைகள் தொடர்பான அதிர்வுகள்.

என்பன பொதுவாகச் சித்திரிக்கப்பட்டன. புலம் பெயர் சிறுகதை எழுத்தாளர்களில் அ.முத்துலிங்கம், சக்கரவர்த்தி, ஷோபாசக்தி, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். ஷோபா சக்தியின் தேசத்துரோகி சிறுகதைத்தொகுதி, கதை சொல்லும் முறை, நுட்பம் என்பவற்றில் இதுவரை இருந்து வந்த சிறுகதை மரபில் புதிய வளர்ச்சியைப் பிரதிபலிப்பதாக உள்ளது. பொ.கருணாகரமூர்த்தியின் அகதி உருவாகும் நேரம், றியாஸ் குரானாவின் பெருவெளி, திசேரவின் கபாலபதி, வெள்ளைத்தோல், சக்கரவாத்தியின் யுத்தத்தின் 2ஆம் பாகம், விமல் குழந்தைவேலின் அகதி, குமார் மூர்த்தியின் குமார் மூர்த்தி கதைகள், அம்ரிதா ஏகத்தின் விலங்குகள் தொகுதி ஒன்று அல்லது விலங்கு நடத்தைகள் என்னும் சிறுகதைத் தொகுதிகள் முக்கியமானவையாகும்.

தொகுத்து நோக்கின் 1930களில் சிறுகதை பற்றிய தெளிவான பிரக்ஞையுடன் ஆரம்பித்த ஈழத்துச் சிறுகதை வரலாறு இன்று உருவத்திலும் உள்ளடக்கத்திலும் பல்வேறு புதிய பரிமாணங்களைப் பெற்றபடி வளர்ச்சி அடைந்து செல்கின்றமை தெளிவாகின்றது.

♣ ♣ ♣

# நீர் மாசடைதல்

மனிதனின் வாழ்வில் அத்தியாவசியமான தேவைகளில் நீரானது பெரும் பங்கினை வகிக்கின்றது. ஆனால் இன்றோ மனித தேவைக்கான நீரின் அளவு படிப்படியாகக் குறைந்து வருகிறது. இதற்குப் பிரதான காரணி மனித செயற்பாடுகள் என்பது மறுக்க முடியாத உண்மை.

நீர் மாசடைதலை நகர்சார் நீர் மாசடைதல், கிராமம்சார் நீர் மாசடைதல் என இரு வகையாகப் பிரிக்கலாம். இதற்குப் பிரதான காரணமாக அமைவது கைத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படுகின்ற இரசாயனச் சேர்வைகள் ஆகும். இவை சேர்ந்த நீரானது நேரடியாக நீர்நிலைகளில் கலப்பதால் நீர் மாசடைகின்றது. கிராமம்சார் நீர் மாசடைவதில் பெரும்பங்கு வகிப்பது நவீன விவசாய முறையாகும். அதாவது பயிர்ச்செய்கைக் காணிகளில் தெளிக்கப்படும். பீடை கொல்லிகள், களை கொல்லிகள் மற்றும் பசளைகள் போன்ற இரசாயனச் சேர்வைகள் நீருடன் கலந்து நிலக்கீழ் நன்னீரினைச் சென்றடைவதன் மூலம் கிணற்றடி நீர் மாசடைகின்றது.

இது மட்டுமல்லாமல் மனிதனால் சூழலில் விடுவிக்கப்படும் பொருட்கள், விலங்குக் கழிவுகள், எண்ணெய் வகைகள், இரசாயனப் பொருட்கள், காபன் சேர் பொருட்கள், கதிரியக்கம் கொண்ட கழிவுப் பொருட்கள் போன்றவற்றினாலும் நீர் மாசடைகின்றது. அத் தோடு எரிபொருட்களின் தகனம் காரணமாக வளிமண்டலத்தில் விடுவிக்கப்படுகின்ற சல்பர் டைஒட்சைட் ($SO_2$) நைதரசன் ஒட்சைட் ($NO_2$) போன்ற வளியை மாசுபடுத்தும் காரணிகள் மழைநீருடனான தாக்கத்தினால் அமிலங்களாக மாறி ($HNO_3$, $H2SO_4$) மீண்டும் புவிப்பரப்பை வந்தடைந்து நீர் நிலைகளை அடைவதனால் நீர்நிலைகள் அமிலங்களாக மாறிப் பயன்படுத்த முடியாத நிலையை அடைகின்றன.

மிகப் பெரிய அளவில் காபன் குப்பைகளை நீர்நிலைகளில் போடுவதனால் காபனை சக்தி முதலாகக் கொண்ட பக்றீரியாக்களின் துரித வளர்ச்சி உருவாகிறது. இப் பக்றீரியாக்களினால் நீர்நிலைகளில் உள்ள காபன் பொருட்களை உக்கச் செய்வதற்காக உயிரியல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இச் செயற்பாட்டிற்கு நீரில் உள்ள ஒட்சிசனை பயன்படுத்துவதால் நீரில் ஒட்சிசனின் அளவு குறைவடைகின்றது. இதனால் ஏனைய நீர்வாழ் உயிரினங்கள் அந்நீர்ச் சூழலில் வாழ முடியாது அழிவடைகின்றன. அத்தோடு நீரிலே துர்நாற்றமுடைய வாயுக்கள் வெளிவிடப்படுகின்றன. இதன் போது நீர்மங்கல் தன்மை அடைந்து நீரினுள் ஒளி செல்லும் அளவு குறைக்கப்பட்டு நீர்வாழ் பச்சைத் தாவரங்களின் ஒளித்தொகுப்பு குறைக்கப்படுவதனால் நீர்த்தொகுதியின் முதல்நிலை உற்பத்தி குறைவடையத்தக்க வகையிலான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இதனால் பாவனைக்குரிய நீரின் அளவு படிப்படியாக குறைவடைந்து 2025 இல் நீருக்கான கேள்வி ஈடுசெய்ய முடியாத இலக்காக மாறிவிடும். எனவே நீர் நிலைகளில் குப்பைகளை போடுதல், கைத்தொழில் கழிவுப் பொருட்களை நீரில் விடுதல், தேவையற்ற வகையில் நீரை வீண்விரையம் செய்தல் மூலமும் நவீன விவசாய வளமாக்கிகளை பயன்படுத்துவதன் மூலம் பயிர்ச்செய்கை காணிகளை பாதுகாப்பதோடு, நிலக்கீழ் நீரினையும் பாதுகாக்கலாம். இதன் மூலம் எதிர்காலச் சந்ததியினரின் நீருக்கான கேள்வியைக் குறைத்து உலகைப் பாதுகாப்போம்.

**கு. திருலிங்கன்**
*2009 Sc*

# வெற்றி பெற்ற தேசத்தைச் சிறுவர்களுக்காகக் கட்டியெழுப்புவோம்

இன்றைய நாட்டின் சிறுவர்கள் நாளைய உலகின் தலைவர்கள் என் றார்கள் கற்றறிந்தோர். இது இன்றைய இளம் பராயப் பிஞ்சுகளே நாளைய இவ்வுலகை ஆளப் போகிறார்கள் என்பதை உரைக்கிறது. நாட்டின் எதிர்கால அபி விருத்தியில் சிறுவர்களின் உடல் உள ஆரோக்கியத்தை கட்டியெழுப்பும்போது அவர்கள் நற்பிரஜையாகிறார்கள்.

ஒரு மனிதனது வாழ்வில் சிறுவர்ப் பருவம் முக்கிய பங்காற்றுகிறது. சிறு வயதில் அவன் எவ்வணுகுமுறையில் கையாளப் பட்டானோ அவ்வகையிலேயே அவன் எதிர்காலம் அமைந்திருக்கும். எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவன் நல்ல வனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே. ஒரு குழந்தை தாயால் அந்நாட்டினால் எவ்வாறு வளர்க்கப் படுகிறதோ அவ்வகையிலேயே அக் குழந்தையின் எதிர்கால சுபீட்சம் அமைந்திருக்கும்.

சிறுவன் ஒருவனின் நல்வாழ்வுக்கு அவனது உடல், உள, சமூக ஆரோக் கியம் முக்கியமானதே. அவன் எவ்வகையான சூழலில் எவ்வணுகு முறையில் வளர்க்கப் படுகிறானோ அதுவே அவன் நற்பிரஜை யாவதற்கு வழிசெய்யும். சிறுவன் நற் பிரஜையாவதற்கு அவனது உளநல ஆளுமையே முக்கிய பங்காற்றுகிறது.

"தனி மனிதனுக்கு, உணவு இல்லை யெனின் ஜெகத்தினையே அழித்திடு வோம் என்றான் பத்தொன்பதாம் நூற் றாண்டின் புரட்சிக்கவி பாரதி. அன்றைய உலகிற்கு மட்டுமல்ல இன்றும் எம்ம வர்க்கு சுதந்திரம் முக்கியமான ஒன்று.

சிறுவர்களாகிய நாம் சுதந்திரமான முறையில் பாகுபாடற்ற கல்வியைப் பெறும் போது எமது ஆளுமை வெளிப் படுத்தப்படுகிறது. மனிதனை முழுமை யாக்கும் கல்வியை நாட்டின் சிறுவர்கள் பெற்றுக்கொள்ளும் போது சிறந்த எதிர்கால சமுதாயம் உருவாகும் என்பதில் ஐயமேதுமில்லை.

சிறுவர் அபிவிருத்தியில் சிறுவர்கள் துஷ்பிரயோகம் பாரிய தடைக்கல்லாகும். சிறுவர்களை வேலைக்கமர்த்துவது, பாலியல் துஷ்பிரயோகம், என்பவை சிறுவர்களது சுதந்திரத்திற்கு தடை விதிப்பன. அவை மட்டுமல்ல சிறுவர்களை தீயவழிக்கு ஆட்படுத்தல், யுத்தம், என்பன சிறுவர்களின் மனவளர்ச்சியில் ஊனம் விளைவிப்பவை ஆகும். யுத்தத்தின் போதான சிறுவர் துஷ்பிரயோகங்கள். சிறுவர்கள் உரிமை மறுப்பு என்பன எதிர்கால தேசத்திற்குப் பாரிய அச்சு றுத்தல் விளைவிப்பன.

தற்காலத்தில் எம்மவர்கள் யுத் தத்தின் அகோர பிடியிலிருந்து விடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். யுத்தத்தின் பிடியில் சிக்குண்ட எம்சிறுவர்களுக்கு உடல், உள, ஊக்கம், அளித்து அவர்கள் மீள்வாழ்வைப் பெற்றுக் கொடுத்தல் அவசியமானதொன்றாகும். இதன்

மூலமே அமைதியான எதிர்காலம் பிர சன்னமாகும்.

மாதவம் செய்து பெற்ற மனித வாழ்விலே சிறுவர்கள் சிற்பம் போல் செதுக்கப்பட வேண்டியவர்கள். இதன் மூலம் எதிர்கால நம்தேசம் சிறுவர்களின் தெளிந்த அறிவாலும் சிறந்த ஆளுமை யாலும் கட்டியெழுப்பப்படும். சிறுவர் களை சிறப்புடையவர்களாக வளர்க்கும் போதே இது சாத்தியமாகிறது. நாட்டின் சுபீட்சமான எதிர்காலத்தைச் சிறுவர்கள் தாங்கிப் பிடிக்க வழிசெய்யும் போது நாடு நலமும் வளமும் பெற்று அபிவிருத்தி பாதையை நோக்கி நடைபோடும் என்பதில் ஐயமேதுமில்லை.

வி. திவாகரன்
$10^{A}$

## எங்கள் ஆசான்கள்

பள்ளிக்கூட வாழ்க்கையிலே
பாடம் சொல்லித் தருபவர்கள்
நல்ல எங்கள் ஆசான்கள்
நாளும் அவரைப் போற்றிடுவோம்

எம்மை வாழ்வில் உயர்த்திடுவோம்
நல்ல எங்கள் ஆசான்கள்
அவர்களை என்றும் மதித்திடுவோம்
நாளும் அவரைப் போற்றிடுவோம்

துள்ளி ஓடும் எங்களினைத்
தூக்கி எடுத்து அரவணைத்து
சொல்லி வைத்த அறிவுரைகள்
என்றும் எமக்கு துணையாகும்.

க. நேர்த்திகா
$11^{A}$

Hatred does not cease by hatred, but only by love; this is the eternal rule.

***- Buddha***

# நுண்ணறிவு

பொதுவிவேகம் அல்லது நுண்ணறிவு என்னும் சொற்றொடர் இன்று பல துறைகளிலும் பயன்படுத்தப்படுகின்றது. நுண்ணறிவு தொடர்பான ஆய்வுகள் இன்று பல்வேறு துறைகளிலும் முக்கியத்துவம் உடையனவாக மாறி வருகின்றன. ஒவ்வொருவரிடையேயும் உற்றறியப்படாத அல்லது அளவிடப்பட முடியாத மாறுபடு மதிப்பினைக் கண்டறிவதற்கு பயன்படுத்தப்படும் சொற்றொடரே நுண்ணறிவு (General intelligence) எனலாம்.

அல்பிறேட் பீனே (Alfred pinet) என்பவரே முதன் முதலாக இதனை அறிமுகப்படுத்தியவர் ஆவார். இதன் பின்னர் இது போன்ற பல்வேறு பொது விவேகம் தொடர்பான பரீட்சைகள் வெளிவரத் தொடங்கியுள்ளமை மாத்திரமன்றி அவை இன்று பெருமளவு வளர்ச்சி அடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பல்வேறு துறைகளிலும் பொதுவிவேகம் தொடர்பான பரீட்சைகள் இன்று இன்றியமையாதனவாய் உள்ளன.

ஒரு மனிதனின் இயல்பான ஆற்றல் பொதுவிவேகம் ஆகும். அறிவும் விவேகமும் ஒன்றுடன் ஒன்று நேரடித் தொடர்புடையன அல்ல. அறிவாளி விவேகியாக இருக்கலாம். ஆனால் விவேகிகள் அனைவரும் அறிவாளிகள் என வரை யறை செய்ய முடியாது. விவேகம் அறிவில் இருந்து வேறுபட்ட தொன்றாகும். இவ்வகையில் நுண்ணறிவு என்பது ஒருவகை விழிப்புணர்ச்சி என வரையறை செய்யலாம்.

நான்கு அடிப்படை இயல்பினை உள்ளடக்கியதாக பொதுவிவேகம் காணப்படுகின்றது. குறிப்பிட்ட விடயத்தை மிக விரைவாக விளங்கிக் கொள்ளுதல் அவற்றை நினைவில் வைத்திருத்தல். நினைவில் வைத்திருக்கும் விடயங்களைத் தேவைக்கேற்ப பகுப்பாய்வு செய்தல். இவ்வாறு ஆராய்ந்த உண்மைகளை விளக்குதல் ஆகிய நான்கு அம்சங்களை உள்ளடக்கிய ஒரு ஆற்றலே பொது விவேகம் ஆகும்.

ஒருவரது உள ஆற்றலை அளவிடவே இத்தகைய நுண்ணறிவுப் பரீட்சைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒருவரது உள ஆற்றல் பல்வேறு காரணிகளால் பாதிப்படைகின்றது. பிள்ளை வளர்ப்பு முறை, இனம், கலாச்சார வேறுபாடுகள், கல்வி, தேகாரோக்கியம், வர்க்கப் பின்னணி, போன்ற பல காரணிகளால் பாதிப்பு ஏற்படலாம். எந்த ஒரு மனிதனும் ஏதோ ஒருதுறையில் ஆற்றல் உடையவனே. ஆனால் இத்தகைய சிறப்பான ஆற்றலிலும் பார்க்க பொதுவான. ஆற்றலே சிறந்த தாகக் கருதப்படுகின்றது. குறித்த ஒரு துறையில் மாத்திரம் ஆற்றல் உடைய ஒருவரின் பெறுபேறுகளிலும் பார்க்க எல்லாத் துறைகளிலும் சாதாரண பெறு பேறு உடையவரின் ஆற்றல் கூடுதலான தாகக் காணப்படும். ஆகையால் எல்லாத் துறைகளிலும் ஆற்றல் உடையவரைத் தான் உண்மையான விவேகியாகக் கருதலாம்.

நீண்டகாலமாக பொது விவேகத்தை அளவிட விவேக ஈவு (Intelligence

quotient) என்னும் முறை பின்பற்றப்பட்டு வருகின்றது. ஆனால் இன்று வேறு பல முறைகளும் பொது விவேகத்தை அளக்கப் பயன்படுகின்றன. உளவயதையும் கால வயதையும் அடிப்படையாக கொண்டே இக்கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கால வயதிலும் பார்க்க உள வயது கூடுதலாக அமையும்.

$$\text{விவேக ஈவு} = \frac{\text{உளவயது}}{\text{காலவயது}} \times \text{பெற்ற புள்ளிகள்}$$

என்னும் சூத்திரத்தின் மூலம் நுண்ணறிவை அறிந்து கொள்ளலாம்.

**க. தனுசன்**
*2009 விஞ்ஞானப் பிரிவு*

# நிஷா

மேகங்கள் கூடிச் சத்தமிட்டன
மின்னல்கள் கூடி வெளிச்சமிட்டன
ஆனால் நீ தான் வருவாய் என
எனக்குத் தெரியாது போலும்

காலையில் எழுந்தால் வீட்டிற்குள்
கடல் போல் தண்ணீர்
ஏன் வந்தாய் என்று யார் கேட்பது
நீ இப்படிக் கொடியவளா நிஷா?

எத்தனை பேரை நீந்தவிட்டாய்
எத்தனை மரங்களைச் சரித்து விட்டாய்
எத்தனை பொருட்களை நீந்தவிட்டாய் – அப்படியானால்
நீ கொடியவளா நிஷா.........

சுனாமி வந்து எல்லோரையும் கொண்டு சென்றது
நீ எல்லோரையும் நீந்த விடுகிறாயா?
ஏன் இப்படிச் செய்தாய்
ஒரு இரவிற்குள் இப்படிச் செய்து விட்டாயே
எங்கே இருந்து வந்தது இவ்வளவு துணிவு

மழை முத்துக்களின் துளிவிழுந்து இப்படி வந்ததா
அல்லது நீ செய்த சூழ்ச்சியின் வினையா இது
சொல் நிஷா சொல்.

**யோ. உஷாந்தினி**
*2011 கலைப் பிரிவு*

# ஐசாக் நியூட்டன் (1642 – 1727)

- இவர் ஆங்கில தேசத்தைச் சேர்ந்த பௌதீக, வானியல் விஞ்ஞானியும் கணிதப் பேரறிஞரும் ஆவார்.
- தோட்டம் ஒன்றில் அப்பிள்பழம் கீழ்நோக்கி விழுவதை அவதானித்த நியூட்டன், பழங்களும் பொருட்களும் கீழ் நோக்கி விழுவதேன் அவை ஏன் மேல் நோக்கிச் செல்லவில்லை எனும் வினாவை எழுப்பி ஆராய்ச்சி மூலம் புவியீர்ப்பு விதியைக் கண்டுபிடித்தார்.
- நுண்துகள் கொள்கை எனும் ஒளிக் கொள்கையை வெளியிட்டார். ஒளி மிகவும் நுண்ணிய துகள்களினால் ஆனது என்பதையும் அடிப்படையாகக் கொண்டது இக் கொள்கை ஆகும்.
- வகையீட்டு நுண் கணிதத்தை கொப்பனிக்கசின் கோட்பாடுகள், கெப்லரின் கருத்துக்கள், ஈர்ப்புத் தொடர்பான கலிலியோவின் விதிகள் என்பவற்றை ஒன்றிணைந்து கணித ரீதியான பரிசோதனை முறைகளை பயன்படுத்தி இயக்கம் பற்றிய 3 விதிகளையும் கொள்கைகளையும் கண்டுபிடித்தார். இவரது அசைவு பற்றிய 3 விதிகள் பின்வருமாறு.
    1. ஓய்வில் இருக்கும் பொருள் அல்லது சீரான வேகத்தில் அசைந்து கொண்டிருக்கும் பொருள் புறத்தாக்கம் எதுவும் இல்லையேல் அது அந்நிலையிலிருந்து மாறாது.
    2. ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமனான எதிர் தாக்கம் உண்டு.
    3. ஒரு பொருளின் திணிவினதும் ஆர்முடுகலினதும் பெருக்கம் இப்பொருளின் மீது பிரயோகிக்கப்படும் சம அளவான விசைக்கு நேர்விகித சமமாகும். ஆர்முடுகலின் திசை விசையின் திசையே ஆகும்.
- இவர் கணிதத்தில் முக்கியமாகக் கருதப்படும் பைனாமியல் தேற்றத்தைக் கண்டுபிடித்தவர். தொகையீட்டுக் கணிதத்தைக் கண்டு பிடித்தமை கணித உலகிற்கு செய்த மாபெரும் பங்களிப்பாகும்.
- கோள்களின் சுழற்சிக்கான காரணங்களை ஆராய்ந்தார்.
- தொலைக் காட்டியை உருவாக்கினார்.

**விஞ்ஞான முறையில் இவரது பங்களிப்பு**

- இயற்கை விஞ்ஞானம் அனுபவ முறையிலான அவதானம், பரிசோதனை போன்ற முறைகளை மாத்திரமல்லாது உய்த்தறி அனுமானம் எனும் நியாய முறைகளை பயன்படுத்தும் எனக் கூறினார்.
- நேர்வுகளை விளக்கும் முறையினை விருத்தி செய்தவர்.
- விஞ்ஞான முறைக்குரிய விதிகளை கையாளும் முறைகள் பற்றி விளக்கியவர்.
- விஞ்ஞான கருதுகோள்களையும் கொள்கைகளையும் அமைப்பதற்குரிய வழிமுறைகளை காட்டியவர்.

**யோ. உஷாந்தினி**
*2011 கலைப் பிரிவு*

# எடுப்பு வெளிப்பேறு / வழிப்பெறுகை அனுமானம்

உண்மை என ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு மூல எடுப்பில் எழுவாயிலோ, பயனிலையிலோ / எழுவாய், பயனிலை ஆகிய இரண்டிலுமோ மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் அம்மூல எடுப்பின் அடிப்படைக் கருத்து மாறாத எடுப்புக்களை அனுமானித்தலே "எடுப்பு வெளிப்பேறு" என அழைக்கப்படும்.

எடுப்பு வெளிப்பேறு ஏழு வகைப்படும். அவையாவன.

1. மறுமாற்றம்
2. எதிர் மாற்றம்
3. மறுமாற்ற எதிர்மாற்றம்
4. எதிர் வைக்கை
5. மறுமாற்ற எதிர்வைக்கை
6. நேர்மாற்றம்
7. மறு மாற்ற நேர்மாற்றம்.

வெளிப்பேறு அனுமான நெறிகளில் மறுமாற்றம், எதிர்மாற்றம் என்ற முதலிரு நெறிகளே அடிப்படையானவை ஆகும்.

### மறுமாற்றம்

ஒரு மூல எடுப்பின் பயனிலையை முரணாக்கிப் பண்பினை மாற்றுவதன் மூலம் அம்மூல எடுப்பின் அடிப்படைக்கருத்து மாறாத வகையில் (உட்கிடையாக) பிற எடுப்புக்களை அனுமானித்தலே மறுமாற்றம் என அழைக்கப்படும்.

### மறுமாற்ற விதிகள்

- மூல எடுப்பின் பயனிலையை முரணாக்குதல் வேண்டும்.
- மூல எடுப்பின் பண்பினை மாற்றுதல் வேண்டும்.
- மூல எடுப்பின் அளவு மாறக் கூடாது
- எழுவாயில் எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்தக் கூடாது.

A, E, I, O ஆகிய நால்வகை எடுப்புக்களுக்கான மறுமாற்ற முடிவுகள் பின்வருமாறு.

### A எடுப்பின் மறுமாற்றம் E ஆகும்.

மூ.எ : A எல்லா மலர்களும் அழகானவை ஆகும்.
மறுமாறு : E எந்த மலர்களும் அழகற்றவை அல்ல.
கு.வ
மூ.வ. : SAP
மறுமாறு : SE$\bar{P}$

**E எடுப்பின் மறுமாற்றம் A ஆகும்.**

மூ.எ. : E குதிரைகள் எவையும் கொம்புடையவை அல்ல.

மறுமாறு : A குதிரைகள் எல்லாம் கொம்பற்றவை ஆகும்.

கு.வ

மூ.எ. : SEP

மறுமாறு : $SA\bar{P}$

**I எடுப்பின் மறுமாற்றம் O ஆகும்.**

மூ.எ. : I சில மாணவர்கள் திறமையானவர்கள் ஆவார்.

மறுமாறு : O சில மாணவர்கள் திறமையற்றவர்கள் அல்லர்.

கு.வ

மூ.எ : SIP

மறுமாறு : $SO\bar{P}$

**O எடுப்பின் மறுமாற்றம் I ஆகும்.**

மூ.எ. : O சில கனிகள் புளிப்பவை அல்ல

மறுமாறு : I சில கனிகள் புளிப்பற்றவை ஆகும்.

கு.வ

மூ.எ : SOP

மறுமாறு : $SI\bar{P}$

## எதிர்மாற்றம்

ஒரு மூல எடுப்பின் பதங்கள் இரட்டையும் இடமாற்றம் செய்வதன் மூலம் அம்மூல எடுப்பின் அடிப்படைக் கருத்து மாறாத வகையில் (உட்கிடையாக) பிற எடுப்புக்களை அனுமானித்தலே "எதிர்மாற்றம்" என அழைக்கப்படும்.

### எதிர்மாற்ற விதிகள்

- மூல எடுப்பின் பதங்கள் இரண்டையும் இடமாற்றம் செய்தல் வேண்டும்.
- மூல எடுப்பில் வியாப்தி அடையாத எப்பதமும் முடிவில் வியாப்தி அடையக் கூடாது.
- மூல எடுப்பின் பண்பு மாறக் கூடாது.
- தேவை ஏற்படின் அளவினை மாற்றலாம்.

A,E,I,O ஆகிய நால்வகை எடுப்புக்களுக்குரிய எதிர்மாற்ற முடிவுகள் பின்வருமாறு.

**A எடுப்பின் எதிர்மாற்றம் I ஆகும்.**

மூ.எ : A எல்லாப் பாம்புகளும் நஞ்சுள்ளவை ஆகும்.

எதிர்மாறு : I நஞ்சுள்ளவை சில பாம்புகள் ஆகும்.

கு.வ

மூ.வ : SAP

எ.மா : PIS

E எடுப்பின் எதிர்மாற்றம் E ஆகும்.

மூ.எ : E குதிரைகள் எவையும் கொம்புடையவை அல்ல.

எ.மா : E கொம்புடையவை எவையும் குதிரைகள் அல்ல

கு.வ

மூ.எ : SEP

எ.மா : PES

I எடுப்பிற்கு எதிர்மாற்றம் I ஆகும்

மூ.எ : சில நாய்கள் குரைப்பவை ஆகும்.

எ.மா : குரைப்பன சில நாய்கள் ஆகும்.

கு.வ

மூ.எ : SIP

எ.மா : PIS

O எடுப்பதற்கு எதிர்மாற்றம் இல்லை.

ஏனெனில் O எடுப்பின் எதிர்மாற்றாக A,I ஆகிய விதி எடுப்புக்களை பெற முனைந்தால் மூல எடுப்பின் பண்பு மாறக் கூடாது என்ற எதிர்மாற்ற விதி மீறப்படும்.

*E:g*

மூ.எ : O சில கனிகள் புளிப்பவை அல்ல.

எ.மா : A புளிப்பவை எல்லாம் கனிகள் ஆகும்.

ஏ.மா : I புளிப்பவை சில கனிகள் ஆகும்.

மாறாக O எடுப்பின் எதிர்மாற்றாக E,O ஆகிய எடுப்புக்களை பெற முனைந்தால் மூல எடுப்பில் வியாப்தி அடையாத எப்பதமும் முடிவிலும் வியாப்தி அடையக்கூடாது எனும் எதிர்மாற்ற விதி மீறப்படும்.

E:g

மூ.எ : O சில (கனிகள்) புளிப்பவை அல்ல.

எ.மா : E புளிப்பவை எவையும் (கனிகள்) அல்ல.

எ.மா : O புளிப்பவை சில கனிகள் அல்ல

எனவே தான் O எடுப்பதற்கு எதிர்மாற்றம் இல்லை.

## மறுமாற்ற எதிர்மாற்றம்

ஒரு மூல எடுப்பின் எழுவாயின் மறையைப் பயனிலையாகக் கொண்ட புதியதோர் எடுப்பினை அம்மூல எடுப்பின் அடிப்படைக் கருத்து மாறாத வகையில் (உட்கிடையாக) அனுமானித்தலே "மறுமாற்ற எதிர்மாற்றம்" எனப்படும்.

தரவாகத் தரப்பட்ட ஒரு மூல எடுப்பினை முதலில் எதிர்மாற்றம் செய்து பின்னர் மறுமாற்றம் செய்வதன் மூலம் மறுமாற்ற எதிர்மாற்றம் பெறப்படும். A,E,I,O ஆகிய எடுப்புக்களுக்கான மறுமாற்ற எதிர்மாற்ற முடிவுகள் பின்வருமாறு.

**A எடுப்பின் மறுமாற்ற எதிர்மாற்றம் O ஆகும்.**

மூ.எ : A எல்லா மலர்களும் அழகானவை ஆகும்.

எ.மா : I அழகானவை சில மலர்கள் ஆகும்.

ம.மா : O அழகானவை சில மலர்களல்லாதவை அல்ல.

கு.வ

மூ.எ : SAP

(எ) : PIS

(ம) : PO$\overline{S}$

**E எடுப்பின் மறுமாற்ற எதிர்மாற்றம் A ஆகும்.**

மூ.எ : E குதிரைகள் எவையும் கொம்புடையவை அல்ல.

(எ) : E கொம்புடையவை எவையும் குதிரைகள் அல்ல.

ம.மா.எ.மா(ம) : A கொம்புடையவை எல்லாம் குதிரைகளல்லாதவை ஆகும்.

கு.வ

மூ.எ : SEP

(எ) : PES

ம.மா.எ.மா(ம) : SA$\overline{P}$

**I எடுப்பின் மறுமாற்ற எதிர்மாற்றம் O ஆகும்.**

மூ.எ : I சில மாணவர்கள் திறமையானவர்கள் ஆவார்.

(எ) : I சில திறமையானவர்கள் மாணவர்கள் ஆவார்.

ம.மா.எ.மா (ம) : O சில திறமையானவர்கள் மாணவர்களல்லாதவர் அல்லர்.

கு.வ :

மூ.எ : SIP

(எ) : PIS

(ம) : SO$\overline{P}$

**O எடுப்பிற்கு மறுமாற்ற எதிர்மாற்றம் இல்லை.**

மூ.எ : O சில கனிகள் புளிப்பவை அல்ல.

(எ) : –

ம.மா.எ.மா (ம) : –

கு.வ

மூ.எ : SOP

(எ) : –

ம.மா.எ.மா(ம) : –

ஏனெனில் ஒரு மூல எடுப்பை முதலில் எதிர்மாற்றம் செய்து, பின்னர் மறுமாற்றம் செய்வதன் மூலம் மறுமாற்ற எதிர்மாற்றம் பெறப்படும். இந்த வகையில் O எடுப்பின் மறுமாற்ற எதிர்மாற்றத்தினைப் பெறுவதற்கு முதலில் அதனை எதிர்மாற்றம் செய்ய வேண்டும். ஆனால் O எடுப்பிற்கு எதிர்மாற்றம் இல்லை. எனவே தான் O எடுப்பிற்கு மறுமாற்ற எதிர்மாற்றம் இல்லை.

**எதிர்வைக்கை அல்லது எதிர்வைப்பு**

ஒரு மூல எடுப்பின் பயனிலையின் மறையை எழுவாயாகக் கொண்ட புதியதோர் எடுப்பினை அம்மூல எடுப்பின் அடிப்படைக்கருத்து மாறாத வகையில் (உட்கிடையாக) அனுமானித்தலே எதிர்வைக்கை என அழைக்கப்படும்.

தரவாகத் தரப்பட்ட ஓர்மூல எடுப்பினை முதலில் மறுமாற்றம் செய்து பின்னர் எதிர்மாற்றம் செய்வதன் மூலம் எதிர்வைக்கை பெறப்படும்.

முடிவுகள் பின்வருமாறு.

**A எடுப்பின் எதிர்வைக்கை E ஆகும்.**

மூ.எ : A எல்லா மலர்களும் அழகானவை ஆகும்.
(ம) : E எந்த மலர்களும் அழகற்றவை அல்ல.
எ/வை (எ) : E அழகற்றவை எவையும் மலர்கள் அல்ல.
கு.வ
மூ.எ : SAP
(ம) :$SE\bar{P}$
(எ) : $\bar{P}ES$

**E எடுப்பின் எதிர்வைக்கை I ஆகும்.**

மூ.எ :- E குதிரைகள் எவையும் கொம்புடையவை அல்ல.
(ம) :- A குதிரைகள் எல்லாம் கொம்பற்றவை ஆகும்.
(எ) :- I கொம்பற்றவை சில குதிரைகள் ஆகும்.
கு.வ
மூ.எ – SEP
(ம) – $S\bar{A}P$
(எ) – $\bar{P}IS$

**I எடுப்பின் எதிர்வைக்கை I ஆகும்.**

மூ.எ : I சில மாணவர்கள் திறமையானவர்கள் ஆவார்.
(ம) : O சில மாணவர்கள் திறமையற்றவர்கள் அல்லர்
(எ) : –
கு.வ
மூ.எ : SIP
(ம) : $SO\bar{P}$
(எ) : –

**O எடுப்பின் எதிர்வைக்கை I ஆகும்.**

மூ.எ : O சில கனிகள் புளிப்பவை அல்ல.

(ம) : I சில கனிகள் புளிப்பற்றவை ஆகும்.

(எ) : I புளிப்பற்றவை சில கனிகள் ஆகும்.

கு.வ

மூ.எ : $\bar{S}OP$

(ம) : $SI\bar{P}$

(எ) : $\bar{P}IS$

**மறுமாற்ற எதிர்வைக்கை**

ஒரு மூல எடுப்பின் எழுவாயின் மறையைப் பயனிலையாகவும், பயனிலையின் மறையை எழுவாயாகவும் கொண்ட புதியதோர் எடுப்பினை அவ் மூல எடுப்பின் அடிப்படைக் கருத்து மாறாத வகையில் (உட்கிடையாக) அனுமானித்தலே "மறுமாற்ற எதிர்வைக்கை" ஆகும்.

எதிர்வைக்கையாகப் பெறப்பட்ட எடுப்பினை மறுமாற்றம் செய்வதன் மூலம் மறுமாற்ற எதிர்வைக்கை பெறப்படும்.

A,E,I,O ஆகிய எடுப்புக்களுக்கான மறுமாற்ற எதிர்வைக்கை முடிவுகள் பின்வருமாறு.

A எடுப்பின மறுமாற்ற எதிர் வைக்கை A ஆகும்.

மூ.எ : A எல்லா கனிகளும் இனிப்பன ஆகும்.

(ம) : E எந்தக் கனியும் இனிப்பல்லாதன அல்ல.

(எ0 : E இனிப்பல்லாதன எவையும் கனிகள் அல்ல.

ம.மா.எ.வை(ம) : A இனிப்பல்லாதன எல்லாம் கனிகளல்லாதன ஆகும்.

கு.வ

மூ.எ : SAP

(ம) : $SE\bar{P}$

(எ) : $\bar{P}ES$

ம.மா.எ.(ம) : $\bar{P}A\bar{S}$

**E எடுப்பின் மறுமாற்ற எதிர்வைக்கை O ஆகும்.**

மூ.எ. : E குதிரைகள் எவையும் கொம்புடையவை அல்ல.

(ம) : A குதிரைகள் எல்லாம் கொம்பற்றவை ஆகும்.

(எ) : I கொம்பற்றவை சில குதிரைகள் ஆகும்.

(ம) : O கொம்பற்றவை சில குதிரைகளல்லாதவை அல்ல.

மூ.எ : SEP

(ம) : $SA\bar{P}$

(எ) : $PI\bar{S}$

(ம0 : $\bar{P}O\bar{S}$

**I எடுப்பிற்கு மறுமாற்ற எதிர்வைக்கை இல்லை.**

மூ.எ : I சில மாணவர்கள் திறமையானவர்கள் ஆகும்.
(ம) : O சில மாணவர்கள் திறமையற்றவர்கள் அல்லர்.
(எ) : –
(ம) : –

கு.வ
மூ.எ : SIP
(ம) : SO$\bar{P}$
(எ) : –
(ம) : –

**O எடுப்பின் மறுமாற்ற எதிர்வைக்கை O ஆகும்.**

மூ.எ : O சில நூல்கள் தரமானவை அல்ல.
(ம) : I சில நூல்கள் தரமல்லாதன ஆகும்.
(எ) : I தரமல்லாதன சில நூல்கள் ஆகும்.
(ம) : O தரமல்லாதன சில நூல்களல்லாதன அல்ல.

கு.வ
மூ.எ : SOP
(ம) : SI$\bar{P}$
(எ) : $\bar{P}$IS
(ம) : $\bar{P}$O$\bar{S}$

நேர்மாற்றம்

ஒரு மூல எடுப்பின் எழுவாயின் மறையை எழுவாயாகக் கொண்டு புதியதோர் எடுப்பினை அம்மூல எடுப்பின் அடிப்படைக் கருத்து மாறாத வகையில் (உட்கிடையாக) அனுமானித்தலே "நேர்மாற்றம்" என அழைக்கப்படும்.

நேர்மாற்றம் நிறை எடுப்புகளுக்கு மட்டுமே சாத்தியமானதாகும். I,O ஆகிய குறை எடுப்புகளுக்கு நேர்மாற்றம் சாத்தியமில்லை.
A,E ஆகிய நிறை எடுப்புகளுக்கான நேர்மாற்ற முடிவுகள் பின்வருமாறு.

A எடுப்பின் நேர்மாற்றம் O ஆகும்.

A எடுப்பினை நேர்மாற்றம் செய்ய வேண்டுமாயின் மறுமாற்ற நெறியிலே தொடங்கி மறுமாற்றம், எதிர்மாற்றம் ஆகிய இரு நெறிகளையும் மாறிமாறி 5 தடவைகள் பிரயோகித்தல் வேண்டும். இவ்வாறு பிரயோகித்துப் பெறப்படும் முடிவு A எடுப்பின் "நேர்மாறு" என அழைக்கப்படும்.

மூ.எ : A எல்லா மலர்களும் அழகானவை ஆகும்.
(ம) : E எந்த மலர்களும் அழகற்றவை அல்ல.
(எ) : E அழகற்றவை எவையும் மலர்கள் அல்ல.

(ம) : A அழகற்றவை எல்லாம் மலர்களல்லாதவை ஆகும்.
(எ) : I மலர்களல்லாதவை சில அழகற்றவை ஆகும்.
(ம) : O மலர்களல்லாதவை சில அழகானவை ஆகும்.
கு.வ
மூ.வ : SAP
(ம) : $SE\bar{P}$
(எ) : $\bar{P}ES$
(ம) : $\bar{P}A\bar{S}$
(எ) : $\bar{S}I\bar{P}$
(ம) : $\bar{S}OP$

**E எடுப்பின் நேர்மாற்றம் I ஆகும்.**

E எடுப்பினை நேர்மாற்றம் செய்ய வேண்டுமாயின் எதிர்மாற்றம், மறுமாற்றம் ஆகிய இரு நெறிகளையும் மாறி மாறி 3 தடவைகள் பிரயோகித்தல் வேண்டும். இவ்வாறு பிரயோகித்துப் பெறப்படும் முடிவு E எடுப்பின் நேர்மாறு என அழைக்கப்படும்.
மூ.எ : E குதிரைகள் எவையும் கொம்புடையவை அல்ல.
(எ) : E கொம்புடையவை எவையும் குதிரைகள் அல்ல.
(ம) : A கொம்புடையவை எல்லாம் குதிரைகளல்லாதன ஆகும்.
(எ) : I குதிரைகளல்லாதன சில கொம்புடையவை ஆகும்.
கு.வ
மூ.எ : SEP
(எ) : PES
(ம) : $PA\bar{S}$
(எ) : $\bar{S}IP$

**மறுமாற்ற நேர்மாற்றம்**

ஒரு மூல எடுப்பின் எழுவாயின் மறையை எழுவாயாகவும் பயனிலையின் மறையைப் பயனிலையாகவும் கொண்ட புதியதோர் எடுப்பினை அம்மூல எடுப்பின் அடிப்படைக் கருத்து மாறாத வகையில் (உட்கிடையாக) அனுமானித்தலே "நேர்மாற்றம்" என அழைக்கப்படும்.

நேர்மாறாகப் பெறப்பட்ட எடுப்பினை மறுமாற்றம் செய்வதன் மூலம் மறுமாற்ற நேர்மாற்றம் பெறப்படும்.

A,E ஆகிய நிறை எடுப்புக்களுக்கான நேர்மாற்ற முடிவுகள் பின்வருமாறு –

**A எடுப்பின் மறுமாற்ற நேர்மாற்றம் I ஆகும்.**

மூ.எ : A எல்லா மலர்களும் அழகானவை ஆகும்.
(ம) : E எல்லா மலர்களும் அழகற்றவை ஆகும்.
(எ) : E அழகற்றவை எவையும் மலர்கள் அல்ல.
(ம) : A அழகற்றவை எல்லாம் மலர்களல்லாதவை ஆகும்.

(எ) : I மலர்களல்லாதவை சில அழகற்றவை ஆகும்.

(ம) : O மலர்களல்லாதவை சில அழகானவை அல்ல.

ம.ம.தே.கு : I மலர்களல்லாதவை சில அழகற்றவை ஆகும்.

கு.வ

மூ.எ : SAP

(ம) : $SE\overline{P}$

(எ) : $\overline{P}ES$

(ம) : $\overline{P}A\overline{S}$

(எ) : $\overline{S}I\overline{P}$

(ம) : $\overline{S}OP$

ம.தே.(ம) : $\overline{S}I\overline{P}$

**E எடுப்பின் மறுமாற்ற நேர்மாற்றம் O ஆகும்.**

மூ.எ : E குதிரைகள் எவையும் கொம்புடையவை ஆகும்.

(எ) : E கொம்புடையவை எவையும் குதிரைகள் அல்ல.

(ம) : A கொம்புடையவை எல்லாம் குதிரைகளல்லாதன ஆகும்.

(எ) : I குதிரைகளல்லாதன சில கொம்புடையவை ஆகும்.

(ம) : O குதிரைகளல்லாதன சில கொம்பற்றவை அல்ல

கு.வ

மூ.எ : SEP

(எ) : PES

(ம) : $PA\overline{S}$

(எ) : $\overline{S}IP$

(ம) : $\overline{S}O\overline{P}$

T. ஜெயமகள்
$A_2$ (2010)

எல்லோரிடமும் இணக்கமாக இருங்கள். ஆனால், ஒரு சிலரிடம் மட்டும் நெருக்கமாக இருங்கள். உங்களது முழு நம்பிக்கையை அவர்களிடம் வைக்கும் முன், அந்த ஒரு சிலரை நன்றாகச் சோதித்துப் பாருங்கள். உண்மையான நட்பு என்பது மெதுவான வளர்ச்சி யுடைய ஒரு செடியாகும். அது முழு வளர்ச்சியைப் பெறு வதற்கு முன்னால் துன்பத்தின் அதிர்ச்சியை அனுபவிக்கவும் தாங்கவும் வேண்டும்.

**– ஜோர்ஜ் வாஷிங்டன்.**



# பாடசாலை விளையாட்டுப் போட்டி

விளையாட்டு மனதிற்கு உற்சாகத் தையும் மாணவர்களிடையே விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கையும் தருவது. அத்துடன் எமது உடலின் தசைகளும் நரம்புகளும் சிறப்பாக இயங்குவதற்கு விளையாட்டு உதவுகிறது.

எமது பாடசாலையில் இல்லங்களிற் கிடையிலான விளையாட்டுப் போட்டி வருடாந்தம் 1ம் தவணையில் நடை பெறுவது வழக்கம். அந்த வகையில் இந்த வருடத்திற்கான இல்ல விளையாட்டுப் போட்டியானது 06.02.2009 என நிச்ச யிக்கப்பட்டிருந்தது. இதற்காக விளை யாட்டுப் போட்டிக்கு முன்பே விளையாட்டுப் பயிற்சிகள் ஆரம்பமாகிவிடும்.

எமது பாடசாலையில் 5 இல்லங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே நிறங்களும் உள்ளன.

சுப்பிரமணியம் இல்லத்திற்குரிய நிறமாக சிவப்பும், மாணிக்கம் இல்லத் திற்கான நிறமாக பச்சையும் நாகநாதன் இல்லத்திற்குரிய நிறமாக நீலமும், கந்தையா இல்லத்திற்கான நிறமாக மஞ்சளும், இளையதம்பி இல்லத்திற்குரிய நிறமாக ஊதா நிறமும் உள்ளன.

இல்ல விளையாட்டுப் போட்டியன்று எமது பாடசாலை விழாக்கோலம் கொண்டிருந்தது. விளையாட்டு மைதா னத்தின் மேடைக்கு நேர் எதிரே மைதா னத்தின் மறு கோடியில் இல்லங்களிற் கான கூடாரங்கள் அமைக்கப்பட்டி ருந்தன. இல்லங்கள் ஒவ்வொன்றினதும் நிறத்திற்கேற்ப அவற்றினது கூடாரங்கள் அழகாக அமைக்கப்பட்டிருந்தன.

அன்றைய தினம் பிற்பகல் 1.00 மணியளவில் இல்ல விளையாட்டுப் போட்டி ஆரம்பமானது. பிரதம விருந்தின ராக யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர். திரு.ஏ.தேவ நேசன் அழைக்கப்பட்டிருந்தார். பிரதம விருந் தினரை அதிபர், பிரதி அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் மேடைக்கு அழைத்து வந்தார்கள். பிரதம விருந்தினர் மங்கள விளக்கேற்றினார். பின் அதிபரால் பாட சாலைக் கொடி ஏற்றப்பட்டது. அனை வரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர். பாடசாலைக் கீதம் இசைக்கப்பட்டது. அதன் பின் மாண வர்களது அணிவகுப்பு மரியாதையைப் பிரதம விருந்தினர் ஏற்றுக் கொண்டார். இதன் பின்னர் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமானது.

ஓட்டம், தடை ஓட்டம், அஞ்சலோட்டம், ஈட்டிஎறிதல், தட்டெறிதல், என்பன பல்வேறு வயது அடிப்படையில் நடை பெற்றுக் கொண்டிருந்தன. மாணவர் களது கைதட்டல் ஒலியும் உற்சாகப் படுத்தும் ஆரவாரங்களும் விண்ணை முட்டின. இறுதியாக கயிறு இழுத்தல் போட்டி நடைபெற்றது.

மாலை ஐந்து மணியளவில் இல்ல விளையாட்டுக்கள் யாவும் நிறைவு பெற்றன. பிரதம விருந்தினர் மாணவர் அனைவரையும் பாராட்டி வாழ்த்தினர்

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும், வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டன. மாணிக்கம் இல்லம் முதலிடத்தைப் பெற்றது. இருபத்தொரு வருடங்களின் பின் இம்முறை மாணிக்கம் இல்லமானது அதிக புள்ளிகளை பெற்று முதலாம் இடத்தை தட்டிக் கொண்டது பாராட்டத்தக்க விடயமாகும். அதற்குரிய பரிசுக் கேடயத்தை அவ் வில்லத் தலைவரிடம் வழங்கும்போது மாணவர்களது கைதட்டல் ஒலியும் ஆரவாரமும் பாடசாலைச் சுவர்களில் பட்டுத்தெறித்தன.

இறுதியாக விளையாட்டு துறைத் தலைவரினால் நன்றியுரை கூறப்பட்டது. பாடசாலை மாணவர்களால் விழா இறுதியிலும் பாடசாலைக் கீதம் இசைக்கப் பட்டபோது மீண்டும் அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர். இவற்றுடன் அன்றைய விளையாட்டுப்போட்டி நிகழ்ச்சிகள் இனிது நிறைவுபெற்றன.

**வி. கீர்த்தனா**
7A

# இயற்கையின் பிரிவினை



மலர் மேல் தாலி
மணக்கும் காற்று
மனிதனை அடைய
மறுத்துப் போகும்

பகலினைத் தந்து
படைப்பிற்கும் உதவும்
பகலவன் இனிமேல்
பார்க்கவே மாட்டான்

ஊற்றாக வந்து
உவர்ந்திருக்கும் நீரும்
உணர்விலா மனிதர்க்கு
உதவிட மாட்டாது.

சிட்டுக் குருவியும்
சிந்தனை மிருகமும்
திட்டும் மனிதனின்
திமிரை வெறுத்திடும்.

தாரகை வானில்
தந்திடும் ஒளியும்
தரங்கெட்ட மனிதனின்
தன்மையை ஒதுக்கும்.

மதியதும் தோன்றாது
மாண்பழகு தாராது
மதி கெட்ட மனிதனின்
மத்திமக் குணங்கண்டு
இயற்கை மனிதனை
இம்சிக்கப் போகுது

மனிதன் என்ற ஒரு
மாண்புறு தன்மையை
மனிதன் என்பவன்
மறுத்துப் பேசுவதால்

இயற்கை மனிதனை
இம்சிக்கப் போகுது.

**இ. லக்சன்**
10A

# தையற்கலை ஓர் அறிமுகம்

தரம் 10ல் ஆரம்பமாகிய மனைப் பொருளியல் பாடத்திட்டம் 11,12,13 எனும் தரங்களில் படிப்படையாக விரிவடையும் அறிவு, திறன், மனப் பாங்கு, என்பவற்றினை விருத்தி செய்யும் வகையில் இங்கு அடித்தளம் இடப்படுகிறது. எழுத்தாளர் குழு ஒன்றினால் இப்பாட நூல் எழுதப்பட் டாலும், இப்பாடநூல் ஓர் ஒழுங்கு முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவ்வெழுத்தாளர் குழுவிலுள்ள அங்கத்தவர்கள் அனைவரும் வகுப்பறையில் இப்பாட விருத்தியிலும், தேர்ச்சிகளிலும் நீண்டநாள் அனுபவமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். இப்பாடத் திட்டத்தில் யௌவனப் பருவம், போசணை, இனப் பெருக்கம், சமையல், தையல், போன்ற நிறைய விடயங்கள் உள்ளடக் கப்பட்டுள்ளது. இப்பாடத்தில் தையல் பற்றிய சிறு அறிமுகத்தினை விளங்கிக் கொள்வோமாக.

19ம் நூற்றாண்டில் இருந்தே தையற் பொறி கண்டுபிடிக்கப்பட் டுள்ளது. 1815ம் ஆண்டு பிரான்சு நாட்டைச் சேர்ந்த சிங்கர் என்பவரால் காலால் மிதித்து தைக்கக் கூடிய இத் தையல் இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டது. 50 ஆண்டுக்கு முன்னர் மின்சக்தியால் இயங்கும் தையல் பொறியானது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதாவது கையால் தைப்பதைவிட தையல் பொறியினால் தைப்பதால் தையலை மிகவிரைவாக முடிக்கலாம். அத்தோடு தையலும் உறுதியாகவும் துப்பரவாகவும் காணப்படும். சில குறிப்பிட்ட கருவிகளை தொடுத்து மடிப்பு, சுருக்கு என வெவ்வேறு வகையான அலங்காரத் தையலை மாற்றி அமைக்கலாம். இங்கு சித்திரத் தையல் தைப்பதற்கும், பொத் தான் தையல் தைப்பதற்கும், தெறிஓட்டை தைக்கும் தையலுக்கும், புத்தகப்பை தைப்பதற்கும், ஒவ்வொரு கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முக்கியமாக தையலை ஆரம்பிக்கும் போது மேல் நூலும், கீழ் நூலும் ஒரே அழுத்தத்தில் இருப்பது தையலுக்கான முக்கிய கொள்கையாகும்.

இதில் ஆர்வமுள்ளவர்கள் பெண்களேதான். இக்கலை தற்போது ஆண்களிடமும் மிளிர்ந்து வருவதை நாம் காணக் கூடியதாக உள்ளது. தையல் பயிற்சிக் கலையில் ஆர்வமில்லாத எவரும் இல்லை. ஆனால் இன்றைய உலகில் நவீன சிந்தனைகள் இருப்பதால் தையலின் வகைகள் வெவ்வேறுபட்ட முறைகளில் அமைந்து இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

பெண்கள் தமது ஆடைகளுக்கு தையலின் மூலம் அலங்காரம் செய்கிறார்கள். இது மட்டுமா? ஆண்களது ஆடைகளிலும் அலங்கரிப்பு இடம் பெற்று வருவதை சிறப்புறக் காண முடிகின்றது. தையற் கலை என்பது தானாக ஊற்றெடுத்து வருவதில்லை. இது ஒரு பெண்ணோ அல்லது ஒரு ஆணோ விருப்பம் கொண்டு முயற்சி செய்து அவர்கள் இக்கலையில் ஈடுபடுவார்கள். தையலுக்கு முக்கிய பொருளாக அளவு நாடாவைக் கொள்வார். அளவெடுக்கும் போது அவதானம் மிக முக்கியமாகும். அளவெடுக்கும் ஒருவர் சரியான நிலையில்

நிலைக் குத்தி நிற்றல் வேண்டும். இல்லையேல் அளவு தவறுதலடைந்து தைக்கப்படும் ஆடை பிழைத்துவிடும். அளவெடுக்கும்போது பொருத்தமான உடை (உருவக் கோட்டுடை) ஒன்றை உடுத்திருத்தல் சிறப்பம்சமாகும். அளவெடுப்பதற்கு குறிப்பிட்ட பகுதிகளை மாத்திரம் எடுத்தல் சிறந்தது. குறிப்பாக இடுப்பளவு, மார்பளவு, இடையளவு, என்பவற்றையே எடுக்க வேண்டும்.

இலங்கை மக்களிடம் தையற் கலை மேன்மேலும் வளர்ந்து செல்கிறது. இத்தையல்கள் பலவாறு அமைந்து காணப்படுகின்றன. அலங்காரத் தையல்களாக, விஸ்பத் தையல், சோம் தையல், காக்காத் தையல், சங்கிலித் தையல், மீன்முள்ளுத் தையல், அடைப்புத் தையல், கம்பளித் தையல், என பலவகைகள் உள்ளதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இங்கு தைக்கப்படும் தையல் பலவிதத்தில் உள்ளதாக அமையும். இங்கு பெரியோர், சிறியோர், கர்ப்பிணி, குழந்தைகளுக்கு என பலவாறாக தைக்கப்படும். சிறு பிள்ளைக்கு உடையைத் தைக்கும் போது குழந்தையின் சௌகரியத்தைக் கவனத்திற்கொள்ள வேண்டும்.

மல்த்துணியே இவர்களிற்கு சிறந்த துணியாக அமையும். இவர்களிற்கு சாதாரண எளிய அலங்காரத் தையல், அணிவதற்கும் இலகுவாயும் அமைந்திருத்தல் சிறந்தது. கர்ப்பிணிகளுக்கு தைக்கப்படும் ஆடை உடலை உறுத்தாத வகையில் சௌகரியம் வழங்கக் கூடியதாக அமைதல் வேண்டும். இளைஞர்களுக்கு ஆடைதைக்க வேண்டுமானால் நாகரிகத்திற்கும் காலநிலைக்கும் ஏற்றதாக உடை அமைந்திருக்கும். இது இவர்களது அழகைக் கூட்டக் கூடியதாக அமைந்து காணப்படும். இவ்வாறு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையில் ஆடை சீர் செய்யப்படும் எனலாம்.

தைப்பதற்கும் மூலப்பொருட்களாக கத்தரிக்கோல், சுவடுவரைச்சில்லு, காபன் தாள், துணி, பென்சில், அளவு நாடா, அடிமட்டம், நூல், ஊசி, என பல பொருட்கள், அத்தியாவசியமாக தேவைப்படுகின்றன. ஆடைகள் தைப்பதானது இன்று நவநாகரிக உலகில் பல நவீன உபகரணங்களுடன் வித்தியாசமாக விருத்தியடைந்து உள்ளது. இக்கலையானது ஒவ்வொரு நாடுகளுக்கேற்றவாறு அவரின் ரசனைக்கேற்ப உருவாக்கப்படுகின்றன. இன்று எமது நாட்டில் ஆடைத் தொழிற்சாலைகள் போட்டி போட்டுக் கொண்டு ஆடைகளை நிர்மாணிப்பதில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்துகின்றது. இதனால் அந்நிய செலவாணியும் அதிகரித்துள்ளது. இது பாராட்டப்படக்கூடிய விடயமாகும். இவ் ஆடைகளை உற்பத்தி செய்வதற்கேற்ற சிறப்புக்களை இதனூடாக அறிய முடிகின்றது.

தையல் பற்றிய இவ்விடயங்கள் என்றும் அழியாது மாணவர்களுடன் மிளிர்ந்து கொண்டே இருக்கும். காரணம் இதன் வளர்ச்சி இன்றைய நவீன உலகில் பெரும் பங்காற்றி மாணவச் செல்வங்களுடன் ஒட்டிக் கொண்டிருக்கிறது என நாம் விளங்கிக் கொள்ளலாம்.

**த. நர்சினி**
2009 A/L

# தமிழ் இணையம்

இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்துள்ள இக்கால கட்டத்திலே தகவல் தொழில்நுட்பம் வேகமாக வளர்ச்சி யடைந்து வந்துள்ளது. இணையம் என்பது தகவல் தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு எனும் இரு இராட்சதத் தொழில்நுட்பத் துறைகள் கைகோர்த்ததால் உருவானது. கணனிப் பொறித்துறையிலும், தொலைத் தொடர்புத் துறையிலும் ஏற்பட்ட தொழில் நுட்ப வளர்ச்சியால் உலகின் பல பாகங் களிலும் வியத்தகு முன்னேற்றம், நூதன சேவைகள் உருவாகி வருகின்றன. செய்திப் பரிமாற்றம், கல்வி, சுற்றுலா, தொலைத் தொடர்பு, நூலகம், அருங் காட்சியகம், போன்ற பல்வேறு பணிகளும், பொழுது போக்குக்கும் இணையம் இன்றி யமையாத சாதனமாகும். மனித இனத்தின் முதல் பன்மொழி ஊடகம் இணையம் ஆகும்.

உலகம் முழுவதும் உள்ள குறிப் பிட்ட இனத்தவரை அல்லது குறிப்பிட்ட விடயங்களில் ஒற்றுமை உள்ளவரை இணையம் போல இணைக்க ஒரு ஊடகம் இல்லை. அழிந்து போகும் நிலையிலிருந்த தமிழ் மொழிக்கும் இணையம் கைகொடுத்து உதவியுள்ளது. இன்று நூற்றுக்கணக்கான வாசகர்கள் இருக்கின்றார்கள். இணையம் மூன்று விதமான தகவல் தொடர்பு முறைகளைக் கொண்டுள்ளது. முதலாவது இரு தனி நபர்களுக்கு இடையே மட்டும் நடக்கும் தனிநபர் நிலைத் தொடர்புகள். இரண்டாவது ஏதோ ஒரு வகையில் ஒன்று பட்டவர் களுக்குள் நடக்கும் ஒரு நிலைப்பட்ட தொடர்பு மூன்றாவது ஒரு தனிநபர் அல்லது நிறுவனம் தகவல் ஒன்றைப் பெறுவதற்காக நடத்தப்படும் வெகுசன ஊடகங்கள், எந்தமொழி மூலம் மேற் கண்ட 3 அடிப்படைத் தகவல் தொடர்பிலும் வளமாகக் கையாளப் படுகின்றதோ அந்த மொழியை நிகழ்கால மொழி, உயிருள்ள மொழி, வளரும் மொழி, என்கின்றோம். இம் மூன்று தளங்களி லுமுள்ள பயன்பாட்டினாலேயே தமிழ் உயிருள்ள மொழியாகவுள்ளது.

மொழியின் வளர்ச்சியும், இருப்பும் இன்று தொழில்நுட்பத்தின் கையில் தங்கியுள்ளது. இது சாதகமா? பாதகமா? என்பதே பிரச்சினை. இத்தகவல் தேவையை நாம் மொழிக்காக நிறை வேற்ற முடியுமா? ஆம். முடியும். என்று சாதகமான பதிலையே நாம் பார்க்கிறோம். அதுதான் கணனித் தமிழ் வளர்ச்சி. இது காலத்தின் கட்டா யம். இருபதாம் நூற்றாண்டின் தமிழ் வளர்ச்சி குறித்துப் பார்க்கையில் திரும் பிப் பார்க்கும் எந்த ஒரு ஆராய்ச்சி யாளனும் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்ற ஒரு திடீர் திருப்பத்தைக் கண்டு கொள்ளாமல் போகமாட்டான். அந்தக் திருப்பம் தான் தமிழும் கணனிப் பொறிநுட்பமும் கைகோர்த்துக் கொண்ட ஒரு அற்புத நிகழ்வாகும்.

மொழி, ஊடகங்களின் மூலமாகவே நிலைத்து நிற்கிறது. தொடர்ந்து நிலவு கின்றது. பேச்சும் எழுத்தும் அவற்றிற்கே யுரிய ஊடகங்களின் மூலமாகப் பயணித்து மொழிவழி சமூகங்களை நிலவச் செய் கின்றன. ஆரம்பத்தில் கல்வெட்டிலும், ஓலை யிலும், இருந்த தமிழை அச்சுக்குக்

கொண்டு வருவதற்கு கணனி நடை முறைக்கு வந்தது. இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்தின் ஒரு புதிய மொழிச் சாதனம் உருவாகும் போது முடியும் என்றநிலை உருவாகி விட்டது. இன்று வீட்டுக்கு வீடு இணையம் வந்து விட்டது. எனவே இந்த வேகத்தில் தமிழ் மொழியும் வளர வேண்டும். இதற்குத் தமிழ்க் கணனி மயப்படுத்தல் அவசிய மானதொன்றாகும். எனவே கணனியில் எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடிய விதமான கணனித் தமிழ் உருவாவது அவசிய மானது. தற்போது உலகளாவிய ரீதியில் ஆங்கிலத்தைப் போன்று தமிழை யும் கணனிப் பொறிமுறையில் பயன் படுத்தக் குறியீட்டு முறையும் விசைப் பலகையும் தராதரப்படுத்தப்பட்டுள்ள தால் தமிழை இணையத்தில் பயன்படுத் தப்படுவதில் இருந்து வந்த முக்கிய தடை நீங்கிவிட்டது.

ஞா. கஜந்தா
2009 A/L

# வீணான காலங்கள்

கல்விகற்கும் காலத்தை
வீணே கடத்திவிட்டேன்
நல்லவழி பலர் சொன்னார்
நான் அதைக்கேட்கவில்லை.

படிபடி என்றபோது
படிக்காமல் இருந்தேன் நான்
படிக்காமல் இருக்கும்போது
பாதிவாழ்க்கை வீணாச்சு

வேலைக்குப் போகாமல்
வெட்டியாய் இருந்தேன்நான்
நாளைக்குப் போகலாம் என
நாளைக் கடத்திவிட்டேன்



நல்லவர்கள் உடன்சேர்ந்து
நல்லதைப் பழகாமல்
கெட்டவர்களுடன் சேர்ந்து
வாழ்க்கையைக் கெடுத்துவிட்டேன்.

**க. வினுசியா**
தரம் –11C

# வென்னின் விளக்கப் படங்கள் / நவீன வகுப்பு அளவையியல்


ஆங்கிலேய நாட்டைச் சேர்ந்த ஜோன்வென் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட விளக்கப்படங்களை அறிமுகப்படுத்த முன்னர் ஒயிலர் எனும் அறிஞரால் விளக்கப் படங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இருப்பினும் இவரது விளக்கப்படங்களில் ஈரடி இயல்பு தெளிவின்மை ஆகிய குறைபாடுகள் காணப்பட்டன. இதனால் ஒயிலரின் விளக்கப்படங்கள் அளவையியலிலிருந்து நீக்கப்பட்டு ஜோன் வென்னினது விளக்கப் படங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

ஜோன் வென்னினது விளக்கப்படமானது பின்வரும் இரு சந்தர்ப்பங்களில் முக்கியம் பெறுகின்றது.

1. ஓர் எடுப்பில் வரும் எழுவாய் வகுப்பிற்கும் பயனிலை வகுப்பிற்கும் இடையிலான தொடர்பை விளக்கிக் காட்டுவதற்கு.
2. நியாயத்தொடை வாதங்களின் வாய்ப்பினை மதிப்பீடு செய்வதற்கு.

ஓர் எழுவாய் வகுப்பிற்கும் பயனிலை வகுப்பிற்கும் இடையிலான தொடர்பினை விளக்கிக் காட்டுதல்.

இங்கு வென்னின் விளக்கப்படத்தை வரைவதற்குரிய அடிப்படை தகவல்களை நோக்குவோம்.




1. இப்பட அமைப்பு முழுவதனையும் உள்ளடக்கி U எனும் ஆங்கில எழுத்தினால் இடப்படும். இதன் பொருள் உலகமுழுமை அதாவது அகிலத்தொடை.
2. இப்பட அமைப்பானது 4 பகுதிகளைக் கொண்டிருக்கும் அவையாவன.

   - AB, $\bar{A}$B, A$\bar{B}$, $\bar{A}\bar{B}$

3. இப்பட அமைப்பிலுள்ள 4 பகுதிகளில் ஏதேனும் ஒரு பகுதியினுள் சமாந்தரக் கோடுகளினால் நிறந்தீட்டப்படுமாயின் அப்பகுதி வெற்றுவகுப்பு என அழைக்கப்படும். உறுப்புக்கள் அல்லது அங்கத்துவங்கள் எதனையும் கொண்டமையாத பகுதிகளே வெற்று வகுப்பு எனப்படும். இங்கு ஏதேனும் ஒரு

பகுதிக்குள் சமாந்தரக் கோடுகளால் தீட்டப்படுவது அப்பகுதியில் அடங்கும் அங்கத்துவங்கள் எதனையும் குறைப்பதாக அமைய மாட்டாது.

4. இப்பட அமைப்பிலுள்ள 4 பகுதிகளில் ஏதேனும் ஒரு பகுதியினுள் புள்ளடி (X) அடையாளம் இடப்படுமாயின் அப்பகுதி வெற்று அல்லாத வகுப்பு என அழைக்கப்படும். சில உறுப்புக்கள் அல்லது அங்கத்தவர்களையாவது தன்னகத்தே கொண்டமைந்த வகுப்பே வெற்று அல்லாத வகுப்பாகும்.

வெவ்வேறு வகையான எடுப்புக்களுக்குரிய வென்னின் விளக்கப்படங்களை நோக்குவோம்.

**1. நிறை விதி எடுப்பது (A எடுப்பு)**


எல்லா A உம் B ஆகும்.

எல்லா மலர்களும் அழகானவை ஆகும்.

சு.தி :- A – மலர்கள்

B – அழகானவை

கு.வ – $A\bar{B} = \phi$




**2. நிறை மறை எடுப்பு (E எடுப்பு)**


எந்த A உம் B அல்ல.

குதிரைகள் எவையும் கொம்புடையவை அல்ல.

சு.தி. A – குதிரைகள்

B – கொம்புடையவை.

கு.வ :- $AB = \phi$




**3. குறை விதி எடுப்பு (I எடுப்பு)**


சில Aகள் B ஆகும்

சில மாணவர்கள் திறமையானவர்கள் ஆவார்.

சு.தி :- A – மாணவர்கள்.

B – திறமையானவர்கள்.

கு.வ :- $AB = \phi$




**4. குறை மறை எடுப்பு (O எடுப்பு)**


சில Aகள் B அல்ல.

சில கனிகள் புளிப்பவை அல்ல.


சு.தி – A – கனிகள்

B – புளிப்பவை

கு.வ :- $AB= \phi$



**5. தனி விதி எடுப்பு**





தீபன் அழகானவன் ஆவான்

சு.தி – $\mathcal{X}$ – தீபன்

A – அழகானவன்

கு.வ – $\mathcal{X} \in A$

**6. தனி மறை எடுப்பு**





கமலா மக்கு அல்ல

சு.தி :- $\mathcal{X}$ – கமலா

A – மக்கு

கு.வ :- $\mathcal{X} \in A$

**7. முழுவதும் மட்டுப்படுத்தப்பட்ட A எடுப்பு**




A மட்டும் B ஆகும்.


மீன்கள் மட்டுமே நீந்துபவை ஆகும்.

சு.தி :- A – மீன்கள்

B – நீந்துபவை

சி.வ :- $A\bar{B} = \emptyset$

**8. ஒரு பகுதி மட்டுப்படுத்தப்பட்ட A எடுப்பு**




1. சில Aகள் மட்டுமே B ஆகும்

சில மீன்கள் மட்டுமே நீந்துபவை

சு.தி – A – மீன்கள்

B – நீந்துபவை

கு.வ :- $AB = \emptyset \; \Lambda \; AB = \emptyset$

**9. புறநடை A எடுப்பு**

புறநடை A எடுப்பு கொண்டுள்ள முக்கிய பண்புகள் பின்வருமாறு

1. எழுவாய்ப்பதமும் பயனிலைப்பதமும் வியாப்தி அடைந்திருக்கும்.
2. எழுவாய் வகுப்பு பயனிலை வகுப்பிற்கு சமமானது.
3. உண்மையில் எழுவாய் வகுப்பும் பயனிலை வகுப்பும் ஒரே வகுப்புக்களாகும்.

இவ்வாறான பண்புகளைக் கொண்டமைந்த புறநடை A எடுப்பானது இரு வழிகளில் தீர்மானிக்கப்படலாம்.

1. உண்மையின் அடிப்படையில்

   உதாரணம் :- எல்லா மனிதர்களும் பகுத்தறிவு உடையவர்கள்

2. எடுகோளின் அடிப்படையில்

   ➢ ஓர் A எடுப்பானது இரு வழிகளாலும் கூறப்பட்டிருப்பின் அதனைப் புறநடை A எடுப்பாகக் கருதிக் கொள்ள வேண்டும்.

உதாரணம் :- எல்லா நாய்களும் பாலூட்டிகள் என்பதோடு பாலூட்டிகள் எல்லாம் நாய்களாகும்.


- இரு பதங்கள் ஆயின் ஆயினே என்ற சொற்தொடரினால் இணைக்கப் பட்டிருக்குமேயானால் அதனைப் புறநடை A எடுப்பாகக் கருதிக் கொள்ள வேண்டும்.

உதாரணம் :- பட்டதாரிகள் ஆயின் ஆயினே பேராசிரியர்கள் ஆவார்.

சு.தி :- A – மனிதர்கள்


B – பகுத்தறிவு உடையவர்கள்

கு.வ :- $A\bar{B} = \phi$ $AB = \phi$





**10. ஒரு பகுதி சமப்படுத்தப்படாத வகுப்பு**

1. சில Aகள் ஆயின் ஆயினே B அல்ல.
   சில மனிதர்கள் ஆயின் ஆயினே இறப்பவர் அல்ல.
   சு. தி :- A – மனிதர்கள்.
   B – இறப்பவர்
   கு.வ :- $AB = \phi$ $AB = \phi$ $\phi$





**11. பொதுவானவை**


1. வியாபாரிகள் உள்ள
   சு.தி :- A- வியாபாரிகள் உளர்
   கு.வ :- $A = \phi$




2. வியாபாரிகள் எவருமில்லை
   சு.தி :- A – வியாபாரிகள்
   கு.வ :- $A = \phi$




3. ஒவ்வொன்றும் அணுவினால் ஆனவை
   சு.தி :- A – அணுவினால் ஆனவை
   கு.வ – $A = \phi$



**நியாயத்தொடை வாதங்களின் வாய்ப்பினை வென்வரைபடத்தால் மதிப்பீடு செய்தல்.**

நியாயத்தொடை வாதங்களின் வாய்ப்பினை வென்வரைபடத்தின் மூலம் மதிப்பீடு செய்வதற்கு முதலில் பொருத்தமான சுருக்கத்திட்டத்தினை இடுதல் வேண்டும். பின்னர் குறியீட்டு வடிவத்தினை இடுதல் வேண்டும். பின்னரே வென்வரை படத்தின் மூலம் வாய்ப்பினை மதிப்பீடு செய்தல் வேண்டும்.

A B C

A

1. எல்லா (ரோஜாக்களும் ) (அழகானவை) என்பதோடு (பூக்கள்) எல்லாம் (ரோஜாக்களாகும்)


C B

∴ (பூக்கள் ) எல்லாம் (அழகானவை) ஆகும்.

சு.தி :- A – ரோஜாக்கள்

B – அழகானவை

C– பூக்கள்




கு.வ – $A\bar{B} = \emptyset$

$A\bar{C} = \emptyset$

∴ $B\bar{C} = \emptyset$

இவ்வாதம் வாய்ப்பற்றது

ஏனெனின் $C\bar{B} = \emptyset$ என்பதனை

படம் பிரதிபலிக்கவில்லை.

2. எல்லா (மலர்களும்) அழகானவை ஆகும்.


மல்லிகை எல்லாம் மலர்கள் ஆகும்.

∴ மல்லிகை எல்லாம் அழகானவை ஆகும்.

சு.தி A– மலர்கள்

B– அழகானவை

C– மல்லிகை




கு.வ – $A\bar{B} = \emptyset$

$C\bar{A} = \emptyset$

∴ $C\bar{B} = \emptyset$

இவ்வாதம் வாய்ப்பானது

ஏனெனின் $C\bar{B} = \emptyset$ என்பதனை படம் பிரதிபலிக்கின்றது.

*சி. சாருகி*

A/L 2010

கலைப்பிரிவு

# எப்படி நாம் மறப்போம்?

எப்படி நாம் மறப்போம் - இந்த
ஈராண்டு காலத்தை
எப்படி நாம் மறப்போம்
காலையில் ஒன்று கூடி
கடவுள் வாழ்த்தினைப் பாடி
மதியம் வரை கல்வி பயின்று
மகிழ்வுடனே சென்ற காலமதை
எப்படி நாம் மறப்போம்? இந்த
ஈராண்டு காலத்தை
எப்படி நாம் மறப்போம்?
அளவையியலுடன் புவியியலும்
அரசியலுடன் அருந்தமிழையும்
விஞ்ஞானத்துடன் வணிகக் கல்வியினையும்
சமயத்துடன் சமத்துவத்தையும்
கணிதத்துடன் கணக்கீட்டினையும்
கருத்துடனே கணனிக் கல்வியினையும்
தினந்தோறும் திரட்டிய அனுபவங்களையும்
எப்படி நாம் மறப்போம்? இந்த
ஈராண்டு காலத்தை
எப்படி நாம் மறப்போம்?

ஸ்கந்தாவின் அன்பான அதிபரையும்
அனுபவங்கள் வழங்கிய ஆசான்களையும்
அன்புடனும் பண்புடனும் படிக்க வந்து
கூடிக் கும்மாளம் அடித்து குறும்புக் கதைகள் பலபேசி
சகோதர சகோதரிகளாய் பாடித்திரிந்து கற்ற
ஈராண்டு காலத்தை எப்படி நாம் மறப்போம்?



**அ. அறிலைஸ்ரீவன்சன்**
(2009) கலைப்பிரிவு.

# பாடசாலைகளும் பிரச்சினைகளும்

**பேராசிரியர் மா.சின்னத்தம்பி**
*கல்வியியல் பேராசிரியர்,*
*தலைவர், சட்டத்துறை,*
*யாழ்.பல்கலைக்கழகம்*



**அறிமுகம்**

எமது யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரச்சினைகள் பெருமளவிற்குப் பெற்றோரைச் சார்ந்தனவாக உள்ளன. பெற்றோரின் பொருளாதார நிலை, தொழில் முறை, சமூக அந்தஸ்து, கல்வி நிலை, பிள்ளைகளின் கல்வி பற்றிய எண்ணம், அவர்களது தடைகள் போன்ற பல விடயங்களும் பாடசாலை தொடர் பான பிரச்சினைகளையும் எழு வினாக்களையும் (Issues) தீர்மானித்து வருகின்றன.

நகர்ப்புறப் பெற்றோரிலும் பார்க்க கிராமப்புறப் பெற்றோர் வேறுபட்ட சமூக விசைகளினால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். சமூக மட்டத்தில் குறிப்பாக கிராமிய மட்டத்தில் சொத்து, கல்வி, சமூக தரநிலை, தொழில்முறை என்பன தொடர்பாக வலுவாக உள்ள மேட்டுக்குடியினரிலிருந்து விவசாயக் கூலிகள், சிறு தொழிலாளர் போன்றோர் அதிகம் வேறுபட்டுக் காணப்படுகின்றனர். இந்த வேறுபாடுகள் அவர்களது பிள்ளைகள் மீது அதிக பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

இந்த விடயம் பற்றியும் இதன் பாதிப்புக்கள் பற்றியும் இக்கட்டுரை கவனம் செலுத்துகின்றது.

**கிராமியப் பாடசாலைகள்**

இலங்கையில் 10, 205 பாடசாலைகள் தற்போது (2009) காணப்படுகின்றன. இவற்றில் 9410 பாடசாலைகள் அரச பாடசாலைகள் தான். கிராமங்களில் பரவிக் கிடப்பன இந்த அரச நிதியுதவியுடன் அரச மேலாண்மையின் கீழும் இயங்கும் அரச பாடசாலைகள் தான். இங்கு சர்வதேசப் பள்ளிகளோ, நவீன மயப்படுத்தப்பட்டனவும் துரிதமாக சமூக அசைவியக்கத்தைத் தூண்டக்கூடிய ஆளுமை வளர்ச்சிச் செயல்கள் கொண்டனவுமாகிய தனியார் பாடசாலைகளோ காணப்படுவதில்லை.

பெரும்பாலான கிராமியப் பாடசாலைகளின் குறிக்கோள், பிழைப்பூதிய வாழ்வாதாரத்திற்கு ஏற்றவர்களாகப் பிள்ளைகளைத் தயார் செய்வதுதான். ஆசிரியர்கள், பள்ளி நிர்வாகம், மாணவர் பெற்றோர் போன்ற எல்லாப் பொறுப்பு தாரிகளிடமும் கல்வி பற்றிய பெரிய எண்ணங்கள் ஏதுமில்லை. அதன் வலிமை உணரப்படவில்லை. கல்வியின் உள்ளார்ந்த வலிமையும் விசையும் உணர்த்தப்படுவதுமில்லை. சீரான கல்வி தமது தலைமுறையைப் பாதுகாப்பற்ற வாழ்க்கை நிலையிலிருந்து பாதுகாப்பும் வலிமையும் கொண்ட வாழ்க்கை முறைக்கு நகர்த்தும் என்பது சரியாகவும் தெளிவாகவும் பாடசாலைகளினால் உணர்த்தப்படவில்லை.

பெருமளவிற்கு எழுத்தறிவூட்டும் நிலையங்கள் போலக் காணப்படுகின்றன. எட்டு வருட கல்வியை வழங்கினாலே போதும் என்று எண்ணுகின்றன.

நகர்ப்புறங்களில் வசதி மிக்க தேசிய பாடசாலைகள் பெருமளவு இயங்கு கின்றன. 334 தேசிய பாட சாலைகளில் பெருமளவானவை நகர்ப் புறங்களில் மையங்கொண்டுள்ளன. இவை சமூகத்தின் மேட்டுக்குடியினர் (Elites) அல்லது மரபு வழியான சொத் துடைமையாளர்களின் பிள்ளைகளுக்கு நவீன வசதிகளையும் அதிகார மேலா ண்மைத் துணிவையும் வழங்கி வரு கின்றன. இதேபோல் மேலைத்தேய நாடுகளில் வாழ்வதற்கான அறிவையும் வாழ்க்கைப் பாணியையும் அதற்கிசை வான உள வலிமையையும் வழங்கு வனவாக சர்வதேசப் பாடசாலை களும் இந்த நகரப் பகுதிகளில் இயங்கி வரு கின்றன. ஏறக்குறைய 75 இத்தகைய பள்ளிகள் இயங்கி வருகின்றன.

இவ்வாறு கிராமங்களுக்கு எளிய வகைப் பாடசாலைகள் எளிய பெற்றோ ருக்காக இயங்கி வருகின்றன. உட்கட்ட மைப்பு வசதிகள், கற்றல், கற்பித்தல் செயலாற்றங்கள் இணைக்கலைத் திட்ட ஏற்பாடுகள் என்பன தொடர்பாக நகர்ப் புறங்களில் வலிய – பெரிய பாட சாலைகள் இயங்குகின்றன.

கிராமங்களிலும் வளம் நிறைந்த பாடசாலைகளை இயன்றளவு உருவாக்கு வதற்கு இசுறு பாடசாலை நிகழ்ச்சித் திட்டம் உதவி வருகின்றது. 2012இல் 325 இசுறு பாடசாலைகள் இயங்கும். எனினும் கிராமிய நகர பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை விடவும் இத்துறை களினிடையிலான கல்வி மற்றும் பாட சாலை தொடர்பான முறைமை தொடர் பான சமமின்மை அதிகளவிற் காணப்படு கின்றது.

இதில் கிராமியத் துறையும் கிராமியப் பெற்றோரும் அதிகம் பாதிக்கப்படு கின்றனர். "மஹிந்த சிந்தனை"யின் படியான கல்வி மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் இயன்றளவு இத்தகைய கிராமியப் பாடசாலைகளை மேலுயர்த்துவதற்கு அக்கறை காட்டி வருகின்றன.

### கிராமியத் துறையில் பெற்றோர்கள்

இங்கு கிராமியத் துறைப் பெற்றோர் கள் என்று குறிப்பிடப்படுவது சிறப்பாக வடமாகாணப் பெற்றோர்களையே என் பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். தற்போது கிராமங்களில் காணப்படும் வறிய குடும்பங்களும் பெற்றோரும் பின்வரும் பல வகையினராகக் காணப் படுகின்றனர்.

1. விவசாயக் கூலிகள், சிறுகைத் தொழி லாளர்கள் சார்ந்த குடும்பங்கள்.
2. யுத்தத்தினால் பல தடவை இடம் பெயர்ந்து தமது நிலவுடைமையின் பயன்களைக் கூட உறுதிப்படுத்த முடியாத குடும்பங்கள்.
3. யுத்தம் மற்றும் நெருக்கடிகளினால் தந்தை அல்லது தாயை இழந்து ஒற்றைப் பெற்றோருடன் வாழும் குடும்பங்கள்
4. யுத்தம் மற்றும் நெருக்கடிகளினால் தாய், தந்தை ஆகிய இருவரையும் இழந்து இறுகிய உளநிலையில் அவநம்பிக்கையுடன் எதிர்காலத்தை எதிர்நோக்கி பராமரிப்பு நிறுவனங் களில் வாழும் குழந்தைகள், சிதறிய குடும்பங்கள்.
5. மீளக்குடியேறியவர்களாக புதிதாக வாழ்வை நிலைநிறுத்த முயலும் குடும்பங்கள்; இவர்களது பிள்ளைகள் புதிய புதிய சூழலை அடிக்கடி உணர் பவர்களாக இருப்பார்கள்.

இத்தகைய பல புதிய மாதிரியான குடும்ப முறைமைகள் கிராமங்களில் அதிகரித்து வருகின்றன. பலவீனமான பொருளாதார நிலை, தொழில்வாய்ப்புப் பற்றிய நிச்சயமின்மை, புதிய தொழில் களில் நுழையும் நிலை, நிவாரணங்களில் சார்ந்து வாழும் நிலை, நீண்ட காலம் பற்றிய இலட்சியங்கள் எதுவுமற்ற நிலை போன்றன இக்குடும்பங்களின் பண்புக் கோலங்களாக உள்ளன.

பலவீனமான குடும்பங்கள் என்பது அவநம்பிக்கை கொண்ட வறிய குடும் பங்களாக இனங்காணப்படுகின்றன. இவை தமது பிள்ளைகளின் கல்வி தொடர்பாகக்கொண்டுள்ள எண்ணங் களும் நம்பிக்கைகளும் வேறுபட்டன. அவை

- படிப்பதைவிட தற்காலிக வேலைகள் செய்து குறுங்கால வருமானம் பெறு வது நல்லது.
- இலவச மதிய உணவு, இலவசப் பாடநூல்கள், இலவச சீருடை என்ப வற்றை மையப்படுத்தி பாடசாலை செல்லுதல்.
- பிள்ளைகளைத் தொலைவிலுள்ள தரமான பள்ளிகளில் இணைப்பது பற்றிய எத்தகைய நினைப்பும் வசதியும் அற்றவாறிருத்தல்.
- பிள்ளைகளை உரிய காலத்தில் பாடசாலைகளில் இணைத்தல், அவர் களது நாளாந்த வருகையை உறுதிப் படுத்துவதில் ஆர்வமின்மை.
- பிள்ளைகளின் படிப்புத் தேவைகள், பிரச்சினைகள் தொடர்பாக பாட சாலை அதிபர்கள் அழைத்தாலும் செல்வதில் ஆர்வமின்மை.
- தகாத பழக்கங்கள். தகாத தொடர்புகள், தகாத தொழில்களில் உள்ளவர்கள் என்பனவற்றினால் தமது பிள்ளை களில் ஏற்படும் பாதிப்பை உணர முடியாதவர்களாக இருத்தல்.
- தமது பிள்ளைகளிடம் கைத்தொலை பேசி, புதிய ஆடைகள், புதிய மாதிரி நுகர்வுகள் என்பனவற்றுக்குரிய பணம் யாரால் தரப்படுகின்றது. எவ்வகையில் அதனைப் பெறுகின் றனர் என்பதை உணராதிருத்தல்.
- பாடசாலைக்குப் புறம்பாகப் பல்வேறு கல்வி நிலையங்களுக்குக் கற்பதற் காகச் செல்லும் தம் பிள்ளைகளின் தொடர்புகள், நடத்தைகள் பற்றி அறிய முடியாதிருத்தல். அதில் ஆர்வம் எதுவுமின்றியிருத்தல்.
- பிள்ளைகளுக்குத் தாம் கொடுக்கும் சிறு செலவுக்கான பணம் அல்லது ரியூசன் கட்டணத்திற்காகக் கொடுக் கப்படும் பணம் எவ்வாறு உண்மையில் செலவிடப்படுகின்றது என்பதை புலனாய்வு செய்யாத — செய்ய முயலாதவர்களாக இருத்தல்.
- பள்ளி செல்லும் பெண் பிள்ளை களின் படிப்பு பாடசாலை மட்டப் பிரச்சினைகள் சோதனைகள் பெறு பேறுகள் போன்றன தொடர்பாக அதிபர் ஆசிரியர்களிடம் கலந்துரை யாடுவதன் முக்கியத்துவத்தை உணர முடியாதவர்களாயிருத்தல். பிள்ளை களும் அவர்களது சகபாடிகளும் சொல்வதை மாத்திரம் எல்லா வேளையிலும் முழுமையாக நம்பிச் செயற்படல்.
- பிள்ளைகளின் தகைமை, ஆற்றல் விருப்பம் தொடர்பான உண்மைத் தர நிலைகளை மதிப்பிட்டு மாற்று ஏற்பாடுகள் செய்வது பற்றி உரிய வர்களிடம் கலந்துரையாட முனை யாதவர்களாக இருந்தல். இதற்காக

யாரை அணுகுவது என்பதைக் கூடப் பெரும்பாலான பெற்றோர் அறிந்திருப்பதில்லை.

இத்தகைய பலவீனங்களுடன்தான் தமது பள்ளி செல்லும் பிள்ளைகள் தொடர்பாக பெரும்பாலான பெற்றோர் நடந்துகொள்கின்றனர்.

சில குடும்பத்தவர்களுக்கு சகோதரர்கள் அல்லது உறவினர்கள் வெளிநாடுகளிலிருந்து அனுப்பும் அந்நியச் செலாவணியை எவ்வாறு செலவிடுவதெனத் தெரிவதில்லை. தமது பிள்ளைகள் பிழையான வாழ்வுமுறைக்குள் செல்வதற்கும் இந்த வசதிகள் காரணமாகிவிடுகின்றன.

விலைகூடிய நாகரீக உடைகள், விலை உயர்ந்த சாப்பாத்து மற்றும் பாதணிகள், விலை கூடிய கைத்தொலைபேசி, நாகரீகமான மோட்டார் சைக்கிள் போன்றவற்றை வாங்கிக் கொடுப்பதால் தமது குடும்ப அந்தஸ்து உயர்ந்து விடுவதாக பெற்றோர் பலர் எண்ணுகின்றனர்.

பள்ளிப் பராயப் பிள்ளைகளுக்கு இவை நன்மை செய்ய மாட்டா; பொருத்தமான நடத்தைக் கோலங்களை உருவாக்க உதவி செய்யமாட்டா; மாறாக எதிர்பாராத தீய சூழலுக்கும் தீமை தரும் வாழ்வுக்கும் அவர்களை இழுத்துச் சென்றுவிடும்.

எதிலும் கட்டுப்பாடு, எதிலும் நிதானம் வேண்டும். அன்பை ஆக்கத்திற்கே பயன்படுத்த வேண்டும்.

**கிராமிய பாடசாலை அதிபர்களும் துயரங்களும்**

கிராமியப் பாடசாலைகள் பாதுகாப்பற்ற நிலைமைகளில் இயங்குகின்றன; வசதியற்ற சூழலில் தொழிற்படுகின்றன; ஊக்கம் குறைந்த பெற்றோர்களை நம்பிச் செயற்படுகின்றன; கவனக்குறைவும், அக்கறையின்மையும் கொண்ட சிறுவர்களை மையமாக வைத்துச் செயற்படுகின்றன; பெரும்பாலும் கற்றல் சூழலை உறுதிப்படுத்த முடியாத நிலைமையில் இயங்குகின்றன.

இத்தகைய பாடசாலைகளின் அதிபர்கள் பல இயல்புகளுக்குட்பட்டவராக காணப்படுகின்றனர். அவர்களது நிலைமைகளும் நெருக்கடிகளும் பல. அவை:

- குறித்த கிராமத்தை சாராதவராக இருத்தல். நாளாந்தம் அதிக தூரம் பயணம் செய்தல்
- பரீட்சை முறையில் சித்தி பெற்று அதிபர் பதவி பெற்ற இளம் அதிபர்களை அங்கீகரிப்பதில் கிராமிய முதியோர், கிராமியத் தலைவர்கள் தயக்கம் காட்டுதல்.
- அடிக்கடி அறிமுகமாகும் இடமாற்ற உத்தரவுகளினால் தொலைநோக்குடன் இயங்கமுடியாது இருத்தல்.
- பல்வேறு விழாக்கள், செயற்றிட்டங்களுக்காக ஆசிரியர்களையும் மாணவர்களையும் பாடசாலை வளங்களையும் பயன்படுத்துமாறு நிர்ப்பந்திக்கப்படுவதால் கலைத்திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்ற முடியாதிருத்தல்.
- பள்ளிக்கு நன்கொடை மற்றும் உதவி வழங்கும் நல்மனம் படைத்தவர்கள் கூட அளவுக்கதிகமாக அதிபர்கள் மீது மேலாண்மையைப் பிரயோகித்தல்.
- கிராமிய உட்கட்டமைப்பில் வலுவான நிலையிலிருப்போர் தமது தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும்

முன்னுரிமை வழங்குமாறு அதிபருக்கு அழுத்தங்கள் கொடுத்தல்.

- சில உயர் அலுவலர்கள் தெளிவற்ற கண்ணோட்டங்களால் முற்சாய் வுடன் பாடசாலைப் பணிகள் தொடர் பாக சில செயற்கையான தடைகளை உருவாக்கல்.
- மாணவர் பற்றியும் பாடசாலை முன் னேற்றம் பற்றியும் கலந்துரையாடு வதற்கு பெற்றோர் பாடசாலைக்குச் சமூகம் தராதிருத்தல். அனுமதியின் போது காட்டும் ஆர்வத்தைத் தொடர்ந்து பெற்றோர் பேணாதி ருத்தல்.
- கிராமிய மட்டத்தில் இயங்கும் பெரிய தனியார் ரியூசன்களின் நிகழ்ச்சி நிரல்களினால் மாணவரும் பாடசாலை நிகழ்வுகளும் பாதிக்கப் படுவதைத் தடுக்க முடியாது அதிபர் திண்டாடுதல்.
- அடிக்கடி ஒழுங்கமைக்கப்படும் அரச/அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலமர்வுகளில் பங்குபற்றுவதற்கு அடிக்கடி ஆசிரியர்களை பள்ளியி லிருந்து விடுவிப்பதால் கற்பிப்பதில் ஏற்படும் பாதிப்புக்களை ஈடுசெய்ய முடியாது சிரமப்படுதல்.
- இடம் மாற்றம் பெற்று வருகின்ற ஆசிரியர்கள் கிராமிய வசதியின்மை களினால் வேறு பெரிய பாடசாலை களுக்கும் திடீர் இடமாற்றங்களைத் தமது அரசியல் செல்வாக்குகளினால் பெறும்போது அதிபர் சிரமங்களை எதிர்கொள்ளல். குறிப்பாகக் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ்மொழி போன்ற பாடங்கள் கற்பிப்பவர்கள் தொடர்பாக இத்தகைய நெருக்கடி ஏற்படும்போது மாற்று ஏற்பாடு களுக்காக சிரமப்படல்.
- பல கிராமிய பாடசாலைகளுக்கு உரிய விளையாட்டு மைதானம், அரங்கு என்பன காணப்படுவதில்லை. இந்த நிலையில் பிள்ளைகளையும் ஆசிரியர்களை வேறு பொது இடங் களுக்கு அல்லது வேறு பாடசாலை களுக்குக் கூட்டிச் செல்வதில் அதிக சிரமங்களை எதிர்கொள்ளல்.

இத்தகைய பல சிரமங்களை கிராமி யப்புறப் பாடசாலைகள் தொடர்ந்து எதிர்கொண்டு வருகின்றன. இதனால் இவற்றுக்கு நியமனம் பெறும் அதி பர்களில் பெரும்பான்மையானவர்கள் வேறு பாடசாலைகளுக்கு இடம்மாற்றம் பெறும் கனவுகளுடனும் முயற்சிகளு டனுமே செயற்பட்டு வருகின்றனர். அது இயல்பானதும் நியாயமானதும் என்றே கருத வேண்டும்.

**முடிவுரை**

கிராமிய பாடசாலைகள் நிச்சயம் வளரவேண்டும். அல்லது பள்ளிகளில் சேர்க்கப்படாத மாணவர் தொகை அதிகரிக்கும்; வறியவர்களிடத்தில் இது மேலும் அதிகரிக்கும்; இடையில் தமது படிப்பை நிறுத்துவோர் தொகையும் பெருகிவிடும். கிராமங்களில் வீதிகளில் அலையும் சிறுவர் தொகை அதிகரிக்கும். பொருத்தக் கேடான தொழில்களில் பணிபுரியும் சிறுவர், சிறுமியர் எண்ணிக் கையும் கிராமங்களிற் பெருகிவிடும். அறியாமையும் வறுமையும் மிக்க குடும் பங்களில் எண்ணிக்கையும் கிராமங்களில் அதிகரிக்கும்.

இதனால் கிராமங்களில் வறுமையும்; அறியாமையும்; பின்னடைவதும், தீங்குறு செயல்களும் அதிகரித்துவிடும். கிரா

மங்கள் பாதுகாப்பற்ற வலயங்களாக மாறிவிடும்.

கிராமியப் பெற்றோர்களிடம் தெளிவான சிந்தனையும், விழிப்புணர்வும், பொறுப்புணர்வும் வளர வேண்டும். குடிமக்கள் நிறுவனங்கள் இதில் தீவிர அக்கறை காட்ட வேண்டும். பெற்றோர் அதிபர்களுடன் அதிகம் தொடர்பு கொள்ள வேண்டும். பாடசாலையுடன் சேர்ந்து இயங்க வேண்டும்.

கிராமிய டியூட்டறிகள் பாடசாலைகளையும் பலவீனப்படுத்தக்கூடாது. அப்பாடசாலை ஆசிரியர்கள் பற்றித் தரக்குறைவாகப் பேசுதல் கூடாது. அவர்கள் தான் தொழிலின் வேர்கள்.

கல்விக் கோட்ட வலய அலுவலர்கள் திறந்த மனதுடன் கிராமிய பாடசாலை அதிபர்களின் இடர்பாடுகளையும் தேவைகளையும் செவிமடுக்க வேண்டும். பெற்றோர் பாடசாலைத் தொடர்புகளை மேன்மைப்படுத்த இந்தத் தகைமை மிக்க அலுவலர்கள் பாடுபட வேண்டும்.

அதிபர்களும் நேர்மையாகவும் ஈடுபாட்டுடனும் தமது கடமைகளை நிறைவேற்ற வேண்டும். பெற்றோருடனும் கிராமிய நிறுவனங்களுடனும் கல்வி அலுவலகங்களுடனும் நல்ல உறவைப் பேண வேண்டும். இதனால் தாமும் உயர்ந்து கிராமங்களையும் மேம்படுத்த முடியும்.

◆ ◆ ◆

All the religions of the world, while they may differ in other respects, unitedly proclaim that nothing lives in this world but Truth.

**- Mohandas Gandhi**



நீங்கள் ஒரு நேர்மையான மனிதராக ஆகிவிடுங்கள், உலகில் ஒரு போக்கிரி குறைந்துவிட்டான் என்று நீங்கள் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

**- தாமஸ் கார்லைல்**

உலகிலுள்ள மிகச் சிறந்த, மிக அழகான பொருள்களைக் காணமுடியாது. தொட்டுணரக்கூட முடியாது. அவற்றை இதயத்தால் உணர வேண்டும்.

**- ஹெலன் கெல்லர்**

# ஒளித்திடுவோம்! வழிப்படுத்திடுவோம்!

எழில் அழகாம் எங்கள் திருநாடு
இதில் சந்தேகம் ஏதுண்டு சொல்வீர்கள்?
மழைமேகம் வந்து மண்ணைத்தொட
மக்கள் மகிழ்வோடு வாழ்கின்ற பெருநாடு
அன்று முதல் மக்கள் இன்றுவரை
அழகான இயற்கையில் வாழ்கின்றனர்
அடைப்பட்டு வந்தது மதுபோதை
மக்கள் வாழ்வின் இடையோடு
போகின்றனர் மேல்லோகம்

மது போதையில் மக்கள் மயங்க
நம்நாடு மறுக்கின்றது சரிவர இயங்க
குடிமக்கள் ஆன நீங்கள்
மது போதைக்குள் ஆளானதாலே இன்று
உன்பிள்ளை அழுகிறது பசியோடு
இதுவா நம் திருநாட்டு நிலைப்பாடு

ஐயகோ!
சாகின்றதே எந்தன் தாய்நாடு
விடைபெற்று போகின்றதே நம்பண்பாடு

தீராதோ இந்த முறைகேடு
மக்கள் வாழனுமே என்றும் சீரோடு
அரசது சிந்தனை மதுஒளிப்பு
இதைக் கேட்டதும் மக்கள் எதிரொலிப்பு
மது போதையில் தேசம் அழிவதென்றால்
முதலில் அத்தேச மக்கள் ஒளிதல் நன்று
இதனை நாம் எதிர்த்து போராடி
பெறவேண்டும் எமக்கெனப் புதுத்தேசம்
என புறப்படுவோமே துணிவோடு

வாழியவே எம் தாய்நாடு
வாழியவே எம் குடிமக்கள்
என்று எல்லோரையும் தட்டி எழுப்பி
கொட்டி முரசுகளை அறைந்து
வீழ்த்திடுவோம் மதுபோதையை
ஆக்கிடுவோம் புதுதேசத்தை!

வி. சுலக்சன்
(2009) கலைப்பிரிவு.

கல்வியமைச்சினால் நடத்தப்பட்ட போதை எதிர்ப்பு தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்ற கவிதை



அறியாமை வெட்கப்படவேண்டிய ஒன்றுதான்.
ஆனால் அறிந்துகொள்ள விருப்பமில்லாமை
அதைவிடப் பெரிய வெட்கக்கேடாகும்.

- பென்ஜமின் ஃபிராங்ளின்

# இசுறு பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - ஓர் அறிமுகம்

திரு. க. ஆதித்தன்

இலங்கை சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாபதி அவர்களின் "மஹிந்த சிந்தனை" வேலைத் திட்டத்தின் படி தேசத்தின் பிள்ளைச் செல்வங்களின் அறிவையும் நற்குணங்களையும் வளர்ப் பதைத் தொனிப்பொருளாகக் கொண்டு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவி லிருந்தும் தெரிவு செய்யப்பட்ட ஒரு பாடசாலை சகல பௌதீக வளங்களும் மனித வளங்களும் கொண்ட தலைசிறந்த பாடசாலையாக முன்னேற்றப்படுகின்றது. இது இசுறு பாடசாலை அபிவிருத்தித் திட்டம் என அழைக்கப்படுகிறது. மஹிந்த சிந்தனைத் திட்டத்தில் "நெனகுணவெடும" அறிவு விருத்தியில் குறிப்பிட்டுள்ள விசேட திட்டமாகும். இதற்கு விசேடமாக முன்னு ரிமை கொடுத்து செயற்படுத்தப்படுகின்றது. இந்நிகழ்ச்சித் திட்டம் சனாபதி அலுவல கத்தின் வழிகாட்டலின் கீழ் கல்வியமைச்சி னால் செயற்படுத்தப்படுகின்றது. வறுமை நிலையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளின் வகையீட்டின் படி வறுமை நிலை கூடுதலாக நிலவும் பிரதேச செய லாளர் பிரிவிலிருந்து ஆரம்பமான இத்திட் டத்திற்காக உள்நாட்டு நிதியங்களும் வெளிநாட்டு நிதியங்களும் ஈடுபடுத்தப்பட் டுள்ளன.

இசுறு பாடசாலை அபிவிருத்தித் திட்டத்திற்கான நிதியுதவி ஆசிய அபி விருத்தி வங்கி (ADB) யால் வழங்கப்படு கின்றது. இந்தத் திட்டத்தில் முதற்கட்ட மாக 150 பாடசாலைகள் தெரிவு செய்யப் பட்டுள்ளன. இவற்றில் யாழ் மாவட்டத்தில் வலிகாமம் வலயத்தில் எமது பாடசா லையாகிய யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் மற்றும் யா/விக்ரோறியாக் கல்லூரியும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. யாழ் வலயத்தில் யா/புத்தூர் சோமஸ்கந் தாக் கல்லூரியும், வடமராட்சி வலயத்தில் யா/கரவெட்டி விக்கினேஸ்வரா வித்தி யாலயமும் தென்மராட்சி வலயத்தில் யா/வரணி மகாவித்தியாலயமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப்பாடசாலைகளிற்குத் தேவையா பௌதீக மற்றும் உள்ளக கட்டமைப்பு வசதிகள் செய்யப்படுவதுடன் அப்பகுதி யின் சிறந்த பாடசாலையாக உருவாக்கப் படுதலாகும். அத்துடன் பாடசாலை மாண வர்களுடைய திறனை சிறப்பானதாக ஊக்குவிக்கும் பயிற்சி நெறித் திட்டங் களும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

இவ் இசுறு பாடசாலை அபிவிருத்தித் திட்டம் என்ற எண்ணக் கருவில் குறித்த பாடசாலைகள் ஆரம்ப பாடசாலை வலைப் பின்னலின் கீழ் இடைநிலைக் கல்வி மாணவரைக் கொண்ட நடுத்தர இடை நிலைப் பாடசாலைகளாக அடையாளம் காணப்பட வேண்டியது பிரதான நியமங் களாகும். இதன் கீழ் சகல இசுறு பாட சாலைகளும் இடைநிலைப் பாடசாலை களாகவே இருக்க வேண்டும். ஏதேனும் காரணத்தால் அப்பாடசாலையில் ஆரம்ப வகுப்பு இருக்குமேயானால் வருடா வருடம் ஆரம்ப வகுப்புக்கள் குறைந்து

கொண்டு போகும் வகையில் (பாடசாலை வலைப்பின்னலில் உள்ள ஏனைய ஆரம்பப் பாடசாலைக்கு குறித்த மாண வரை அனுப்புவதன் மூலம்) ஆரம்ப வகுப்புக்களை நீக்கிவிட்டு இடைநிலைப் பாடசாலைகளாக அடையாளப்படுத்த வேண்டும். இம் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த முடியாத சூழ்நிலை காணப்படுமாயின் முதலாவது மாற்றுத் திட்டமாக அப்பாடசாலையில் உள்ள ஆரம்ப வகுப்புக்களை ஆரம்ப பாடசாலை யாக வேறுபடுத்தி, அதே காணிக்குள் அதனை வேறு ஒரு ஆரம்பப் பாடசாலை யாகப் பதிவு செய்து தனியான ஒரு அதிபரின் கீழ் அடையாளப்படுத்தப்பட்ட பாடசாலையாக அமைக்க வேண்டும்.

இம்முதலாவது மாற்றுத் திட்டம் நடைமுறைப்படுத்தக் கூடிய நிலைமை எட்டப்படாத பட்சத்தில் இரண்டாவது மாற்றுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. அதாவது காணியில் போதிய இடவசதி காணப்படாதவிடத்து, அவ் ஆரம்ப பாட சாலையை வேறு ஒரு காணியில் அமைத்து புதிய பாடசாலை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும். இதில் குறித்த பாடசாலைக் கட்டமைப்பை மிகவும் நியாயபூர்வமாக மேற்கொள்ள வேண்டியதுடன், பிரதே சத்தில் உள்ள ஆரம்ப பாடசாலைகளிற்கு இவ் ஆரம்ப வகுப்பு மாணவர்களை உள்வாங்க முடியாத நிலைமை காணப் படுமாயின் மட்டுமே மேற்குறித்த தீர் மானத்தை எடுத்தல் பொருத்தமானதாக அமையும்.

இவ்வாறாக இசுறு பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தினுள் உள்வாங்கப் பட்ட பாடசாலைகள் தமது ஆரம்ப வகுப்பு களிற்கான ஒழுங்கை மாற்றியமைத்தல் இன்றியமையாத ஒன்றாக இருந்தது. இல்லையேல் அப்பாடசாலைக்குக் கிடைக்கும் நிதியுதவிகள் மற்றும் உதவிகள் கிடைக்க மாட்டாது.

ஒரு சமூகம் ஏற்றுக்கொள்ளும் வகையிலும் பெற்றோர்கள் ஏற்றுக்கொள் ளும் வகையிலும் ஒரு பாடசாலையானது சிறந்த பாடசாலையாக கணிக்கப்படுவது அப்பாடசாலை மாணவர்கள் பெற்றுக் கொள்கின்ற பரீட்சைப் பெறுபேறுகளி னதும் மற்றும் ஏனைய இணைப்பாட விதான செயற்பாடுகளின் பெறுபேறு களின் மூலமாகும். அத்துடன் இப்பாட சாலைகள் அமைந்துள்ள பிரதேசத்தில் விசேடத்துவம் மிக்க மத்தியஸ்தானம் (Center of Excellence) உருவாகுதல் மற்றும் பிரபல பாடசாலைகளிற்கு அதிகமான மாணவர்கள் செல்வதனைக் கட்டுப்படுத்தல் மற்றும் பரீட்சைகளில் பெற்றுக் கொள்கின்ற உயர்மட்ட பெறுபேறுகள் போன்றவை முக்கிய காரணமாக அமைகின்றன.

அதற்கு அமைய பல மேம்படுத்தல் திட்டங்கள், வேலைத் திட்டங்கள் நடத்தப் பட்டன. அவ் வகையில் அதிபர்களிற்கு 18நாள் வதிவிட செயற்றிட்டம் 2009ஆம் ஆண்டு மே மாதம் நான்காம் தேதியில் இருந்து நடைபெற்றது. இதில் எமது பாட சாலை அதிபர் அவர்களும் பங்கு பற்றி பயிற்சியினைப் பூர்த்தி செய்து கொண்டார்.

மேலும் இவ் அபிவிருத்தித் திட்டத் தில் இப் பாடசாலைகளை இணையத்துடன் இணைக்கும் வேலைத்திட்டம் ஒன்று 2009 யூலை மாதம் 22ம் திகதியிலிருந்து 24ம் திகதி வரையான மூன்று நாட்கள், தொலைக் கற்றல் நிலையம் (DLC) கொழும்பு – 07இல் வதிவிட வேலைத்

திட்டமாக நடைபெற்றது. இதில் எமது பாடசாலை ஆசிரியர்கள் பங்குபற்றி இணையத் தள முகவரியை உருவாக் கியமை குறிப்பிடக் கூடியதாகும். எமது பாடசாலை இணையத் தள முகவரி– www.skandaisurusch.lk ஆகும்

அடுத்ததாக இசுறு பாடசாலை ஆசி ரியர்களை வலுவூட்டல் செயற்திட்டத்தின் கீழ் 2009ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19ம் திகதியன்று எமது பாடசாலை யில் ஒரு முழுநாள் செயலமர்வு இசுறு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட அதிகாரி களால் நடத்தப்பட்டது. அதில் எமது பாடசாலையின் சகல ஆசிரியர்களும் பங்கு பற்றினர் என்பது குறிப்பிடக்கூடியது.


மிகவும் பிரமாண்டமான எதிர் பார்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற் காக இசுறு பாடசாலைகளில் தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கின்ற ஆசிரியர் களிற்கு விசேடமான பயிற்சி நெறி ஒன்று தேசிய கல்வி நிறுவனத்துடன் இணைந்து நடாத்தப்பட்டது. இச் செயற் திட்டமானது பாடசாலை மாணவரின் மட்டம் மற்றும் அவர்களின் பின்புலம் போன்றவற்றினை அடிப்படையாக கொண்டதாகவும் மற்றும் சரியான வழிகாட்டல் மூலம் மாண வர்களின் சிறப்பங்களை வெளிக்கொண்டு வருவதாகவும் அமைந்திருந்தது. இதற் காக இம் மாணவரைக் கற்பிக்கும் ஆசி ரியர்கள் தங்கள் பாடம் தொடர்பாக மிகவும் ஆழமான அனுபவத்தினைப் பெற்றி ருத்தல் அவசியமான தொன்றாகும்.

இந்த வகையில் மேற்கூறப்பட்ட நான்கு பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் தலா இருவரிற்கு தேசிய கல்வி நிறுவனத்தில் 4 தினம், 5தினம் உள்ளிட்ட முழுமையான தங்குமிட வேலைத்திட்டமாக ஒக்ரோபர், மற்றும் நவம்பர் மாதங்களில் நடைபெற்றன.

இவ்வாறு கற்பித்தல் கற்றல் தொடர் பான வேலைத் திட்டங்கள் நடைபெறும் அதேவேளை பௌதீக வள அபிவிருத்தி தொடர்பான வேலைத் திட்டங்களும் நடைபெற்று வந்தன. அந்த வகையில் இசுறு பாடசாலைகளில் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதன்மைப் பாடசாலை யாக, யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி தெரிவு செய்யப்பட்டு இதன் பௌதீக வள அபிவிருத்திக்கு உலகவங்கி நிதி ரூபா முப்பத்தைந்து மில்லியனும், மாகாண கல்வி அமைச்சின் முதலீடு ரூபா பதி னைந்து மில்லியனும், வேறு நிறுவனங் களின் முதலீடு ரூபா 10 மில்லியனும் ஒதுக்கப்பட்டது. இதன் முதற்கட்டமாக எமது கல்லூரியில் புதிய மூன்று மாடிக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் கல்வியமைச்சர் கௌரவ சுசில் பிரேம ஜெயந்தவினால் 2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஒன்பதாம் திகதி நாட்டப்பட்டது.

இந்த வகையில் சிறந்த முன் மாதிரிப் பாடசாலைகளாக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இசுறு பாட சாலைகள் திகழும் என்பது திண்ணம்.

♣ ♣ ♣



# Seasons

The earth has a variety of seasons and climates As a result of weather we can find 4 seasons clearly on the Earth. They are Spring. Summer Autumn and Winter.

Spring is the season that brings new life to vegetation birds, animals and human beings. In Winter the snow begins to melt. The days become longer and the nights become shorter. Flowers are in full bloom. Birds return to home. People wear light clothes. Green leaves come out and birds begin to sing. It will last from March – May.

Summer, the days are longer and nights are shorter. This is the hottest season of the year. There will be more sun shine and heat. The people will occupy in many out door games and go for swimming flowers are in bloom. Trees bear with fruits. It will last from May to August. It is the season of great joy for every thing.

Next to Summer we find Autumn. The nights become longer and the weather gets little cooler. Colourful soft petals and green leaves blown off by the wind. The birds begin to look for warmer climate. People get ready for the next season winter.

Winter is the coldest season of them all It will occur from December to February. The nights are long and dark. Leaves, flowers and fruits, will disappear. Birds leave home looking for warmth. People wear heavy clothes. Life becomes difficult It is the most unpleasant season of all.

Season changes according to the weather. Every season gives a beauty to the nature .

**R. Logitha,**
Grade 7[A]

Subdue your appetites, my dears, and you've conquered human nature.

**- Charles Dickens**



# புதியதோர் உலகம் செய்வோம்

புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்
சொன்னவன் பாரதிதாசன் - அவர்
சொல்லினை மறந்ததால் வந்ததே நாசம்

எங்களின் மணித்திரு நாடு
இலங்கை என்றிடும் புகழ்மிகு நாடு
எத்தனை வளங்கள் இருந்தும்
ஒற்றுமை இழந்து நாம் சிந்தினோம் ரத்தம்

வெள்ளத்தின் மத்தியிலும் வேகுகிறது - எம்மனம்
இதனையணைக்க யார் வருவார்
எத்தனை உறவுகள் எத்தனை பந்தங்கள்
அத்தனையும் இழந்தோம்.

ஒற்றுமை என்ற பேச்சுக்கே இடமில்லை
எல்லாம் வேற்றுமைதான்
கடைசியில் ஒழிந்தது நம் உறவல்லவா
ஏன் இந்தப்போர்? ஏன் இந்தப் போர்?

சாதி வேறுபாட்டை சாக்கடையில் தள்ளி
எல்லா உயிரும் ஓருயிர் என எண்ணி
ஒற்றுமையை உலகிற்கு நன்றே உணர்த்தி
புதியதோர் உலகம் செய்வோம்.

சூத்திரம் எல்லாம் சாத்திரமாகட்டும்
அன்பு எனும் வெள்ளம் பரவட்டும்
பாசம் எனும் பனி பொழியட்டும்
போர் என்ற நாமம் ஒழியட்டும்.

புதியதோரார் உலகம் செய்வோம்
புதிய புதிய கவி வடிவங்களில்
பதிய வைக்கும் நினைவுகளோடு
புதியதோர் உலகம் செய்வோம்.

**அ.அறிலைஸ்ரீவன்சன்**
(2009) கலைப்பிரிவு.

இந்த மாசக் கடசியில் வருமாப்பா' கண்ணனின் சிணுங்கல் கண்ணுச்சாமி யின் மனதைக் குடைந்து கொண்டிருந்தது. கொழுந்துகளோடு கொழுந்தாகப் பறிக் கப்பட்ட அவனது வாழ்க்கை தன் மகனுக் காக ஊசலாடிக் கொண்டிருந்தது. தாயில்லாத தன் மகனை வளர்க்க அவன் படாத பாடு படவேண்டியிருந்தது. "தோட்டம்" என்றால் அப்படித்தான்.

'அப்பா எனக்குச் சைக்கிள் ஒன்று வேணும், ஏமாத்தாமல் வாங்கித் தாப்பா' காசநோய்ப்பிடியிலிருந்து முற்றாக மீளாத கண்ணுச்சாமிக்கு தன் மகன் கனவைக் கலைக்க முடியவில்லை. பாவம், அவன் என்ன செய்வான் பக்கத்துத் துரையின்ர மகனைப் போல தானும் சைக்கிள்ல தோட்டப் பள்ளிக்கு போக வேணுமாம் அந்தப் பிஞ்சின் அவாவைத் தடுக்கவா முடியும்.

"ஆரோ பெரியசனம், எங்கட கூலியை கூட்டப் போகினமாம். கூட்டினா சொவந்தான்"

குஞ்சம்மாக் கிழவி குறுகுறுத்தாள்.

"எலெட்சனுக்கு அப்படித்தான். நீ பேசாம தொழிலக் கவனி குஞ்சம்மா" கண்ணுசாமி அலுத்துக் கொண்டான். கொழுந்துகள் பறிக்கப்பட்டதும் துரை மாரின் மேற்பார்வையுடன் கொண்டு செல்லப்பட்டன.

வேலை முடிந்தவுடன் துரைய ரிடம் அன்றைய வீட்டுச்செலவுக்கு கடன் பெற்றுக் கொண்டு கண்ணுசாமி புறப்படத்தயா ரானான்.

"பொண்டாட்டியோட பிரசவத் துக்கு வாங்கினதோட சேத்திடுறன்" துரை கணகணத்தார். அவரிடம் விடை பெற்றுக் கொண்ட கண்ணுசாமி வீட்டில் அன்று மகன் சோர்வாக காணப்பட்டதை அவதா னித்தான். இரவெல்லாம் ஒரே ஜ்ரம் தன் மகனை தேற்றி படுக்கவைத் திருந்தான் "சைக்கிள் வேணும் சைக்கிள்" தூக்கத் திலும் கண்ணனின் இவ்வார்த்தைகள் கண்ணுசாமியின் கண்களை பிசுபிசுக்க வைத்தன. எப்படியும் தன் மகனுக்கு சைக்கிள் வாங்கிக் கொடுத்திட வேணும் என்று அவன் உள்மனம் சபதமிட்டது. சில நாட்களாகின.

'தோட்டத் தொழிலாளர்களே! உங் களுக்கோர் நற்செய்தி! உங்களுக்காக எமது கட்சியினர் ஆட்சிக்கு வந்ததை அடுத்து உங்களுக்கு மூவாயிரம் சம்பள உயர்வு தொடர்ந்து எங்களை ஆதரியுங்கள். "இப்படி எத்தின வாகனம் வந்தது. என்னத்தை தந்தவ" தருமலிங்கம் கண்ணுச்சாமியிடம் செப்பினார்.

ஆனால் அது உண்மைதான் என் பதை சிலநாட்களில் கண்ணுசாமி அறிந்த போது பெரு வியப்புற்றான். 'எப்படியும் இந்தக் காசுல என்ர மோனுக்கு சைக்கிள் வாங்க வேணும். சம்பளம் வழங்கப்பட, வரிசையில் கண்ணுசாமியும் நின்றிருந்தான். தன் மகனுக்கு ஏற்கனவே சொன்ன தப் போல ரவுண் கடையிலை புதுச் சைக் கிள் வாங்கிக் கொண்டுதான் வீட்டுக்கு போறது என்றது அவன் மனம்.

சம்பளத்தைப் பத்திரப்படுத்தி ரவுணுக்கு போனான். பெரிய கடை ஒன்றில் சைக்கிள்களுக்காய் நுழைந்தான். கடைக்குள் கடைக்காரருடன் துரை யின்ர மகன் சின்னத்துரை சீட்டு ஆடிக் கொண்டிருந்ததைக் கண்டவுடன் அவன் மனம் சிறிதாக சலனப்பட்டுக் கொண்டபோதும் அதைப் பற்றிக் கவலை அடையவில்லை.

"ஏன் கண்ணுச்சாமி வந்தனீங்க" சின்னத்துரை அலசினார். "சைக்கிளுக்கு" மொட்டையாக முடித்துக் கொண்டான். அவன் சைக்கிள்களை கேட்டு அலசிய போது, பெரியதுரை அப்பக்க மாக வந்ததைக் காணத் தவறவில்லை.

துரை தன்ர மகனைத் தேடி வந்திருந்தார் போலும். மகனைக் கண்டு ஏதோ வினவியபோது கண்ணுச்சாமி அங்கு நின்றதைப் பார்த்து வியப்புற்றார். 'என்ன கண்ணுச்சாமி இந்தப் பக்கம்? பெரிய துரை வினவினார். "மகனுக்கு சைக்கிள் வா... " சொல்லி முடிப்பதற்குள் ஏற்கனவே கறுத்திருந்த துரையின் முகம் மனதை வெளிப்படுத்தியது "எப்ப என்ர கடன் விசயம்" கண்ணுச்சாமி திகைத்து நின்றான். "அப்பாவுக்கு ஆயிரக்கணக்கில குடுக்கக் கிடக்கு, அப்ப இவருக்கென்ன சைக்கிள்"

சிறுமைப்படாமலிருக்க தன் கையிலிருந்த பணத்தை அப்படியே சின்னத்துரையின் கையில் கொடுத்து விட்டு அவ்விடம் விட்டகன்றான் கண்ணுச்சாமி. அவன் மனம் அதிர்ச்சியைத் தாங்க மறுத்தது. தற்கொலை செய்யக் கூட நினைத்தான்.

முடியாது. முடியவே முடியாது. ஏனெனில் மகன் வாசலில் அவனுக்காகக் காத்திருப்பான் ஆவலுடன்.

**வி. திவாகரன்**
10A

*இம்மாணவன் 2009 தமிழ்த்தினப் போட்டிகளின்போது நடைபெற்ற சிறுகதைப் போட்டியில் மாகாணமட்டத்தில் முதலிடம் பெற்றுத் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்.*

ஒரு சராசரி மனிதன் தனது சக்தியிலும் திறமையிலும் வெறும் 25% மட்டுமே தனது வேலைக்குச் செலவழிக்கிறான். தங்களது திறமையில் 50%க்கு மேல் செலவழிப்பவர்களை இந்த உலகமே பாராட்டுகிறது. 100% திறமையையும் அர்ப்பணிப்பவர்களை இவ்வுலகம் தலைவணங்கிப் போற்றுகிறது.

**- ஆன்ட்ரு கார்னெஜி**

# க.பொ.த உயர்தர மாணவர்களும் வாழ்க்கைத் தகைமை விருத்திச் செயற்றிட்டங்களும்

திருமதி நிஷா தனஞ்சயன்

### அறிமுகம்

இலங்கையின் கல்வி வரலாற்றினைப் பொறுத்தவரையில் காலத்திற்கு காலம் அரசியல் மாற்றங்கள் நிகழும் போதெல்லாம் கல்வியில் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்படல் மரபாகும். இலங்கைப் பாடசாலைகளில் நிலவும் கலைத் திட்ட நடைமுறைகள் தொடர்பான பல்வேறு விமர்சனங்கள் காரணமாக 1998இல் புதிய கல்விச் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது. மாணவர்களின் ஆற்றல்கள், திறன்களை வெளிக் கொண்டு வருவதன் ஊடாக சமூகப் பொருத்தப்பாடான ஆளுமைமிக்க மாணவர் சமூகத்தை உருவாக்க வேண்டும் எனும் நோக்கில் பல்வேறு சீர்திருத்தங்கள் ஆரம்பப்பிரிவு தொடக்கம் உயர்நிலை வரை முன்மொழியப்பட்டன. ஆங்கிலக் கல்வியை வலுவூட்டல், வழிகாட்டலும் ஆலோசனையும், க.பொ.த உயர்தர மாணவருக்கான செயற்றிட்டங்கள் என்பன குறிப்பிடத்தக்க அம்சங்கள் ஆகும்.

க.பொ.த உயர்தர மாணவரின் செயற்றிறனை ஊக்குவித்து பூரண மான நாட்டின் தொழில் தேவைக்கான கேள்வியைப் பூர்த்தி செய்யக்கூடிய செயற்றிறன் மிக்க மாணவனை உருவாக்க வேண்டும் எனும் நோக்கில் செயல் மூலம் கற்றலை ஏற்படுத்தக் கூடிய வாழ்க்கைத் தகைமை செயற்றிட்டங்கள் க.பொ.த உயர்தர மாணவரின் கலைத்திட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டது.

குறித்த இலக்கை / பெறுபேற்றினை அடைவதற்காக ஒரு செயலைத் தெரிவு செய்து திட்டமிட்டு, குறித்த காலப்பகுதியுடன் நடைமுறைப்படுத்தி அதன் மூலம் தமது கற்றலையும் தகைமைகளையும் விருத்தி செய்யும் செயன்முறை "செயற்றிட்டம்" ஆகும். இதனடிப்படையில் மாணவரது விருப்பப்படி தெரிவு செய்த தலைப்பினை அடிப்படையாகக் கொண்டு மாணவரால் மேற்கொள்ளப்படும் ஓர் ஆய்வுச் செயன்முறையே இது எனலாம். இச் செயற்பாட்டின் மூலம் மாணவனது இயலுமைகளை வெளிக்கொணர்வதன் ஊடாக மாணவன் தன்னைப் பற்றிய சுய விளக்கத்தையும் ஊக்கலையும் பெற்று வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை ஏற்று அவற்றினை எதிர்கொள்ளப் பழகுகின்றான்.

பாடசாலைகளில் க.பொ.த உயர் தர மாணவருக்கான செயற்றிட்டம் எளிமையான முறையில் நடைமுறைப்படுத்துவதற்காகப் பிரதானமாக நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

ஆய்வு வகை

ஆக்க வகை

பிரச்சினையைத் தீர்க்கும் வகை.

பொருளாதார ரீதியில் பயனுறுதியுடைய வகைச் செயற்றிட்டங்கள்.

## ஆய்வு வகைச் செயற்றிட்டம்

இங்கு மாணவர்கள் அன்றாடம் பார்த்தும், கேட்டும் அனுபவித்தும் உள்ள பிரச்சினை உண்மையில் அதன் தோற்றம் என்ன? இதற்கான மூலங்கள் எவை? இப்பிரச்சினைக்கான காரணங்கள் எவை? என்பனவற்றினை அறிவதன் ஊடாக யதார்த்த நிலைமைகளை மாணவன் ஒருவன் ஆராய முற்படலாம். இதன் ஊடாகப் பொருத்தமான ஒரு தலைப்பினை மாணவன் தெரிவு செய்து தரவு களைச் சேகரித்து அதனை ஒழுங்குபடுத்திப் பகுப்பாய்வு செய்யலாம். இது மாணவரிடையே ஓர் ஆய்வுக் கலாசாரத்தை உருவாக்க உதவும். இதன் ஊடாகப் பல்வேறு காரண – காரியத் தொடர்புகளை இனங்காணவும் புதிய செயற்பாடு களைத் திட்டமிடவும் உதவும். இங்கு மாணவன் தான் வாழும் களநிலை தொடர்பான யதார்த்தத்தினைப் புரிந்து கொண்டு பல்வேறு திறன்களை விருத்தி செய்ய வழியேற்படும்.

## ஆக்க வகைச் செயற்றிட்டம்

இதில் மாணவ மாணவியரின் புத்தாக்கமாகவோ/ புதிய கண்டுபிடிப்பாகவோ/ உபகரண மாதிரியுருக்களாகவோ, கட்புல செவிப்புல சாதனங்களாகவோ இருக்கலாம். எதுவாயினும் மாணவன் இதுவரையில் தான் கற்றறிந்த அறிவின் பிரயோகத்தின் வெளிப்பாடாக இது அமையும். உண்மையில் இவ்வாறான ஆக்கங்கள் புதிய கண்டுபிடிப்புக்கு வழிவகுக்கும். அப்போது தான் எமது சமூகம் ஆரோக்கியமான அபிவிருத்தியை நோக்கிச் செல்ல முடியும்.

## பிரச்சினையைத் தீர்க்கும் வகைச் செயற்றிட்டம்

இங்கு பிரச்சினைகளை இனங் கண்டு அதற்கு விளக்கமளிப்பது முக்கிய விடயம். அந்த வகையில் பிரச்சினைகளை இனங்கண்டு அதனடிப்படையில் கருதுகோள்களை முன்வைத்து அதனடிப் படையில் செயற்பாடுகளைத் திட்டமிடல், பின்னர் இச் செயற்பாடுகளை ஒழுங்கான படிமுறையில் மேற் கொண்டு தீர்வுகளை மேற்கொள்ள / முன்மொழிய இவ்வகை ஆய்வுகள் உதவுகின்றன. இவ்வகைச் செயற்றிட்டங்கள் வாழ்க்கையில், எதிர்காலத்தில் ஏற்படும் சவால்களை, முரண்பாடுகளை வெற்றிகொள்ள உதவும்.

## பொருளாதார ரீதியான செயற்றிட்டங்கள்

இங்கு மாணவர்கள் தமது இயலுமைக்குட்பட்ட வளங்களைப் பொருத்தமான முறையிற் பயன்படுத்தி பயனுறுதி மிக்க முடிவுப்பொருளை ஆக்கும் வகையில் காணப்படுகின்றது. இதன் மூலம் மாணவர்கள் எதிர்காலத்தில் வேலையுலகின்பால் திசை கோட்படுத்தப்படவும், சுற்றாடல் வளங்களை இனம்கண்டு அபிவிருத்திச் செயன்முறையில் ஈடுபடவும் வழியேற்படு கின்றது.

க.பொ.த உயர்தர மாணவர்கள் இவ்வாறான செயற்றிட்டங்களை பாடசாலை மட்டத்தில் தனியாள் ஆய்வாக மேற்கொள்ளவேண்டும். அத்துடன் குழுச் செயற்றிட்டமானது 10க்கு உட்பட்ட மாணவர்களைக் கொண்டு மேற்கொள்ளப்படும். இரண்டிலும் செயற்றிட்ட அறிக்கை முக்கிய மானது.

இது நடைமுறைப்படுத்தப்பட்டு உண்மையில் கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்தினை நிறைவு செய்தும் இது ஒரு வெற்றியளிக்கப்படாத செயற்றிட்டமாகவே உள்ளது. இதற்கான காரணங்கள் எவை? இச் செயற்றிட்டத்தின் வெற்றிகள் என்ன? இன்னும் வலுவூட்டவேண்டிய அம்சங்கள் எவை? இதை எவ்வாறு பயனுறுதி மிக்க வகையில் பாடசாலையில் செயற்படுத்தலாம் என்பதைப் பற்றிய ஆய்வுகளை கொள்கை வகுப்பாளர்களோ, கல்வியியலாளர்களோ மேற்கொள்ளாமை வருத்தத்திற்குரியதே. அத்துடன் பெரும்பாலான மாணவர்கள், ஆசிரியர்கள் இது தொடர்பான பூரண ஆர்வமோ/ அக்கறையோ கொண்டவர்களாகத் தெரியவில்லை.

உண்மையில் எந்த ஒரு புதிய சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் அது தொடர்பான பூரண விளக்கம் பெற்ற ஆசிரியர்கள் இருந்தாலே அது பூரண வெற்றியளிக்கும். யாழ். மாவட்டத்து ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் ஒரு சில ஆசிரியர்கள் மட்டும் இப்பயிற்சியை ஒரு சில நாட்கள் பெற்றுள்ளனர். எனவே பெரும்பாலானோர் இது தொடர்பான அறிவு அற்றவர்களாகவே உள்ளனர். இது தொடர்பான புள்ளிகள் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டியிருப்பதால் மாணவர்கள் கடன் வழிக்கு இதன் அறிக்கையினை மட்டும் எழுதிச் சமர்ப்பிப்பவர்களாக உள்ளமை உண்மையான நோக்கத்தில் இருந்து விலகி பழைய எழுத்துப் பரீட்சையினை மட்டுமே நோக்காகக் கொண்ட கலைத்திட்டத்திற்கே வழிவகுக்கின்றது. அதாவது இம் மாற்றங்கள் தனியே எழுத்துருவில் உயர்ந்த நோக்கங்களைக் கொண்டிருக்கின்றனவே ஒழிய நடைமுறையில் இதன் நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை விமர்சனத்திற்கு உரியதே.

எனவே உயர்வான குறிக்கோள்களை உடைய இச் செயற்திட்டத்தை வினைத்திறன்மிக்க வகையில் மாற்றியமைக்க இது தொடர்பான எந்தவிதமான ஆய்வுகளோ முன்னேற்ற அறிக்கை தொடர்பான மீளாய்வுகளோ நடைபெறாமை வருத்தத்திற்குரியதே. எனவே தனியார் குழுச் செயற்றிட்டங்களுக்கு பெறுமானங்களை வழங்கி அதற்குரிய பரீட்சை நோக்கிய சரியான கணிப்பை வழங்குவதன் ஊடாக மட்டுமே மாணவர்களிடம் இது தொடர்பான ஊக்கலை மேம்படுத்தலாம். இத்தகைய செயற்பாடுகளை பயனுறுதி மிக்கதாக மாற்ற கல்விப்புலம் சார்பானவர்கள் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டியது கட்டாயமாகும்.

Always forgive your enemies - nothing annoys them so much.

**- Oscar Wilde**



# Newspaper A Great source of information

Among the sources of informa tion such as Television, radio, internet, encyclopaedia, computer, newspapers and magazine hold a prominent place due to its charac teristic. The contents of a news paper are editorial, headlines, stories, cartoons, cinema. sport news, foreign news, education and so on Almost all the components deserve their importance.

In the earliest days newspapers were newssheets recording important events and was hung in prominent places in Rome. There after many countries started publishing news papers with the intention of spreading literacy among public. Sunday observer, The Sunday times, Thinamina, Veerakesari and Sunday leader are some of the prominent newspapers published in Sri Lanka.

The growing demand for news paper owing to the spread of literacy and the introduction of steam driven presses caused the daily circulation of newspapers to rise.

A newspaper differs from other forms of publications by its closeness, attractive. headlines and reporting of a variety of up to date subject and events for the readers preference. For instance some people like hard news" such as wars, murders accidents and others like soft news" such as leisure and entertainment.

If we analyse, why people choose newspaper as a source of information, it is apparent that a newspaper is handy, it can be read at a breakfast table, in bed or while travelling in a vehicle. As a result, it is very popular among people and it will continue to exist despite the challenges created by electronic media. we can read a newspaper at leisure but the electronic media cant wait for our leisure.

It is news paper that helps us to variety what we listened to or heard on electronic media. And in the case of newspaper, the reader enjoys greater freedom; we can select what we want.

Because of the above charac teristic, newspaper still remains a great source of information and no wonder it will last long.



**Miss. Ajiththa yoganathan**
Grade – 11[c]

# A JOB I LIKE MOST

The saying "Service of mankind is service to god, expresses the value of rendering service to human. There are a number of jobs such as doctor, engineer, teaching, nursing and so on. Among them I like the most humanitarian job nursing. In medical field, nursing is considered the most sacred service to the patients in need.

Nursing at first was introduced by Florence nightingale – a girl from a wealthy background. when she was a small girl she was moved over the pathetic state of wounded soldiers, who were suffering so much without proper medicinal care. So she collected a number of guides and worked together to relieve the pain of the soldiers. After her service the hospitals became clean and the nurses became more kind and gentle. So that they were able to get more men cared from their wounds.

During the night time she went round the wards to see the soldiers carrying a lamp in her hand. The patients loved her much and kissed her shadow after her, a And they called her "Lady with the lamp".

Serving the patients suffering from various illnesses is actually a great service, So I like this job than the others, Gentleness, patience, tolerance, showing affection, showing kindness and truthfulness are the qualities required for nursing.

By showing real affection and care, we can cure even serious illnesses. Dedication, committment and self – less service are important for this job.

So I finally say, those who serve truly to mankind; especially those who treats the suffering patients will be blessed by god.

**Mas. Vimalambihaipahan Thivaharan**
Grade – $10^A$

Believe nothing, no matter where you read it, or who said it, no matter if I have said it, unless it agrees with your own reason and your own common sense.

**- Buddha**



# Child protection

"Children are the future builders" This is a saying which expresses the importance of children in the world. Childhood is actually a gift of god, when it is properly lived. Those who are below 18 years are considered as children. These children have special rights to live and to lead a healthy any comfortable life in this world, The fundamental rights of a child include, the right to get food, shelter and cloth, the right to get love and affection from parents, the right to enjoy freedom and the right to get basic education.

Since children are the future moulders, they should be educated and also allowed to speak freely. when the above rights of children are properly given, they will grow good citizens. But nowadays children are happened to face struggles and hardships in their life.

These hardships are due to several reasons such as parental death, committment at home, poverty, ignorance and warfare. These problems bring children to street and there after they are subjected to child abuse. To earn something for bread they do some odd jobs and join the gangs and commit some crimes such as theft and fraudu lence. When they undergo abusing they will be physically and mentally hurt. This leads to child rivalry and they become criminals at their young age.

So it is the responsibility of everyone to abolish child abuse and provide fhe children with proper care, Street children should be protected in orphanage. And they should be given love and affection. such care and affection of elders will definitely lead them to a disciplined life. Then they will be moulded as good citizen and they can possibly take part in the development of the nation.

**Miss. Nerththika Karunanithy**
Grade –11^A^

This is the moment when we must build on the wealth that open markets have created, and share its benefits more equitably. Trade has been a cornerstone of our growth and global development. But we will not be able to sustain this growth if it favors the few, and not the many.

**- Barack Obama**

# Mother Teresa

Mother Teresa was interna tionally respected. for her work to relieve the sufferings of the poor, the sick and dying. she began her work of helping the desperately poor of India by bringing dying persons from the street into a home where they could die in peace and dignity. She also established an orphanage. Through her untiring efforts she succeeded in forming a congregation. of sisters whose work has now spread to five continents.

Mother Teresa was born in Skopje, Albania on August 21, 1910 and was named Agnes gonxha Bejaxhini. She left her home at the age of 18 to join the Institute of the Blessed virgin mary in Dublin. She entered the order of the sisters of our lady of Loreto when she was 18 years old. She was sent to Calcutta by sisters of Loreto and she became a geography teacher in the order's school in Calcutta. While traveling on a train on September 10, 1946, she heard the cries of some sick and helpless people which inspired her to help the poor This experience she described as a call within a call to help the desperately poor of India.

In early 1948, she became an Indian citizen, she asked permission to leave her convent and sister Agnes became Teresa She moved into the city's slums and started nursing to help the hundreds of destitutes in Calcutta. She donned a blue-trimmed white saree which became the uniform of her missionaries of charity formally founded on October 07,1950.

**Mas. Anandarajah Jeyapragash**
Grade –13 (Arts)

And oftentimes, to win us to our harm,
The instruments of darkness tell us truths,
Win us with honest trifles, to betray's
In deepest consequence.

- **William Shakespeare,** *"Macbeth", Act 1 scene 3*

# NATURE OF SOUND

Sound may be defined psycholo gically or physically. In the First aspect it is said to be the sensation produced when the proper disturbance comes to the ear. From the second viewpoint sound is the stimulus capable of producing the sensation of sound. whether an observer is necessary of sound to exist depends entirely upon which of sound to exist. Of the two definitions used for our purposes, we shall use the second, or physical definition.

As an aid in visualizing the production of sound. suppose that a small rubber balloon is partly inflated and attached to a bicycle pump. If the piston is pushed downward quickly, the balloon expands and the layer of air next to it is compressed. This layer of air will. in turn, compress the layer beyond it, and so on The compression that was started by the expansion of the ballon will thus travel away from the source in the surrounding medium. If the piston is drawn upward, the balloon contracts and the adjacent layer of air is rarefied. As in the case of the compression, the rarefaction travels out from the source. If the piston is moved up and down at regular intervals, a succession of disturbances travelling out from a source constitutes a wave motion. The compression and the following rarefaction make up a compressional wave.

If the up–and-down motion of the piston is made rapid enough, an observer in the neighbour hood will be able to hear a sound as the disturbance reaches his ear. These compressional waves are able to cause the sensation of hearing and are referred to as sound waves.

**Mas. Karunasegaram Vishnu**
Grade –13 BIO

If the human race wishes to have a prolonged and indefinite period of material prosperity, they have only got to behave in a peaceful and helpful way toward one another.
**- Winston Churchill**



# TRUE FRIENDS

A number of proverbs express the nature and vitality of friendship. There are so many questions arise in our mind when we tend to choose a friend They are "who is a true friend?" and "how can we get true friend?" If we find the answers for the above questions, we'll be successful in this relationship. "A friend in need is a friend indeed" This proverb states that a true friend will be helpful in our needs and hardships. All the others are just superstitious bonds.

Then we should question us, that whether we are suitable to have a good friend. A great man said that If you want a true friend, be a true friend. From this saying we can realize that we also should possess some great qualities to make friend. The qualities such as patience, give and take manner, truthfulness, sharing, helpfulness, honesty and loyalty are the qualities which make us worthy for friendship. Further, the qualities such as jealousy, anger, selfishness hatred and flattery may break up the friendship.

Many poets have imprinted the value of friendship in their pieces of writings. In one such poem named "Friendship" written by Emma Guest, the poet compares friendship to the beautiful flower rose. Further he compares a friend to an owl which is wise and beautiful. The true spirit of friendship never dies and never be decayed.

we need not have only human beings as friends. The domestic animals we rear at our home also can play the role of good friend. Dogs, cats, cows, parrots, mynahs and even rats can be good friends There are so many histories in which these animals saved man from dangers. In foreign countries, dogs play the role of good friends of kids,They not only entertain the kids but also they look after them when parents go out.

Therefore, friendship is a deep and true bond between and among the individuals irrespective of wealth and status, A true friendship is a wonderful gift of god and which should never be withered. Truthfulness and helpfulness are the basic qualities which give fragrance to friendship.

**Miss. S. Vinusiya**
Grade –11[B]

We have all a better guide in ourselves, if we would attend to it, than any other person can be.

- Jane Austen, *Mansfield Park*



# A story I read and enjoyed

Charles Dickens was a born playwright, who has written a number of novels on children In his novels he related the poverty of the times through the lives of these children. Oliver Twist, David Copperfield and Great Expectations are some of the welknown novels written by him. These stories have been translated into many languages.

One of his famous novels is "Oliver Twist" The main character of this story is poor Oliver, who was born in a workhouse and he lost his mother at his birth. Due to the cruel fate the secret of his birth is hidden and not known. He was brought up in an orphanage and was sent to a workhouse when he was nine. In that work house he was not paid for the work and he was not given enough food for his age Because of this he was so thin and weak. He was forced to do hard labour by the master of that poorhouse.

One day he was unfortunate to be selected in the lots system and was forced by his companions to ask for more food. The man in charge of the food got agitated by his request and hit Oliver with the spoon on his head. There after the poor child was sent to the dark room there he was left starved without food as punishment. A board notifying that he'll be sold for little amount, was hung.

Then an undertaker took control over Oliver and in his coffin shop he suffered a lot due to the cruel wife and the servant. There he was given the bad food that even a dog hesitates to eat. In due course, he escaped from there and unfortunately trapped again by a gang of thieves. Later during one of his robbery he was shot wounded and then recovered.

After a long period of suffering he joined a wealthy. family and fortunately found his parents and then continued living happily.

This story and his other stories make the people aware of the social evils of the day. In this story he tells of the injustice and cruelty suffered by poor people, how orphan children were brought up in the evil conditions of the poor houses, where they were starved and neglected. In those days innocent children were taught by evil men to steal for a living. At last his tragic upbringing comes to the end and finally he found security and happiness. Dickens's stories are social documents of injustice of that time.

**Mas. Sivaji Aramuthan**
Grade – 9A

# Family bonds

In making this world a better. place, family bonds play eminent role. The term bond stands for the deep attachment, between, and among the people. arise out of living together in unity. These deep bonds are the pillars of strength of the world. They keep the world spin. They seem to be the anchor of the world.

For the betterment of the world the bonds or ties should be tightened and strengthened. These bonds influence the relation ships from the family.

The affectionate relationship between family members; father and mother, mother and children; father and children; and among the children; bring happiness good fortune and success to the family. Subsequently, the family bond paves way to the deep attachment in a society. when the members of a society live together irrespective of wealth, in harmony with love, and affection caring and sharing, there will be an amiable sifting in that society. In times of difficulties these bonds serve as an anchor.

These bonds or relationships depend on the responsibilities. Each and every one of us has certain responsibilities in the family as well as. in the society, we live in. The word "responsibility means a duty to deal with some thing or taking care of some one. when we fulfill our responsibilities and duties in the family and in the society with a dedicated mind, the bonds or ties will be strengthened. and the strong bond will make that world a better place.

Companion ships and friend ship are the bonds which exact influence in the goodness of the society. A friend ship is a bond between two living beings irrespective of age status cast, creed and gender. A child a teenager, a young man or even an old man can find a friend awarding to his feelings and wishes. fhe sense of understanding between true friends will help to heal the pains and aches in times. There is a saying "a friend in need is a friend in deed" that means a true friend should willingly give hand in hard ships and difficulties. when friends are trustworthy and loyal to each other then that friendship will definitely; uplift the lives to them and will add colour to their lives.

When we consider a companion, who is person or even an animal, keeps company, comforts and cares for us This companion ship relieves our pains and makes the lives better.

If we take a true husband and wife, they will lead a contented life with full of love, affection and mutual understanding. when the love between them seems uncondi tional there will be no quarrels

in their life and such a life leads to a peace ful society and results in world with full of fondness and harmony. Truth fullness, sincerity dependability and the sense of understanding are the four pillars which erect and shoulder a healthy relation ship in the family and in the society.

There fore strengthening of relation ship and avoiding the spirits will definitely bring a better society, Now a days in the modern society money pays important role, As a result of this, people lead a competitive life in which they hardly have time to stand and to think of others. Thus, bonds or ties have become frail. Attending the occasions in other families, sharing the goods and bads and giving and taking are some ways to keep the bonds strong. when we learn to care for the family, we learn to care for our society and to care for our country Then the world will become a better place to live and enjoy.

**Miss. Luxi Pavalarajah**
Grade –12

# A Great personality sir Arthur C. Clarke

Arthur C. Clarke was born at Mine head in Somerset in England. Young Arthur became inretested in science at an early age. At the age of 13 he built his own telescope! He loved to read science fiction stories and articles about space and began writing them himself while he was still at school.

Arthur is a world famous British writer and famous for his science-fiction, stories and predictions about the future. He has written over 30 novels, dozens of short stories and many other books and articles mostly on scientific subjects.

He published the idea of communications satellite in 1945. Today these satellites carry TV broadcasts and telephone calls around the world.


He also wrote the script for a famous science – fiction film 2001. A space odyssey, which he later turned into a best selling book.

He moved to Ceylon in 1956 when Sri Lanka used to be called as Ceylon.

In honour of his achievements he was made a 'knight' by the Queen of England in 2000. Knights are called sir instead of Master. So we now know him as Sir Arthur C. Clarke.

**Miss. Thulasi Sivanathan**
Grade –11A

# Facila Recognition Systems and how the systems work



The Vision 3D + 2D ICAO camera is used to perform enrollment, verification and identification of 3D and 2D face images.

### 3D Facial Recognition

A newly-emerging trend in facial recognition software uses a 3D model, which claims to provide more accuracy. Capturing a real-time 3D image of a person's facial surface, 3D facial recognition uses distinctive features of the face — where rigid tissue and bone is most apparent, such as the curves of the eye socket, nose and chin — to identify the subject. These areas are all unique and don't change over time.

Using depth and an axis of measurement that is not affected by lighting, 3D facial recognition can even be used in darkness and has the ability to recognize a subject at different view angles with the potential to recognize up to 90 degrees (a face in profile).

Using the 3D software, the system goes through a series of steps to verify the identity of an individual.

### Detection

Acquiring an image can be accomplished by digitally scanning an existing photograph (2D) or by using a video image to acquire a live picture of a subject (3D).

### Alignment


Once it detects a face, the system determines the head's position, size and pose. As stated earlier, the subject has the potential to be recognized up to 90 degrees, while with 2D, the head must be turned at least 35 degrees toward the camera.

### Measurement

The system then measures the curves of the face on a sub-millimeter (or microwave) scale and creates a template.

## Representation

The system translates the template into a unique code. This coding gives each template a set of numbers to represent the features on a subject's face.




## Matching

If the image is 3D and the database contains 3D images, then matching will take place without any changes being made to the image. However, there is a challenge currently facing databases that are still in 2D images. 3D provides a live, moving variable subject being compared to a flat, stable image. New technology is addressing this challenge. When a 3D image is taken, different points (usually three) are identified. For example, the outside of the eye, the inside of the eye and the tip of the nose will be pulled out and measured. Once those measurements are in place, an **algorithm** (a step-by-step procedure) will be applied to the image to convert it to a 2D image. After conversion, the software will then compare the image with the 2D images in the database to find a potential match.

## Verification or Identification

In verification, an image is matched to only one image in the database (1:1). For example, an image taken of a subject may be matched to an image in the Department of Motor Vehicles database to verify the subject is who he says he is. If identification is the goal, then the image is compared to all images in the database resulting in a score for each potential match (1:N). In this instance, you may take an image and compare it to a database of mug shots to identify who the subject is.

**- Santhanakumarasarma Sakthybaalan**

*A/L Science (2011)*

# அதிபர் அறிக்கை

ஸ்கந்தவரோதயக்கல்லூரி வளாகத்தில் வீற்றிருக்கும் ஸ்கந்தப்பெருமானை இதயத்தில் இருத்தி ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் தந்தருளும் அன்னை சரஸ்வதியைப் பணிந்து வணங்குகின்றேன். ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் வருடாந்த நிறுவுநர் நினைவு விழாவையும், பரிசளிப்பு விழாவையும் சிறப்பிப்பதற்கு பிரதம விருந்தினராக வருகை தந்துள்ள வைத்திய கலாநிதி W.E. வோஷிங்ரன் திசேரா அவர்களே, அவரது பாரியார் திருமதி. ஷிரோமி அத்தநாயக்கா திசேரா அவர்களே, இன்றைய விழாவில் நிறுவுநர் நினைவுப் பேருரையை ஆற்ற வந்திருக்கும் சிறப்பு விருந்தினர் திரு.கி.பாலசுப்பிரமணியம் அவர்களே, வாழ்த்துரை வழங்க வந்திருக்கும் உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.செ.குபேரநாதன் அவர்களே, எமது கல்லூரி ஸ்தாபகர் குடும்ப உறுப்பினர் திருமதி. சரஸ்வதி தர்மலிங்கம் அவர்களே, கல்வி சார் பெரியோர்களே, எமது மண்ணின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணை செய்யும் அயற் பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, பெற்றோரே, பழைய மாணவர்களே, நலன்விரும்பிகளே, என் இனிய மாணவச் செல்வங்களே, உங்கள் அனைவருக்கும் என் இதயம் நிறைந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வரலாற்றுப் பெருமை மிக்க ஸ்கந்தா அன்னை 1894 இல் ஸ்தாபிக்கப்பட்டு இன்று 116 ஆவது ஆண்டிற் காலடி எடுத்து வைத்துள்ளாள். பெருமை மிக்க இக் கல்லூரியின் வருடாந்த அதிபர் அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பேருவகை அடைகின்றேன். இக்கல்லூரியில் நீண்ட காலம் ஆசிரியராக, பகுதித்தலைவராக, உப அதிபராக விளங்கிய யான் இக்கல்லூரியின் வாழ்வில் பங்குகொள்ளும் வாய்ப்புப் பெற்றேன்.

இன்று இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக வருகை தந்துள்ள எங்கள் கல்லூரி அன்னையின் மைந்தன் வைத்திய கலாநிதி W.E. வோஷிங்ரன் திசேரா அவர்களை உங்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். 1947 ஆம் ஆண்டு சிலாபத்தில் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை சிலாபத்திலுள்ள R.T.M.S பாடசாலையிற் பயின்றார். பின் சிலாபம் சென் மேரிஸ் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைப் பெற்றார். 1966 ஆம் ஆண்டு ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் உயர்தர வகுப்பில் இணைந்து சிறந்த மாணவனாக விளங்கினார்.

1969ஆம் ஆண்டு மருத்துவ பீடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட சிறந்த மாணவர்களில் ஒருவராகக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தார். கொழும்பு மருத்துவக் கல்லூரியில் 1969 முதல் 1974 வரை கற்ற இவர் சிறந்த மருத்துவராக வெளியேறிப் பல்வேறு இடங்களிலும் சிறந்த வைத்தியப்பணி ஆற்றி வருகின்றார். மருத்துவத்துறையில் பட்டப்பின் படிப்பைத் தொடர்ந்து, தான் பிறந்து வளர்ந்த சிலாபத்தில் பொது மக்களுக்குச் சேவையாற்றும் வகையில் சென். மேரிஸ் நேர்சிங் ஹோம் என்ற பெயரில் தனியார் வைத்திய சாலையை உருவாக்கி மிகவும் பிரபலம் பெற்று விளங்குகின்றார். ஸ்கந்தா அன்னையின் மீது மிகுந்த பற்றுக்கொண்ட இவர் கொழும்பிலுள்ள பழைய மாணவர் சங்க

நிகழ்ச்சிகளில் கலந்து தன் கல்லூரி அபிமானத்தை வெளிப்படுத்தி வருகின்றார். இந்த ஆண்டு இப்புகழ் பூத்த பழைய மாணவரைப் பிரதம விருந்தினராக அழைத்தமையும், இவரது பாரியாரும் கொள்ளுப்பிட்டி மெதடிஸ் கல்லூரி பழைய மாணவியுமாகிய திருமதி. திசேரா அவர்கள் பரிசில் வழங்க உள்ளமையும் சிறப்புக்குரியவை ஆகும்.

இன்றைய விழாவில் நிறுவுநர் நினைவுப் பேருரையை ஆற்றுவதற்கு வருகை தந்துள்ள திரு.கிட்டினர் பாலசுப்பிரமணியம் அவர்கள் கந்தரோடையைச் சேர்ந்தவர். மலேசியாவிற் பிறந்து கந்தரோடையில் வாழ்ந்த இவர் எங்கள் கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவன். எமது கல்லூரியில் நீண்ட காலம் கற்றுப் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு விவசாய பீடத்தில் சிறப்புப் பட்டம் பெற்றவர். இலங்கையில் அரச பதவி வகித்த பின் அமெரிக்க நாட்டுக்குச் சென்று கணக்கியல் துறையில் பட்டம் பெற்று அமெரிக்கா புளோரிடா மாநிலத்தில் சிறந்ததொரு கணக் காய்வு நிறுவனத்தை நடத்தி வருகின்றார். எங்கள் கல்லூரியின் மீது கொண்ட அபிமானத்தால் தனது சகோதரன், சகோதரி குடும்பம் இணைந்தும் பாடசாலையின் நீண்ட சுற்று மதிலைக் கட்டுவித்துத் தந்த பெருமை இவரைச் சாரும். அமெரிக்காவில் ஒரு பழைய மாணவர் சங்கத்தைத் தோற்று வித்துக் கல்லூரிக்கு உதவி வரும் இவர் இவ்வாண்டு பரிசளிப்பு விழாவில் நேரடியாகப் பங்கு கொள்வது எமக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது. கந்தையா உபாத்தியாயரை நேரிற் கண்டவர் என்ற வகையில் அவரது நினைவுப் பேருரையை ஆற்றுவது சிறப்புக்குரியது.

வாழ்த்துரை வழங்க வருகை தந்த உடுவிற் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.செ.குபேரநாதன் சிறந்த சேவையாளர். கல்விச் சிந்தனை மிக்கவர். நீண்ட காலம் அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராகச் சேவை செய்து வருபவர். இலங்கைக் கல்வி நிருவாக சேவையில் இணைந்துள்ள இவர் எமது கல்லூரி வளர்ச்சியிற் கண்ணுங் கருத்துமாக இருப்பவர்.

எமது கல்லூரி ஸ்தாபகர் குடும்பத்தைச் சேர்ந்த திருமதி. சரஸ்வதி தர்மலிங்கம் அம்மை யாரின் வருகையையிட்டு நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம். எம் கல்லூரியின் முன்னாள் முகாமையாளராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும், ஏழைகளின் தோழனாகவும் விளங்கிய அமரர் வி.தர்மலிங்கம் அவர்களின் பாரியார் எமது கல்லூரி வளர்ச்சிக்கு ஆண்டு தோறும் உதவி வருவது மறக்க முடியாதது.

**இசுறு பாடசாலையாகப் பிரகடனம்**

சென்ற ஆண்டு இசுறு பாடசாலையாகக் கல்வி அமைச்சி னால் தெரிவு செய்யப்பட்ட பாடசா லைகளில் எமது பாடசாலை யாழ் மாவட்டத்தில் முதலாவது இசுறு பாடசாலையாகப் பிரகடனப்படுத்தப்பட்டமை யாவரும் அறிந்ததே. அவ்வகையில் இசுறு பாடசாலை வேலைத் திட்டத்தின் கீழ் அதிபர், ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சி கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் வழங்கப்பட்டது. மேலும் கல்வி அமைச்சின் இசுறுத்திட்ட முகாமையாளர் அநுரதிசநாயக்கா 19.08.2009 இல் பாடசாலைக்கு வருகை தந்து இசுறுத் திட்ட வேலைகளை ஆரம்பித்தார். பின்பு 09.12.2009 அன்று கௌரவ கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த அவர்களும் ஏனைய அமைச்சர்

களான அநுர பிரியதர்சன யாப்பா, இசுரு திட்டப்பணிப்பாளர் பியசேன, உதவிக் கல்வி அமைச்சர் சச்சிதானந்தம், கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகள், வடமாகாணக் கல்வி அமைச்சின் செய லாளர் இ.இளங்கோவன், வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் உட்பட பலரும் வருகை தந்து இசுறுத்திட்டப் பிரகாரம் புதிய மூன்று மாடிக் கட்டிடடத்துக்கான அடிக்கல்லை நாட்டிச் சிறப்புரைகள் ஆற்றிச் சென்றனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் 35 மில்லியன் ரூபா எமது பாடசாலைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்பாக பல்வேறு கருத்த ரங்குகளில் யான் பங்குபற்றி வருகின்ற போதிலும் கட்டிட நிர்மாணப் பணி இதுவரை வடமாகாணக் கல்வி அமைச்சால் ஆரம்பிக்கப்படவில்லை. யாழ்ப்பா ணத்தில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து பாடசாலைகளிலுமே இவ் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. குறிப்பாக மிகக்கூடிய தொகையில் கட்டிட நிர்மாண வேலை செய்யக் கூடிய ஒப்பந்தக்காரர் அமையாத காரணத்தால் தாமதிக்கப் படுவதாகக் கல்வித் திணைக்களம் கூறி வருகின்றது.

இசுறு திட்டத்தின் கீழ் ஆரம்பப் பிரிவுப் பாடசாலை தனித்துவமாக இயங்க வேண்டும் என அறிவிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இசுரு திட்டப் பணிப்பாளர் திரு. W. பியசேன இசுரு திட்டப் பொறியிய லாளர் திரு.S.பாலித வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.ப.விக்னேஸ்வரன் ஆகியோர் எமது பாடசாலைக்கு வருகை தந்து கல்லூரியின் ஆரம்பப் பிரிவைப் பாடசாலையின் மேற்குப் புறமாகத் தனியாக இயங்க ஏற்பாடு செய்தனர். இரண்டாம் தவணை முதல் ஆரம்பப் பிரிவு ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாட சாலை என்ற பெயரில் புதிய பதிவு இலக்கம் பெற்றுப் புதிய நிர்வாகத்தின் கீழ் செயற்பட்டு வருகின்றது. எமது கல்லூரியிற் பகுதித் தலைவராக விளங்கிய திரு.வ.நந்தீஸ்வரன் ஸ்கந்தவரோதயா ஆரம்பப்பிரிவுப் பாடசாலையின் அதிப ராகப் பதவியேற்று நன்முறையில் நடாத்தி வருகின்றார். அதிபர் க.சிவாஜி அவர்களது காலத்தில் மிகவும் பிரயத் தனத்துடன் 11 மாணவர்களுடன் ஆரம் பிக்கப்பட்ட ஆரம்பப் பிரிவை எனது சேவைக் காலத்தில் 320 மாணவர் களுடனும் 9 ஆசிரியர்களுடனும் திரு.வ.நந்தீஸ்வரன் அவர்களிடம் ஒப்படைத்துள்ளமை பெரு மைக்குரிய விடயமாகும்.

ஆரம்பப் பிரிவுக்கான எவ்வித தள பாடங்களும் அரசாங்கம் தராத நிலையில் நாம் துணிந்து ஆரம்பப் பிரிவைக் கட்டி எழுப்பியமை பெரு மைக்குரிய விடயமாகும். எமது பாட சாலையில் இருந்து ஆரம் பப்பிரிவை நீக்காது தனித்துமாக இயங்கு வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## பதவி உயர்வு பெற்றுச் செல்லும் ஆசிரியர்கள்

**திரு.வ.நந்தீஸ்வரன் (உப அதிபர்)**

எமது கல்லூரியில் 1994 தொடக்கம் நல்லாசிரியப் பணி யாற்றி பாடசாலை யின் வளர்ச்சியில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றினார். இவர். க.பொ.த உயர்தரத்தின் வர்த்தகப் பிரிவு மாணவர் களின் பெறுபேற்றிற்காக அர்ப்பணிப் புடன் பாடுபட்டவர். பாடசாலையின் விளையாட்டுத் துறையில் இவர் ஆற்றிய பங்கு என்றும் மறக்க முடியாது. கலை,

வர்த்தக மாணவர் மன்றத்தின் பொறுப் பாசிரியராகப் பணியாற்றியதுடன் "வணிக நாதம்" மலர் வெளியிடுவதற்கு மாணவர் களுக்கு வழிகாட்டியாக விளங்கினார். க.பொ.த உயர்தர மாணவர் மன்றம் உட்பட பல பொறுப்புக்களில் பங்காற் றினார். பாடசாலையின் நிர்வாகத்தில் பகுதித் தலைவராக, உப அதிபராக சேவையாற்றிய இவர் அதிபர் தரப் போட்டியில் சித்திபெற்று 2010 ஜூன் மாதம் முதல் ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையின் அதிபராகப் பதவியுயர் வுடன் மாற்றமாகிச் சென்றுள்ளார். எமது பாடசாலை வளாகத்தில் இவரது சேவை தொடர்பாக இன்னும் அவரது பங்களிப்புத் தொடர்வதனால் எமது கல்லூரிக்கு இவரது பங்களிப்புத் தொடர்வது நமக்கு ஆறுதல் தரும் விடயமாகும். இவர் ஸ்கந்தாவின் வளர்ச்சிக்கு ஆற்றிய உன்னத சேவையை என்றும் கல்லூரி வரலாறு பேசும். இவர் எமது பாடசாலையில் இணைந்த நாள் முதல் எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்று ஆற்றிய பணிக்குக் கல்லூரிச் சமூகம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது. இவரது எதிர் காலம் சிறக்க எனது வாழ்த்துக்கள்.

**திரு.இ.கணேசானந்தன்**

க.பொ.த உயர்தர வர்த்தகப் பிரி விற்கும் இடைநிலைப் பிரிவிற் கும் அரிய சேவையை ஆற்றிய இவர் பாட சாலைத் தர உள்ளீடு தொடர்பான பொறுப் பாசிரியராக விளங்கிதுடன் சமூகக்கல்வி மன்றம், கலை, வர்த்தக மன்றம், சுகாதார மன்றம் ஆகியவற்றின் பொறுப்பாசி ரியராகவும் அரும்பணி ஆற்றியவர். பொது அறிவு விடயங்களைப் பிரார்த் தனைக் கூட்டத்தில் எடுத்துரைப்பதில் மிகவும் வல்லவராக விளங்கினார். அதிபர் தரப் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று 2010 ஜூன் மாதம் முதல் தொல்புரம் விக்கினேஸ்வராக் கல்லூரியின் அதிப ராகப் பொறுப்பேற்றுள்ளார். எமது கல்லூரி வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பங்களிப்பிற்கு யாம் என்றும் நன்றியு டையோம்.

## இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்கள்

**திரு. சி. சிவஞானராஜா**

எமது பாடசாலையில் கடந்த 21 வருடங்களாக உன்னத பணியா ற்றி பலரது நன்மதிப்பைப் பெற்றவர். இசைத் துறை ஆசிரியராக விளங் கிய இவர் கணீரென்ற குரலில் அற்புதமாகப் பாடி எமது கல்லூரி அரங்கத்தைச் சிறப்பித்தவர். பல்வேறு தடவை தேசிய மட்டம் வரை மாணவர்களைப் பயிற்றுவித்து வெற்றி காண உழைத்தவர். பாடசாலையின் நாளாந்த பிரார்த்தனைக் கூட்டம் முதல் சகல விழாக்களிலும் இவரது அர்ப்பணிப்பு மிக்க சேவையை மறக்க முடியாது. தமிழ் எழுத்து இலக்கிய வளர்ச்சியிலும் மிகவும் ஆர்வம் கொண்ட இவர் பல சஞ்சிகைப் போட்டிகளில் மாணவர்கள் வெற்றிபெற உழைத்தவர். பாடசாலையின் செய்தி மடல் வெளியீட்டுக்குப் பொறுப்பாசி ரியராகவும் விளங்கினார். பாடசாலை அபிவிருத்திச் சங்கம், நுண்கலை மன்றம், தமிழ் மன்றம், இந்து மன்றம் போன்ற அனைத்து மன்றங்களிலும் இவரது சேவை வரலாற்றுப் பதிவுக்குரியவை. பாடசாலையில் அமைந்துள்ள ஸ்கந்தன் ஆலயத் திருப்பணியில் இவர் ஆற்றிய உன்னதத் தொண்டு மறக்க முடியாதது. பகுதித்தலைவராகச் சிறந்த சேவை யாற்றிப் பின் உப அதிபராக விளங்கிய இவர் தனது சொந்த விருப்பத்தின் பிரகாரம் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலைக்கு 2010 ஏப்ரல் முதல் மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். கல்லூரி

யின் விருத்திக்காக இரு சகாப்தங் களுக்கு மேல் உழைத்த இவரது சேவையை நாம் என்றும் நன்றியோடு வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம். எமது கல்லூரி ஸ்தாபகர் துதிப்பாடல் முதல் பல பாடல் களை இயற்றி இசை அமைத்த பெருமை இவரையே சாரும். இவரது எதிர்காலம் சிறக்க ஸ்கந்தரைப் பிரார்த்தித்து நன்றி களைச் சமர்ப்பிக்கின்றேன்.

**திருமதி.இராஜசௌந்தரி விஜயகுமார்**

எமது கல்லூரியில் 1998 முதல் கணித பாட ஆசிரியராகச் சிறந்த சேவை யாற்றிய இவர் ஏப்ரல் 2010 முதல் சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தி யாலயத்திற்கு மாற்றலாகிச் சென் றுள்ளார். மிகச் சிறந்த ஆளுமை மிக்க ஆசிரியராகவும் பாடசாலை இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் மிகுந்த அக்கறை கொண்ட ஆசிரியராகவும் இவர் விளங்கினார். விளையாட்டுத் துறையின் வளர்ச்சியில் இவர் ஆற்றிய ஆற்றிய சேவை என்றும் நன்றிக் குரியது. உலக உணவுத் திட்டத்தால் நடைமுறைப் படுத்தும் உணவுக் குழுவில் முக்கிய பணியாற்றிய இவர் கல்லூரி நிர்வாகச் செயற்பாடுகளுக்குப் பெரிதும் உதவியவர். பாடசாலைத் தரவுகளைப் பேணுவதில் மிகவும் வல்லவராக விளங்கியவர். இவரது அர்ப்பணிப்பு மிக்க சேவையை நாம் நன்றியோடு வாழ்த் துகின்றோம்.

**திருமதி.சி.இராஜமனோகரன்**

திருமதி.சி.இராஜமனோகரன் ஆசிரியரும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். இவரது பணி மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றேன்.

## திருமண வாழ்வில் இணைந்தோர்

எமது கல்லூரி ஆங்கில ஆசிரியர் திருமதி.மீனா உமாசுதன் இவ்வாண்டு திருமண வாழ்வில் இணைந்தார். இவர்கள் ஆல் போல் தளைத்து அறுகு போல் வேரூன்றி வாழ்க என வாழ்த்து கின்றேன்.

## வரவேற்கின்றோம்

எமது ஆசிரிய குழாத்தில் புதிதாக இணைந்துள்ள திரு.த.தவராஜா, திரு. ம.சிவானந்தன் திருமதி.பா.சகாயநேசன், திருமதி. வி. தமிழ்ச்செல்வி, முகிழ்நிலை ஆசிரியர்களான செல்வி.T.சாலினி, செல்வி. மு. காயத்திரி, திரு.ஆ.தனுசாந், திரு.சு.சுதன்ராஜ் ஆகியோரையும் வர வேற்கின்றோம்.

## ஸ்கந்தாவின் துணை ஆளணியினர்

**திருமதி.வானதி பரமேஸ்வரன்**

எமது கல்லூரியின் நூலக மேம்பாட் டிற்கு நூலகரான இவரது பங்களிப்புச் சிறப்பாக அமைந்துள்ளது.

**திரு.ந.கருணைதாசன்**

நூலக உதவியாளராகிய இவர் நூலகத்தைப் பேணிப் பாதுகாத்து வரு கின்றார்.

**திரு. க. பிரதாபன்**

ஆய்வுகூட உதவியாளராக விளங்கும் இவர் பாடசாலையின் புறச் செயற்பாடு களுக்கு மிகவும் உதவி புரிந்து வருகிறார்.

**திரு. பொ. ஆதித்தன்**

எமது கல்லூரி அலுவலக உதவியாள ராக விளங்கும் இவர் ஆற்றிவரும் சேவை போற்றுதற் குரியது. கல்லூரி உடைமைகளை மிகுந்த ஆர்வத்துடன் காத்து வரும் இவரது அளப்பரிய சேவையை மிகவும் பாராட்டுகின்றேன்.

**திரு. இ. ஜெகராஜ்**

மானிப்பாய் மகளிர் கல்லூரியிலிருந்து

இங்கு மாற்றம் பெற்று வந்துள்ள பாட சாலைப் பணியாளர் திரு. இ. ஜெகராஜ் அவர்கள் சிறந்த பணியாற்றி வருகின்றார்.

**திரு. ஜீ. ஜீவராஜா**

கொழும்பு ஸ்கந்தா நலன்புரிச் சங்கத்தின் உதவியில் இவர் பணியாற்றி வருகிறார். மைதான, பூந்தோட்ட பரா மரிப்பாளரான இவரின் சேவை சிறப்புறு வதாக.

**திரு. சு.ஜெயக்குமார்**

இரவுக் காவலாளியாக சிறந்த சேவை யாற்றி வரும் இவரின் சேவை மிகவும் பாராட்டுக்கு ரியதாகும்.

## அஞ்சலிக்குரியோர்

*சமீப காலத்தில் இறைவனடி சேர்ந்த ஸ்கந்தா அன்னையின் வளர்ச்சிக்கு உதவிய அமரர்கள்:*

**திரு. எஸ்.கே. துரைராஜா**

பாடசாலையில் உயர்தர வகுப்பு க்களில் பௌதீகவியல் பாடத்தின் வளர்ச்சிக்குப் பெரும்பாடுபட்டவர். அதிக மான மாணவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியற்பீடம், மருத்துவபீடம் என்பவற்றிற்குச் செல்ல மிகவும் உறுதுணை புரிந்தவர். கண் பார்வை இழந்த நிலையிலும் வகுப்பறைக் கற்பித்தலைத் திறம்பட ஆற்றியவர். லீவு கால வகுப்புக்களை நடாத்தி மாணவர் களை பரீட்சைக்குத் தயார்ப்படுத்தியவர். பாடசாலை நிர்வாகத்தினருக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கி கல்லூரியை உயர் நிலைக்குக் கொண்டுவந்தவர். அன்னாரை கனடா சென்ற வேளை நேரில் சந்திக்கும் பேறு எனக்குக் கிடைத்தது.

**திரு. சிவசுப்பிரமணியம்**
(மணியம் மாஸ்ரர்)

பாடசாலையில் உயர்தர வகுப்பில் பௌதீகவியல் பாடத்தி னைத் திறம்படக் கற்பித்தவர். பாடசாலை நேர சூசிகளைத் தயாரித்து வழங்குதல், நிர்வாகக் கடமைகள், பாடசாலைப் பரிசளிப்பு விழாக்கள் போன்றவற்றில் பெரும் பணியாற்றியவர். 1968 இல் பாடசாலை யில் நடைபெற்ற மாபெரும் கல்விக் கண்காட்சியில் பூரண பங்களிப்பை ஆற்றியவர்.

**திரு.ச.சச்சிதானந்தன்**

எமது கல்லூரியின் சிறந்த உதை பந்தாட்ட வீரரான இவர் 1958 இல் அகில இலங்கை ரீதியில் பாடசாலை ரீதியாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றி கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவர். பின்பு கல்லூரியின் உதைபந்தாட்டக்குழு பயிற்றுநராக கடமை யாற்றியவர். கொழும்பு - ஸ்கந்தா பழைய மாணவர் சங்கத்தின் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்துக் கல்லூரிக் குப் பாரிய உதவிகளைப் பெற்றுக் கொடுத்தவர்.

**திரு. குமாரவேல்**

கல்லூரியின் முன்னாள் ஆங்கில ஆசிரியரான இவர் பாடசாலையின் மேல் அதிக பற்றுவைத்து கடமையாற்றியவர். ஓய்வு காலத்திலும் பாடசாலைக்கு வருகை தந்து கலந்துரையாடல்களை மேற்கொண் டவர்.

**செல்வி.இ.சியாமளா**

எமது கல்லூரியின் பழைய மாணவி யான இவர் எமது கல்லூரி யின் முன்னாள் பிரதி அதிபர் திருமதி.வி.இலட்சுமணனின் ஏக புதல்வியாவார். யாழ் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை விரிவுரையா ளராக பணியாற்றியவர். தனது இளம் வயதில் திடீரென நோய்வாய் ப்பட்டு இறைவனடி சேர்ந்துள்ளார்.

மேற்படி அனைவருக்கும் எனது அஞ்சலியைச் செலுத்துவதுடன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

## கல்லூரிக்குப் புகழ்சேர்க்கும் மன்றங்கள்

இந்துமாமன்றம், கிறிஸ்தவ மன்றம், கணித விஞ்ஞான மன்றம், சமூகவிஞ்ஞான மன்றம், உயர்தர விஞ்ஞான மன்றம், உயர்தர மாணவர் மன்றம், கலை வர்த்தக மன்றம், ஆங்கில மன்றம், கவின்கலை மன்றம், தமிழ் மன்றம், மனைப்பொரு ளியல் மன்றம், சுகாதார மன்றம், கட்டாயக் கல்விக்குழு, ஆசிரியர் கழகம் ஆகியன சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன.

### இந்துமாமன்றம்

இவ்வாண்டும் இந்துமாமன்றம் பல ஆன்மீக வழிகாட்டற் செயற்பாடு களைப் புரிந்து வருகின்றது. வெள்ளி தோறும் பிரார்த்தனைகள், நற்சிந்தனைகள், நாயன்மார்களின் குருபூசை, வாணி விழா, நகுலேஸ்வர வருடாந்த மகோற்சவ உபயம், திருக்கேதீஸ்வர வருடாந்த மௌன உற்சவம், ஸ்கந்தன் கோவில் சங்காபிஷேகம், கந்தசஷ்டி விரத காலப் பகுதியில் கவச பாராயணம் போன்ற நிகழ்வுகளை பூரண ஈடுபாடுடன் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் திருக்கேதீஸ்வரத்திற்கு மாணவர்களைப் புனித யாத்திரை அழைத்து சென்றுள்ளமை சமய ஈடுபாட்டை அதிகரிக்கச் செய் துள்ளது.

### கிறிஸ்தவ மன்றம்

சிறப்பாக செயற்பட்டு வரும் கிறிஸ்தவ மன்றம் வெள்ளிக்கிழமை களில் தியான வழிபாட்டை நடத்தி வருகின்றது. புனித வாரம் அனுஷ்டிக்கப்பட்டு ஏழு வார்த்தை கள் அருட் தந்தை தேவகுமாரால் ஆற்றப் பட்டமை குறிப்பிடத்தக்கது. மறைக் கல்விப்பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள் நடாத்திப் பரீட்சையும் நடைபெற்றது.

### விஞ்ஞான, கணித மன்றம்

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் விஞ்ஞான, கணித மன்றம் சிறப்பாக இயங்கி வருகின்றது. பாடசாலை ரீதியாக விஞ்ஞான, கணித பொது அறிவுப் போட்டிகளை நடாத்தி கோட்ட, வலய, மாவட்ட மட்டங்களில் வெற்றியீட்டி உள்ளது. செல்வன். சி.ஆரமுதன், செல்வி. செ.மிதுஷனா ஆகியோர் மாகாண மட்ட விஞ்ஞான, கணித பொது அறிவுப் போட்டியில் பங்குபற்றத் தகுதி பெற் றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சமூக விஞ்ஞான மன்றம்

இம்மன்றம் மாதமிருமுறை கூடி சமூக விஞ்ஞான பாடம் தொடர்பான அறிவியல் சிந்தனை கள், புதிர்கள் என்பவற்றை நடாத்தி வருகின்றது. மாணவர்களைப் போட்டிகளுக்குத் தயார்ப்படுத்தியும் பரீட்சைக்கு அனுப்பியும் வருகின்றது. கோட்ட, வலய மட்டங்களில் பரிசில்களையும் பெற்றுள்ளது.

### உயர்தர விஞ்ஞான மன்றம்

இம்மன்றம் மாணவர்களைக் கொண்டு காலைக் கூட்டங்களை நடாத்தி அறிவியல் சிந்தனை களைக் கூறி வருகின்றது. உயிர்ப்பல்வகை மைத்தினம், உலக குடிநீர்த்தினம், சுற்றுச்சூழல் தினங்களைச் சிறப்பாகக் கொண் டாடி வருகின்றது. மெல்லக்கற்கும் மாணவர்களின் செயற் பாட்டிற்கும் உதவி வருகின்றது. யாழ் மாவட்ட விஞ்ஞான சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் நடைபெறும் போட்டி யில் ச.சக்திபாலன் நான்காம் இடத்தைப் பெற்றுள்ளார். மேலும் ஒறேற்றர் ஞாப கார்த்தப் பேருரையில் "விஞ்ஞானத்தில்

தூக்கம் பற்றிய சிந்தனை" என்ற தலைப்பில் சொற்பொழிவு இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

**உயர்தர மாணவர் மன்றம்**

இம்மன்றம் மாணவர்களது ஆற்றல் களை வெளிக்கொண்டு வரும் வகையில் மன்றக் கூட்டங்களை நடாத்திச் செயற் பட்டு வருகின்றது. மாணவர்களிடையே மன ஒருமைப்பாட்டை வளர்க்கும் முக மாக உளவள ஆலோசகர் திருமதி. பகீரதி கணேசதுரை அவர்களை அழைத்து கருத் துரை வழங்கியமை குறிப்பிடத் தக்கது. பரீட்சை வலுவூட்டற் கருத்தரங்கினை நடத்தி அயற் பாடசாலைகளையும் பயன் பெற வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**கவின் கலை மன்றம்**

சிறப்பாகச் செயற்பட்டு வரும் கவின் கலை மன்றம் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் நாடகங்களுக்கு மாணவர் களை அழைத்துச் சென்று நாடகம் பற்றிய அறிவை மேம்படுத்தி வருகின்றது. குறிப்பாக ஓதெல்லோ, சரந்தாஸ் போன்ற நாடகங்களுக்கு அழைத்து சென்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் சித்திரப் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார் செய்து வெற்றி பெற்றமையும் சிறப்பாகும்.

**கலை, வர்த்தக மன்றம்**

கலை, வர்த்தக மன்றம் சிறப்பாக இயங்கி வருகின்றது. மாணவர்களின் பல்துறை ஆற்றல்களை வளர்த்து வருகின்றது.

**ஆங்கில மன்றம்**

இம்மன்றம் மாணவர்களின் ஆங்கில மொழி அபிவிருத்திக்குப் பல்வேறு வழி களிலும் ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகின்றது. மாணவர்களின் பல்வேறு திறமைகளை வெளிக்கொணர பல சந்தர்ப் பங்களை வழங்கி கல்வி அமைச்சின் ஆங்கில தினப்போட்டி, CIMA spell master competition, பலாலி ஆசிரிய கலாசாலை ஆங்கில மன்றம் நடத்தும் போட்டி போன்ற பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி கோட்ட, வலய, மாவட்ட, மாகாண மட்டங்களில் இடம் பிடித்துப் பெருமை சேர்க்கின்றது.

மேலும் மேதகு ஜனாதிபதி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் English As a life skill செயற்பாட்டின் ஊடாக பிரதி வியாழன் தோறும் காலைக்கூட்டம் ஆங்கில மொழியில் நடைபெற்று மாணவர்களின் ஆங்கில மொழிப் பேச்சாற்றலை மேம் படுத்த உதவுகின்றது.

**தமிழ் மன்றம்**

எமது கல்லூரித் தமிழ் மன்றம் சிறப் பாகச் செயற்பட்டு வருகின்றது. மாணவர் களின் தமிழறிவை விருத்தி செய்யும் வகையில் கூட்டங்களை நடத்தி வருவதுடன் மாணவர்களின் கவிதை, சிறுகதை ஆற்றலகளையும் விருத்தி செய்கின்றது. செல்வன். வி. திவாகரன் தமிழ் மொழித் தினப்போட்டியில் மாகாண மட்டத்தில் (சிறுகதை ஆக்கம்) முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். போதைப் பொருள் ஒழிப்புத் தொடர்பாக அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற போட்டியில் செல்வன்.வி. சுலக்ஷன் தேசிய மட்டத்தில் (கவிதை) இரண்டாம் இடம்பெற்று எமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார். சிறுவர், முதியோர் தினப் போட்டிகளிலும் எமது மாணவர்கள் பரிசில்கள் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**மனைப்பொருளியல் மன்றம்**

இம்மன்றத்தால் மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. புத்தாக்கப் போட்டிகள், குறு வினாப் போட்டிகள் என்பவற்றுக்குத் தயார்ப்

படுத்தல் போன்ற செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

**சுகாதார மன்றம்**

எமது கல்லூரிச் சுகாதார மன்றம் மிகவும் வினைத்திறனுடன் இயங்கி வருகின்றது. மாணவர்களின் உடல், உள, சமூக சுகாதாரத்தில் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. டெங்கு விழிப்புணர்வு தொடர்பான கருத்தரங்குகள், தெருக்கூத்து, நாடகங்கள், பாடசாலைச் சுற்றுச்சூழல் சிரமதானம் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. போசாக்கு வாரம், காசநோய் தினம், சுற்றுச் சூழல் பாதுகாப்புத் தினம், உலகை கை கழுவுதல் தினம் என்பன அனுஷ்டிக்கப்பட்டன. உடுவில் பிரதேச பொது சுகாதார உத்தியோத்தர்களின் உதவியுடன் மாணவர் களின் உடல் திணிவுச் சுட்டி கணிக்கப்பட்டு போசாக்குக் குறைவான மாணவர் இனங் காணப்பட்டு வழிகாட்டப்பட்டு வருகின்றனர்.

**கட்டாயக் கல்வி**

கட்டாயக் கல்விக் குழுவானது மாணவர்களைக் கிரமமாகப் பாடசாலைக்குச் சமூக மளிக்கச் செய்வதில் வெற்றி கண்டு ள்ளது. பெற்றோர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வதன் மூலம் மாணவர் வரவு, கல்வி மேம்பாடு என்பன உயர்வடைந்து வருகின்றன. கட்டாயக் கல்வி மூலம் மாணவர் மேம்பாடடைய பெற்றோர் களதும், சமூகத்தினதும் ஒத்துழைப்பு எம்மால் வேண்டப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

**பெண் சாரணியம்**

குடாநாட்டு இடப்பெயர்வினால் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட பெண் சாரணியத்துறை வெற்றிடமானது நீண்ட இடைவெளிக்குப் பின் 2009 ஆம் ஆண்டு மீளவும் நிரப்பப்பட்டு புத்துயிர் அளிக்கப்பட்ட ஒரு நிகழ்வாக 29.10.2009 அன்று இடம் பெற்ற சின்னம் சின்னம் சூட்டும் வைபவம் அமைந்தது. இத்தினத்தில் 19 மாணவிகள் சத்தியப் பிரமாணத்தை மேற்கொண்டு தம்மைப் பெண் சாரணியர்களாக சின்னம் சூட்டிக் கொண்டனர். இந்நிகழ்வின் பின் இவர்கள் தமது செயற்பாடுகளை கல்லூரி மட்டத்தில் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**வீதி ஒழுங்குக் குழு**

கடந்த பல வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இவ்வமைப்பு செயற்பட முடியாத நிலை காணப்பட்டது. 2010 ஆம் ஆண்டு ஆனி மாதம் மீண்டும் சுன்னாகம் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினரின் உதவியுடன் புனரமைக் கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. இவர்களுக்கான வீதி ஒழுங்கு பயிற்சி வகுப்புக்கள் துரையப்பா விளையாட்டு அரங்கில் வைத்து வழங்கப்பட்டது.

**சாரணியம்**

எமது கல்லூரிச் சாரணர் குழுவினர் தொடர்ந்து சிறப்பாக இயங்கி வருகின்றனர். தற்போது இதன் பொறுப்பாசிரியராக திரு.அ.அன்ரன் கிறேசியன் அவர்கள் கடமையாற்றி வருகின்றார். பேடன் பவல் தினம் வருடா வருடம் கொண்டாடப்பட்டு வருகின்றது. கல்லூரி நிகழ்வுகளில் சாரணர்களின் பங்களிப்பு போற்றுதற்குரியது.

**ஆசிரியர் கழகம்**

தலைவர் : திரு. சி. சதீஸ்
செயலாளர் : திருமதி. மீ. உமாசுதன்
பொருளாளர் : திருமதி. ம. சிறீகரன்

*பாட இணைப்பாளர் குழு :*

சைவசமயம் : திருமதி. க. தனசீலன்

தமிழ் : திருமதி. ச. ஜெகதீஸ்வரி
கணிதம் : திரு. க. ஆதித்தன்
ஆங்கிலம் :
திருமதி.நி.சிவபாலச்சந்திரன்
கிறிஸ்தவம் :
திருமதி.ம.மரியமனோகரன்
சமூகக்கல்வி : திருமதி. த. தவராஜா
விஞ்ஞானம் :
திருமதி.யோ.விமலாம்பிகைபாகன்
சுகாதாரம் : திரு. ஜெ. ஜெயமோகன்
வர்த்தகம் : திரு. இ. கணேசானந்தன்
மனைப்பொருளியல்:
செல்வி.நா.கிருஷ்ணவேணி
விவசாயம் : திரு. பா. சுதாகரன்
நாடகமும் அரங்கியலும் :
திரு. பு. கணேசராஜா
சித்திரம் :
திரு. அ. அன்ரன்கிறேசியன்
சங்கீதம் :
திருமதி. ச.ஜெயபாலசிங்கம்
நடனம் :
திருமதி.வி.தமிழ்ச்செல்வி

**மாணவ முதல்வர் சபை**

*சிரேஷ்ட மாணவ முதல்வர்*
செல்வன். க. கிஷோர்
*துணை சிரேஷ்ட*
*மாணவ முதல்வர்கள்:*
செல்வன். ச. செந்தூரன்
செல்வி. செ. சங்கீதா

**இந்துமாமன்றம் :**

*பொறுப்பாசிரியர்கள் :*
திருமதி.சா.நாகராஜா
திருமதி.த.கயலினி
திருமதி.அ.முருகதாஸ்
*செயற்குழு:*
தலைவர் : செல்வன்.த.நர்த்தனன்
செயலாளர் : செல்வன்.தே.ஜீவாகரன்
பொருளாளர்: செல்வி.க.பிருந்துவி

**கிறிஸ்தவ மன்றம் :**

*பொறுப்பாசிரியர்:*
திரு.ஜெ.ஜெயமோகன்
திரு.அ.அன்ரன் கிறேசியன்
திருமதி.றெ.ம.மரியமனோகரன்
திருமதி.டி.குயின்ரன்
திருமதி.கி.தா.இன்பராஜ்
*செயற்குழு*
தலைவர் : செல்வன்.ப.ரஜீவன்
செயலாளர் : செல்வி.க.கலைச்செல்வி
பொருளாளர்: செல்வி.கி.தியா

**கணித விஞ்ஞான மன்றம் :**

*பொறுப்பாசிரியர்கள்:*
திரு.த.தவராஜா
திரு.சி.சதீஸ்
திரு.க.ஆதித்தன்
திருமதி.யோ.விமலாம்பிகைபாகன்
திருமதி.ம.பஞ்சாட்சரலிங்கம்
*செயற்குழு*
தலைவர் : செல்வன்.அ.சுகந்தன்
செயலாளர் : செல்வன்.வ.சஞ்சீவ்ராஜ்
பொருளாளர்: செல்வி.ச.சக்திதர்சினி

**தமிழ் மன்றம் :**

*பொறுப்பாசிரியர்கள்:*
திரு.பா.மகாலிங்கசிவம்
திருமதி.ச.ஜெகதீஸ்வரி
திருமதி.அ.முருகதாஸ்
திருமதி.டி.குயின்ரன்
திரு.ப.கலையரசன்
*செயற்குழு*
தலைவர் : செல்வன்.ஆ.ஜெயப்பிரகாஷ்
செயலாளர் : செல்வி.க.சசிகலா
பொருளாளர்: செல்வி.க.பிருத்துவி

**மனைப்பொருளியல் மன்றம்**

பொறுப்பாசிரியர்:
செல்வி.நா.கிருஷ்ணவேணி
*செயற்குழு*
தலைவர் : செல்வன்.நர்த்தனன்

செயலாளர் : செல்வி.சி.தீபிகா
பொருளாளர்: செல்வி.இ.சங்கீதா

**சுகாதாரமன்றம் :**

*பொறுப்பாசிரியர்கள்:*

திருமதி.றி.தனஞ்சயன்
திருமதி.பஞ்சாட்சரலிங்கம்
திருமதி.பா.சகாயநேசன்

*செயற்குழு:*

தலைவர் : செல்வி.சா.கோபிகா
செயலாளர் : செல்வி.ச.சக்திதர்சினி
பொருளாளர்: செல்வி.சி.துளசி

**சமூக விஞ்ஞான மன்றம் :**

*பொறுப்பாசிரியர்கள்*

திருமதி.த.தவராஜா
திருமதி.சா.நாகராஜா
திருமதி.த.திருலிங்கம்
திருமதி.தா.ஜெகதீஸ்வரன்
திரு. பா. சுதாகரன்

*செயற்குழு*

தலைவர் : செல்வன்.ம.சங்கீதன்
செயலாளர் : செல்வி.சா.கோபிகா
பொருளாளர்: செல்வி.யோ.அஜித்தா

**உயர்தர விஞ்ஞான மன்றம் :**

*பொறுப்பாசிரியர்கள் :*

திரு.கு.ஐங்கரன்
திரு.ந.சிவகுமார்
திருமதி.றி.தனஞ்சயன்
திருமதி.ம.கிருபாகரன்
திருமதி.ந.அருட்செல்வம்
திருமதி.ம.சிறீகரன்

*செயற்குழு*

தலைவர் : செல்வன்.த.சாரங்கன்
செயலாளர் : செல்வி.ச.சக்திதாஜினி
பொருளாளர்: செல்வி.ம.நர்மதா

**உயர்தர மாணவர் மன்றம் :**

*பொறுப்பாசிரியர்கள்:*

திருமதி.மீ.சுப்பிரமணியம்
திரு.கு.ஐங்கரன்

*செயற்குழு*

தலைவர் : செல்வன்.த.பிரதீஸ்
செயலாளர் : செல்வி.சி.ஷாலினி
பொருளாளர்:செல்வன்.த.தேவசேனானி

**ஆங்கில மன்றம் :**

*பொறுப்பாசிரியர்கள்:*

திருமதி.நி.சிவபாலச்சந்திரன்
செல்வி.மீ.உமாசுதன்
திரு.சிவானந்தன்
திருமதி.ப.சிவானந்தன்
திருமதி.கி.தா.ஜோய் இன்பராஜ்

*செயற்குழு*

தலைவர் : செல்வி.யோ.அஜித்தா
செயலாளர் : செல்வி.க.நேர்த்திகா
பொருளாளர்: செல்வன்.அ.சுகந்தன்

**கவின் கலை மன்றம் :**

*பொறுப்பாசிரியர்:*

திரு.அ.அன்ரன் கிறேசியன்

*செயற்குழு*

தலைவர் : செல்வன்.யோ.குயின்ரன்
செயலாளர்: செல்வி.கோ.ஜெனார்த்தனி
பொருளாளர்: செல்வி.வ.மிலக்ஷிகா

**கலை வர்த்தக மன்றம் :**

*பொறுப்பாசிரியர்கள்:*

திருமதி.த.கயலினி
திருமதி.நா.ஜெகதீஸ்வரன்

*செயற்குழு*

தலைவர் : செல்வன்.மு.நிருபன்
செயலாளர் : செல்வன்.கி.பௌசியா
பொருளாளர்: செல்வி.T.தாரணன்

**பெண் சாரணியம் :**

*பொறுப்பாசிரியர்கள்:*

திருமதி.தா.ஜெகதீஸ்வரன்
திருமதி.ம.கிருபாகரன்

*செயற்குழு*

தலைவி : செல்வி.செ.சங்கீர்த்தனா
குழுத் தலைவிகள்:

செல்வி.வெ.ஐஸ்வர்யா,
செல்வி.அ.றனுசியா,
செல்வி.லோ.அபிரா,
செல்வி.செ.மிதுசனா

**சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்**

*பொறுப்பாசிரியர் :*

திரு.த.சிவகுமார்

தலைவர் : செல்வன்.சி.மதனராஜ்
செயலாளர் : செல்வன்.தே.ஜீவாகரன்
பொருளாளர்: செல்வன்.உ.பிரதீப்

**சாரணர் இயக்கம்:**

பொறுப்பாசிரியர் :

திரு.அ.அன்ரன் கிறேசியன்

தலைவர் : செல்வன்.கு.நிகேதன்
செயலாளர் : செல்வன்.கி.கதிர்ச்செல்வன்
பொருளாளர்: செல்வன்.வி.ஜீவிசன்

**வீதிப்போக்குவரத்து ஒழுங்குக்குழு:**

*பொறுப்பாசிரியர்:*

திருமதி.றி.தனஞ்சயன்

தலைவர் : செல்வன்.இ.கவிகரன்
செயலாளர் : செல்வன்.யோ.சஜீவ்
பொருளாளர்: செல்வன்.தே.தர்சன்

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

தலைவர் : அதிபர்
செயலாளர் : திரு.சோதி மார்க்கண்டு
பொருளாளர்: திரு.த.சிவகுமார்

இச்சங்கம் பாடசாலை அபிவிருத்தி தொடர்பான செயற் திட்டங்களுக்கு தொடர்ந்து பணியாற்றி வருகின்றது. தற்போது பாடசாலை மாணவர்களின் உலக உணவுத்திட்ட சமயலறை அமைக்கும் பணியில் மேற்படி சபை ஈடுபட்டு வருகின்றது.

**பழைய மாணவர் சங்கங்கள்:**

**ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம்**

**தாய்ச் சங்கம்**

தலைவர் : திரு.சு.பரமநாதன்
செயலாளர் : திரு.த.தேவராஜன்
பொருளாளர்: திரு.S.திருப்பரன்

இச்சங்கம் எமது கல்லூரியில் மிகவும் அக்கறையோடு செயற்பட்டு வருகின்றது. டெங்கு ஒழிப்புத் தொடர்பாகப் பாடசாலைச் சுற்றாடலைப் பாதுகாப்பதில் இச் சங்கம் பெரும்பங்கு வகித்தது. குறிப்பாக மாணவரது மல, சல கூடத்தொகுதியை புணர்நிர்மாணம் செய்வதற்கு இவ் ஆண்டு இச் சங்கம் பெரும் உதவி புரிந்தது.

சங்கத்தலைவர் திரு.சு.பரமநாதன் சமீபத்தில் அமெரிக்கா சென்று பழைய மாணவர் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு வந்துள்ளார். எதிர்காலத்தில் கல்லூரியின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிரந்தர திட்டத்தை உருவாக்க மேற்படி சங்கம் திட்டமிட்டு வருகின்றது. பழைய மாணவர் ஆண்டுதோறும் கல்லூரியில் ஒன்று கூடி மகிழ்வதற்காக சிறப்பு நிகழ்வை நடாத்த திட்டமிட்டுள்ளனர்.

**பாடசாலை அபிவிருத்திக்குழு**

எமது கல்லூரியில் (PSI) கல்வி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கல்வி அமைச்சின் சிபார்சுக்கு அமைய பாடசாலை அபிவிருத்திக் குழு இவ்வாண்டு முதல் செயற்பட ஆரம்பித்துள்ளது. இக்குழு கல்லூரியின் கல்விச் செயற்பாட்டை முகாமைத்துவம் செய்யும்.

தலைவர் : திரு.ஆறு.திருமுருகன் (அதிபர்)
செயலாளர் : திரு.ஆ.சி.கணேசவேல் (J.P)
பொருளாளர்: திருமதி.கௌ.யசிதரன்

**கொழும்பு ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம்:**

தலைவர் : திரு.S.பத்மநாதன்
செயலாளர் : திரு.P.சுந்தரலிங்கம்
பொருளாளர்: திரு.V.வாசவன்

கொழும்பில் வசிக்கும் எமது கல்லூரி மைந்தர்கள் அங்கம் வகிக்கும் இச்சங்கம் நன் முறையில் இயங்கிவருகின்றது. எமது கல்லூரி மீது மிகவும் அக்கறை கொண்ட இச் சங்கம் வறுமைக்குட்பட்ட சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாண வர்களுக்கு ஒறேற்றர் நினைவுப் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் நிதியுத வியும், எமது ஆரம்பப் பாடசாலைப் பிரிவு மாண வர்களில் கணிதம், ஆங்கிலம், தமிழ் போன்ற பாடங்களில் அதிக புள்ளி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் திட்டம் போன்றவற்றை நடைமுறைப்படுத்தி பெரிய உதவிகளை வழங்கி வருகின்றது. மேலும் ஆசிரியர்களின் பிரிவு குறித்த நினைவு வைபவங்களை நடாத்தித் தங்கள் நன்றியைத் தெரிவித்து வருவதும், விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவதும் அதற்கு அமையப் பல்வேறு விளையாட்டு உபகர ணங்களை அன்பளிப்புச் செய்தும் வரு கின்றனர். இசுறு பாடசாலை அங்குரார் பண வைபவத்தில் சங்கத் தலைவர் திரு.மகேந்திரன் அவர்கள் பங்குபற்றிய துடன் விழாச் சிறக்கத் தனது பங்களிப்பை யும் வழங்கி ஊக்கப்படுத்தினார். காலஞ் சென்ற கணித, பௌதீக விற்பன்னர் திரு.T.சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு நினைவு வைபவத்தை சிறப்பாக நடாத்தி தமது நன்றிகளையும் சமர்ப்பித்தனர்.

**ஸ்கந்தா நலன்புரிச்சங்கம்**

தலைவர் : திரு.S.ஸ்ரீஸ்கந்தராாஜா
செயலாளர் : திரு.சு.லோகேந்திரம்
பொருளாளர் : திரு.ஆ.ஜெயப்பிரகாஷ்

மேற்படி சங்கம் கல்லூரியின் வளர்ச்சி யில் மிகுந்த அக்கறையுடன் தன் பங்க ளிப்பைச் செய்து வருகின்றது. சங்கத்தின் தலைவராக விளங்கிய திரு.பா.ஸ்ரீரட்ணம் வழமைபோல் பாடசாலைக்குத் தேவை யான சான்றிதழ்கள், கடித உறைகள், போன்றவற்றை இம் முறையும் அன் பளிப்பாக வழங்கினார். சங்கத்தின் சார்பில் திரு. சோ.ஸ்ரீஸ்கந்தராஜா (பொறி யியலாளர்) அவர்கள் பக்ஸ் (FAX) இயந்திரம் ஒன்றை பாடசாலைக்கு நேரில் கொண்டு வந்து தந்தார். மேலும் அவர் வறுமைக்குட்பட்ட மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதியையும் வழங்கினார்.

**ஸ்கந்தா கனடா பழைய மாணவர் சங்கம்:**

போஷகர் : Dr.G.நடராஜா – நடா
தலைவர் : திருமதி.விமலகுமாரி மகேந்திரன்
செயலாளர் : திரு.மு.மகேந்திரலிங்கம்
பொருளாளர் : திரு.T.சந்திரகுமார்

இச்சங்கம் கல்லூரியின் வளர்ச்சி க்கு ஆற்றும் தொண்டினை விபரிக்க முடியாது. பாடசாலையின் பல்வேறு அபிவிருத்திக்கு தொடர்ந்தும் உதவிவருகின்றது. ஆண்டு தோறும் பரிசளிப்பு விழாவுக்கு உரிய பங்களிப்பினை அனுப்பி வைக்கும் மேற்படி சங்கம் இவ்வாண்டு பரிசளிப்பு விழாவுக்கு ரூபா ஒரு இலட்சத்து இரு பத்தையாயிரம் வழங்கி ஊக்கப்படுத்தி யுள்ளது. மாணவர்களின் எதிர்கால வாழ்வுக்காக புலமைப் பரிசில் திட்டத்தை உருவாக்கி தவறாது வழங்கி வருவது பாராட்டுக்குரியது. சட்டத்தரணி கைலை நாதன், Dr.செல்லையா, சந்திரகாந்தன் வழங்கும் புலமை நிதியம் மாணவருக்கு நேரடியாக வழங்கப்பட்டு வருகின்றது. ஆசிரியர் திரு.க.ஆதித்தன் இதற்கான பொறுப்பைச் செய்து வருகிறார். இச்சங் கத்தின் போஷகர் Dr.நடராஜா எம்மோடு

வாரந்தோறும் தொடர்பு கொள்வார். இவ்வாண்டு மேற்படி சங்கத்தின் இருப தாவது ஆண்டு பூர்த்தி விழா கனடாவில் மிகவும் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்து வருவது பாராட்டுக்குரியது. இச் சங்கத்தின் முக்கிய உறுப்பினர் திரு. அன்ரன் சந்திரசேகரா சென்ற மாதம் பாடசாலைக்கு நேரில் வருகை தந்து உதைபந்தாட்ட அணிக்காக சப்பாத் துக்கள், வலைகள் அன்பளிப்பாக வழங்கி மாணவர்களை உற்சாகப்படுத்திச் சென்றார்.

**ஸ்கந்தா இலண்டன் பழைய மாணவர் சங்கம்**

தலைவர் : பேராசிரியர் Dr.P.புவனராஜன்
செயலாளர் : Dr.வனஜா லோகேந்திரன்
பொருளாளர்: திரு.ஜெரால்ட்

இலண்டனில் வாழும் ஸ்கந்தா மைந் தர்கள் இச்சங்கத்தை ஸ்தாபித்து நன் முறையில் செயற்படுத்தி வருகிறார்கள். ஆண்டு தோறும் ஒன்று கூடல் நடாத்தி வருகிறார்கள். எதிர்காலத்தில் கல்லூரி யின் வளர்ச்சிக்காக பல்வேறு திட் டங்களை நிலைநாட்ட ஆவலாக உள்ளனர்.

**ஸ்கந்தா அமெரிக்கா பழைய மாணவர் சங்கம்**

தலைவர் : திரு.கி.பாலசுப்பிரமணியம்
செயலாளர் : திருமதி.தேவராஜா
பொருளாளர் : Dr.ச.தேவகாந்தன்

இச்சங்கம் கல்லூரியின் வளர்ச்சியில் என்றும் ஆர்வத்துடன் விளங்குகின்றது. சங்கத்தலைவர் பாடசாலை மாணவர்கள் தொடர்பான போட்டிகள் விளையாட்டு நிகழ்வுகளுக்காக உதவி வருகிறார். பாடசாலைகளின் தேவையை விபரமாக அறிய இவ்வாண்டு இங்கு நேரே வருகை தந்துள்ளமை சிறப்புக்குரியது.

**எனது நோக்கில்**

எமது சமூகம் பல்வேறு இன்னல் களைச் சந்தித்து மிகுந்த துயருடன் வாழும் இக்காலப் பகுதியில் நாம் சமூ கத்துக்கு ஆற்ற வேண்டிய சேவை எல்லை யற்று உள்ளமை குறிப்பிடத்தக்கது. கல்வி யால் பெருமை பெற்ற இனம் இன்று கல்வி நிலையிலும் வீழ்ந்து போயுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் போரின் தாக்கமும், இடப்பெயர்வுமாகும். இந் நிலையில் மீளவும் கல்வி வளத்தைக் கட்டிக் காப்பதற்கு அர்ப்பணிப்பு மிக்க சமூகமாக இன்றைய சமூகம் நிலைப் படுத்தப்படவேண்டும். உண்மையான சமூக உறவும், சமாதனமும் நாட்டில் உருவாக வேண்டும். பாதிக்கப்பட்ட பச்சிளம் பாலர்களின் எதிர்காலம் பற்றி அனைவரும் கருணையோடு சிந்திக் வேண்டும். கல்விச் செயற்பாடுகளில் காலதாமதம் இருத்தல் கூடாது. குறிப்பாக வடக்கில் கல்வி தொடர்பான வள அபி விருத்தி கால தாமதங்களைத் தவிர்ப் பதற்கு அனைத்து நிலையிலும் உள்ளவர் கள் அக்கறை கொள்ளவேண்டியது அவசியம். இசுறு வேலைத் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் ஐந்து பாட சாலைகள் தெரிவு செய்யப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டது. கடந்த ஆண்டு டிசம்பர் முதல் வாரம் அடிக்கல் நாட்டப்பட்டது. அரசாங்கம் வடக்கின் வசந்தம் திட்ட அமைப்பின் கீழ் துரித வேலையாக இசுறு பாடசாலைத் திட்டத்தை வெளியிட்டது. எனினும் இப்பணியை ஆரம்பிக்க முடிய வில்லை. கட்டட ஒப்பந்தம் வழங்கல் தொடர்பான தாமதத்தில் ஒரு வருட காலமாக இசுறு கட்டட வேலை தாமதமா கின்றது. விரைவில் இவ் வேலைத் திட்டம் ஆரம்பிக்க இத்துறை சார்ந்த அனைவரும் அக்கறைகொள்ள வேண்டும்.

## நன்றி கூறுகின்றோம்

எமது கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்கின்ற கல்லூரிச் சமூகத்திற்கும் வலயக் கல்விப்பணிப்பாள ராக விளங்கி இன்று வடமாாகணக் கல்விப் பணிப்பாளராக விளங்கும் உயர்திரு. ப.விக்னேஸ்வரன் அவர்கட்கும், இன்றைய வலயக்கல்விப் பணிப்பாளரான திரு.ஆ. இராஜேந்திரன் அவர்கட்கும், பிரதிக் கல்விப்பணிப் பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.செ.குபேர நாதன் அவர்களுக்கும், முதன்மை ஆசிரியர்கள், கணக்காளர், கல்வித் துறைசார் ஏனைய பணியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்லூரி நிர்வாகத்தில் எனக்கு முழு ஒத்துழைப்பை வழங்கிவரும் பிரதி அதிபர் திரு.சி.மகேந்திரன் அவர்கள், உப அதிபர் செல்வி.தே.சங்கரப்பிள்ளை அவர்களுக்கும், திரு.ந.பவன் அவர் களுக்கும், ஆரம்பப் பிரிவு அதிபர் திரு.வ.நந்தீஸ்வரன், பகுதித் தலை வரான திரு.த.தவராஜா அவர்களுக்கும் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கங்கள் அனைத் திற்கும் எனது நன்றிகள்.

ஆண்டு தோறும் எமது கல்லூரிப் பரிசளிப்பு விழாவிற்கு மதிய உணவு அளித்து பேருதவி புரியும் கல்லூரி ஸ்தாபகர் குடும்ப உறுப்பினரும், முன் னாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வி.தர்மலிங்கம் அவர்களின் பாரி யார் திருமதி.சரஸ்வதி தர்மலிங்கம் அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித் தாகுக.

எமது கல்லூரிப் பரிசளிப்பு விழா சிறக்கப் பல வழிகளிலும் உதவிய பழைய மாணவர்கள், அபிமானிகள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்த வைத்திய கலாநிதி W.E.வோசிங்ரன் திசேரா அவர்களுக்கும் அவர் தம் பாரியார் திருமதி. ஷிரோமி அத்த நாயக்கா திசேரா அவர்களுக்கும், சிறப்பு விருந்தினராக வருகை தந்து நிறுவுநர் நினைவுப் பேருரை ஆற்றவுள்ள திரு.கி. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு மிகவும் அரும்பணி ஆற்றிவரும் எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு,க. சிவாஜி அவர்களுக்கும் எனது மனப்பூர்வ மான நன்றிகள். மேலும் பரிசளிப்பு விழாவிற்கு எல்லா வழிகளிலும் உதவி நல்கிய கல்விச் சமூகத்திற்கும் எனது இனிய நன்றிகளைக் கூறி அமர்கின்றேன்.

நன்றி
வணக்கம்











ANDRA PRINTERS K.K.S Road, Kondavil. T.P:021-4590268